அறைவு 04 இயம் 05 Aug 29- Sept 4, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

ENGLISH FOR FOREIGN VISA
Contact 0770203201

HELLO MOBILE WORLD

122, NC Road Trincomalee
0777154663 - 0712674050

24ம் திகதி பின்னிரவில் காணாமலாக்கப்பட்ட

# தங்கருபன் எங்கே?



## வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் அடுத்தகட்டப் போராட்டத்திற்கு மக்கள் தயார்??

மீன்பிடிக்கச்சென்றவேளை சதிநடவடிக்கையால் காணாமல் ஆக்கப்பட்டுள்ள அழகராசா தங்கரூபன் என்ற இளைஞனின் நிலையினை அறிந்துகொள்வதற்காக மக்களால் நடத்தப்பட்ட போராட்டத்தின்போது, அத் தகவல்களை மூன்று நாட்களுக்குள் பெற்றுத் தருவோம் எனக் காவல்துறையினர் மற்றும் அரச அதிகாரிகள் மாகாணசபையின் தமிழ் உறுப்பினர்களுடன் இணைந்து வழங்கிய உறுதி நேற்றுடன் காற்றில் பறந்ததை......

17

# சம்பூருக்குச் சர்வதேச உதவிகள்



## சனாதிபதியின் பாதங்களுக்கு மலராபிசேகம்

சம்பூர் மக்களின் விடுவிக்கப்பட்டுள்ள எண்ணூற்றுப் பதினெட்டு ஏக்கர்கள் காணிகளுக்கான மீள்குடியேற்ற அனுமதிப் பத்திரங்களை வழங்கி வைக்க வருகை தந்திருந்த சனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேனவின் கால்களுக்கு பூக்களால் அபிசேகம் செய்து மக்கள் சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பூரில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு திருகோணமலை மாவட்ட நாடாளு- மன்ற உறுப்பினர் சம்பந்தன் மற்றும் முன்னாள் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இவ்வாறு மீள்குடியேற்ற அனுமதிப் பத்திரங்களைப்

17






அஸ்வின்.
நன்றி இணையம்

# கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூடுகின்றன...!

## தனித்தியங்கும் முடிவா???

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளும் கொழும்பில் கூடவுள்ளன.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளதோடு, தற்போதைய புதிய சூழ்நிலைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டு, சில முக்கிய முடிவுகள் எடுக்கவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

# உள்ளக விசாரணைக்கு எதிர்ப்பை வெளியிடத் தயங்கும் த.தே.கூ!



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் - குழுவினால் வெளியிடப்- படவுள்ள போர்க்குற்ற விசாரணை அறிக்கை தொடர்பான விசாரணைகளை உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக முன்னெடுப்பதை அமெரிக்கா ஆதரவளிப்பதாக வெளிப்படையாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் உள்ளக விசாரணையை வெளிப்படை - யாக மறுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயக்கம் காட்டிவருகின்றது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தற் பரப்புரைகளின் போது போர்க் குற்றம் தொடர்பாக உள்ளக விசாரணைகள் நடத்தப்படு- வதைத் தாம் எதிர்ப்பதாகத் தெரிவித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது உள்ளக விசாரணைக்கு......

17

# அமெரிக்க ஆதரவை எதிர்க்கும் தமிழ் சிவில் சமூகம்



இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போதான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முன்மொழிந்துள்ள உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவு வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளமை குறித்து தமிழ் சிவில் சமூக அமையம் அதிருப்தி வெளியிட்டுள்ளது....

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## உள்ளக விசாரணையும் உருப் பெருக்கும் புத்தரும்!

தமிழ் மக்கள் எதிர்கொண்ட இனவழிப்புப் போரின் போது நிகழ்ந்துள்ள மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்வதற்கு உள்நாட்டுப் பொறிமுறையொன்றை வரைந்து அதனை உலக வல்லாதிக்க சக்திகளின் தலைமையான அமெரிக்காவிடம் இலங்கை அரசு கையளித்தாகி விட்டது.

உள்ளகவிசாரணைப் பொறிமுறையில் என்ன நடைபெறும் என்பதை உலகம் முழுவதும் உள்ளவர்கள் தெரிந்திருக்கின்ற அதேவேளை அவ்வுள்ளகப் பொறிமுறையை எதிர்ப்பதற்குத் திராணியற்றவர்களாகவே அவர்கள் இருக்கின்றார்கள். அதற்குக் காரணம் யார் நேரடியாக இந்த அழிவினை எதிர்கொண்டார்களோ அவர்கள் அந்த உள்ளகப் பொறிமுறையின் ஊடான விசாரணையை உன்மத்தங்கொண்டு எதிர்க்காமல் இருப்பது தான்.

அழிவை எதிர்கொண்ட இனத்தினால் தேர்வு செய்யப்பட்ட அரசியல் தலைமையானது தேர்தல் காலங்களில் உள்ளகப் பொறிமுறையுடன் கூடிய விசாரணைகளை முற்று முழுதாக எதிர்ப்பதாகத் தெரிவித்திருந்தது. அவ்வாறு தெரிவித்ததையும் மூலதனமாக்கி தனது தேர்தல் வெற்றியைப் பதிந்துகொண்டது. இன்று உள்ளகப் பொறிமுறை தொடர்பாக அமெரிக்கா திருப்தியடைந்திருப்பதாக அறிவித்துள்ள வேளையில் அதற்கான மிக அடிப்படையான தார்மீக எதிர்ப்பைக் கூட வெளியிடாது தட்டிக்கழித்து வருகின்றது.

எதிர்ப்பதென்பது ஒரு "வன்போக்கு" எனவும் அவ்வாறு எதிர்ப்பதென்பது கனவான்களின் அரசியலில் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு எதிர்ப்பை வெளியிடுவது இராசதந்திரமற்ற அனுகுமுறையென்றும் எதிாப்பையும் எவருக்கும் நோகாமல் தெரிவிப்பதே தமிழரின் எதிர்காலத்திற்கு நன்மைபயக்கும் என்றும், எதிர்ப்பது சிங்களப் பேரினவாதத்தை ஆத்திரமடைய வைக்கும் என்றும்.... தொடர்ந்து கூறப்படும் பலவிடயங்களால் தமிழர்களின் அரசியலானது இராசதந்திரம் மிக்க "மென்போக்கு" அரசியலைக் கொண்டமைவதே சாலச் சிறந்தது என்று அனைத்துச் சாத்தான்களும் வேதமோதத் தொடங்கிவிட்டன.

நியாயமொன்று மறுக்கப்படும் போது அந்நியாயத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்ப்பை வெளியிடக்கூட அச்சமடையவேண்டிய அரசியல் நிலையே இன்று தமிழர்களின் அரசியல் நிலை என்பதையிட்டு நாம் கிஞ்சித்தேனும் சிந்திக்கவில்லை.

தமிழ் மக்களின் அழிவு தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்ளப் போகின்ற உள்நாட்டுப் பொறிமுறையை நாம் எதிர்க்கப் போவதில்லை. அதேபோலவே திருகோணமலையில் ஆதிசிவன் கோவில் அமைந்திருக்கும் முற்றத்தில் உருப்பெருத்து அமரப்போகும் புத்தபகவானின் சிலையையும் நாம் எதிர்க்கப் போவதில்லை.

ஆனால் நாங்கள் தான் ஜனவரி 8ம் திகதி இந்த நாட்டில் நல்லாட்சியை உருவாக்குவதற்கான சனாதிபதியை தேர்ந்தெடுப்பதில் முக்கிய பங்காற்றியவர்கள்.

நாங்கள் தான் ஆகஸ்ட் 17ல் எமக்கான தலைமையாக யாரந்த நல்லாட்சிச் சனாதிபதியை உருவாக்க எம் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தார்களோ அவர்களை சனாதிபதிக்கு ஆதரவாக் நாடாளுமன்றத்தில் இருக்கச் செய்தவர்கள்.

நாங்கள்தான் சீன ஆதிக்கத்தையும், பாகிஸ்தானிய உளவு நடவடிக்கையையும் இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்காக முறையே அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் ஆதரவளித்தவர்கள்.

ஆனால் நாங்கள் இன்று எங்களை அழித்தவர்களே தங்களை விசாரணை செய்யப் போகின்றார்கள் என்பதைத் தெரிந்துகொண்டும் ஏதிலிகளாய் நிற்பவர்கள். உள்ளகவிசாரணையும், உருப்பெருத்த புத்தரும் எமக்கானதும், எமக்கானவருமே! ஏனெனில் ஏதிலிகளாய் நாம் எமக்கானவர்கள் இன்றி நிற்கின்றோம்!

# பிரியாவிடைக்கு 1,500 ரூபா

பிரியாவிடை வைபவம் ஒன்றுக்காக திருகோணமலை மாவட்டத்திலுள்ள பிரதேசசபையொன்று அரசாங்க அலுவலர்களிடம் ரூபா ஆயிரத்து ஐநூறை அறிவிட்டுள்ளமை தொடர்பான இரகசிய முறைப்பாடுகள் மலைமுரசிற்குக் கிடைத்துள்ளது.

குறித்த அறவிடானது அரசாங்க அலுவலர்களின் சம்பளத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவ்வாறு அறவிடுவது தொடர்பாக குறித்த அரசாங்க அலுவலர்களிடம் சம்மதம் எதுவும் பெற்றுக்கொள்ளப் படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

குறித்த பிரதேசசபையில் தொன்னூறுக்கும் மேற்பட்ட அலுவலர்கள் பணிபுரிவதாக மலைமுரசிற்குத் தெரிவித்த அலுவலர் ஒருவர் தமது மாதச் சம்பளத்தில் ஆயிரத்து ஐநூறு ரூபாவைத் தமது விருப்பின்றியே கழித்து எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட போது இச்செயற்பாடு சட்டத்திற்கு முரணானது என பிரதேசசபைகளின் உள்ளக்க கணக்காய்வு விடயங்களில் ஈடுபடும் விசாரணை அலுவலர் குறித்த பிரதேசசபையின் செயலாளருக்கு அறிவுறுத்தியிருந்த போதும் அதனை ஒரு பொருட்டாகவே அப்பிரதேசசபைச் செயலாளர் கருதவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்த பிரதேசசபையின் அலுவலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# பாடசாலைகளுக்கு அபிவிருத்தி நிதி

## விமர்சனத்திற்குள்ளாகும் கல்வி அமைச்சு

கிழக்கு மாகாணப் பாடசாலைகள் சிலவற்றை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அமெரிக்க அரசியனால் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான அபிவிருத்தி நிதியைப் பகிர்ந்த விடயம் பெரும் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

அமெரிக்க அரச நிதியுதவியின் கீழ் எட்டுப் பாடசாலைக்கு 3,218,000 அமெரிக்க டொலர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டடுள்ளன.

இவ்வாறு பகிர்ந்தபோது கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டம் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதுடன் மட்டு அம்பாறை மாவட்டங்களில் இருந்து ஒரேயோரு தமிழப் பாடசாலை மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளமையும் கடும் விசனத்தை உருவாக்கியுள்ளது. அத்துடன் சிங்களப்பாடசாலைகள் முழுவதுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

தேர்வாகிய பாடசாலைகள்முறையே அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம், ஏறாவூர் - அப்துல் காதர் வித்தியாலயம், கல்முனை- வெஸ்லி உயர்பாடசாலை, சாய்ந்தமருது காரியப்பர் வித்தியாலயம், காவத்தமுனை - அல்-அமீன் வித்தியாலயம், காத்தான்குடி -பதுரியா வித்தியாலயம், சம்மாந்துறை தாறுஸ்லாம் மகாவித்தியாலயம், மற்றும் நிந்தவூர் -அல்-மஷ்ஹர் வித்தியாலயம் ஆகியனவை ஆகும்.

இவ்வாறு பாடசாலைகள் தேர்வு செய்யப்பட்டமை தொடர்பாகத் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ள கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜனா இவ்வதிருப்தியைக் கடிதம் மூலம் அமெரிக்க உதவி நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தவிருப்பதாகவும் கூறியுள்ளார்.

# திருக்கோணேஸ்வராலய பரிபாலனசபைக் கூட்டம்



திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் நான்காவது பொதுச்சபைக் கூட்டம் கோணேஸ்வர ஆலயத்தின் கல்யாண மண்டபத்தில் 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் பரிபாலன சபையின் தலைவர் திரு. ப.பரமேஸ்வரன் தலைமையில் நிகழ்ந்தேறியது. 2014-2015 ஆண்டுக்கான கணக்கறிக்கைப் பொருளாளரினால் சமர்ப்பிக்கப்பட்டு பொதுச்சபையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

# காவல்துறையின்

## 149வது ஆண்டு நிறைவு அணிவகுப்பு

(கதிரவன்)





149வது காவல்துறை நிறைவு தின அணிவகுப்பு திருகோணமலையில் 28ம் திகதி நடைபெற்றது. இவ்வணி-வகுப்பையொட்டி பிரதான வீதிகள் சில நேற்றுக் காலை பொதுமக்களின் பாவனைக்குத் தடுக்கப்பட்டிருந்தன.

மெக்கெய்சர் முன்றலில் இருந்து கடற்படைத்தள வீதி. பிரதான வீதி ஊடாக தலைமைக் காவல் நிலையம்வரை நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையைக் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ ஏற்றுக் கொண்டார்.

# அலஸ்தோட்டவீதி புனரமைக்கப்படுமா?

திருகோணமலை நகரின் புறநகர்ப்பகுதியான அலஸ்தோட்டம் வெளிநாட்டு உல்லாச பயணிகளின் முக்கியத்துவமிக்க இடமாக விளங்குகின்றது. அத்துடன் உல்லாச விடுதிகளும் இப்பகுதிகளை ஆக்கிரமித்து வேலைவாய்ப்புக்களை வழங்கி வருகின்றது.

ஆனால் அலஸ்தோட்டம் கடற்கரை வீதி, போக்குவரத்து செய்வதற்கேற்ற வீதியாக இல்லை.

சுமார் 30 வருடங்களாக இவ்வீதி செப்பனிடப்படவில்லை. குன்றும் குழியுமாக காட்சி தரும் இவ்வீதியின் அவல நிலை குறித்து உப்புவெளி பிரதேச சபைக்கு அலஸ்தோட்டத்தில் இயங்கிவரும் பொது அமைப்புக்கள் பல கடிதங்கள் அனுப்பியும் குறிப்பிட்ட பிரதேச சபைக்குள் வரும் இவ்வீதி இன்று வரை புனரமைப்பு செய்யப்படாமல் இருப்பதாக அப் பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவித்ததுடன் [illegible] உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## நிதியுதவி தொடர்பில் மீள் பரிசோதனை
### கிழக்கு மாகாணத்தில்

கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி உதவியின் முறையற்ற வளப்பங்கீடு தொடர்பாக மீள்பரிசீலனை செய்யுமாறு கிழக்கு மாகாணசபையை கோருமாறு ஐக்கிய அமெரிக்காவுக்கான உயர்ஸ்தானிகரிடம் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கே.கருணாகரம் (ஜனா) கேட்டுக்கொண்டுள்ளார்.

மாகாணத்திலுள்ள 8 பாடசாலைகளுடைய அபிவிருத்திக்கென யு.எஸ்.எயிட்டினால் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் உயர்ஸ்தானிகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், கிழக்கு மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட தங்களது நிதி உதவியினைக்கூட சமமாக பகிரப்பட முடியாத நிலையே எமக்கு ஏற்பட்டுள்ளது. எனவே இந்த முறையற்ற வளப்பங்கீடு தொடர்பாக மீள்பரிசீலனை செய்யுமாறு கிழக்கு மாகாணசபையினை கோருமாறு தங்களை கேட்டுக்கொள்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

## கைதானான் 17 வயது சிறுவன்



ஏறாவூர் பிரதேசத்தில் வைத்து 14 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கிய 17வயது இளைஞன் ஒருவரை ஏறாவூர் கால்துறையினர் கைதுசெய்துள்ளனர்.

வாகரை, மாங்கேணியை சேர்ந்த சிறுமியை ஏறாவூர் பகுதிக்கு அழைத்துவந்து குறித்த சிறுமையை பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் 17வயது இளைஞனே கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் சிறுமி மட்டக்களப்பு போதனா வைத்திய-சாலையில் அனுமதிக்கப்-பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் மேலும் தெரீவித்தனர்.

## குழந்தையருகில் தாயின் சடலம்

ஐந்து மாத கைக்குழந்தை அருகிலிருக்க 17 வயதான அக்குழந்தையின் தாயினது சடலமொன்று வீட்டிலிருந்து கடந்த புதன்கிழமை மீட்கப்பட்டதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர், திகிலிவெட்டைக் கிராமம் விஷ்ணுகோயில் வீதியைச் சேர்ந்த கந்தையா பவித்திரா (வயது 17) என்ற ஒரு குழந்தைக்குத் தாயான குடும்பப் பெண்ணின் சடலமே வீட்டிலிருந்து மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயில் திருவிழாவை முன்னிட்டு எற்பாடு செய்யப்பட்ட சிரமதானமொன்றுக்கு காலையில் சென்று விட்டு மாலையில் வீடு திரும்பி வந்து பார்க்கும்போது மனைவி சடலமாகக் கிடந்ததாகவும் ஐந்து மாதக் கைக்குழந்தை அருகே இருந்ததாகவும் பெண்ணின் கணவர் மரண விசாரணையின் போது சாட்சியமளித்தார்.மரண விசாரணைகளை மேற்கொண்டனர். காவல்துறையினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## அமெ.கடற்படையினரால் கிழக்கில் அபிவிருத்தி

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் அமெரிக்க கடற்படையினரின் நிதி உதவியில் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று காலை கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் முன்னிலையில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அபேய குணவர்த்தனவும் அமெரிக்க கடற்படையின் சார்பில் லெப்டினன்ட் டேவ் கிறிஸ்ரின் அவர்களும் கைச்சாத்திட்டனர். கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிசாம் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். மேலும் இதற்காக 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலிடப்பட்டுள்ளதுடன், அத்தொகையினுள் பலதரப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க இருப்பதாகவும் ஆளுனர் ஒஸ்டின் பெர்னாண்டோ அவர்கள் தெரிவித்தார்.

## கொலை செய்தோர் கைதாகினர்

வாழைச்சேனையில் கடந்த 15.08.2015ஆம் திகதி கொலை செய்யப்பட்ட ஜமால்தீன் அமீன் என்பவரது கொலையுடன் சம்மந்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட பிரதான சந்தேக நபரும் அவருக்கு கைத்துப்பாக்கியை விற்பனை செய்தவரும் வாழைச்சேனை காவல்துறையினரால் கடந்த வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீறாவோடை பாடசாலை குறுக்கு வீதியில் வசித்து வந்த அப்துல் மஜீட் முஹம்மது பீல் (வயது - 43), கல்முனை பி.பி.வீதியைச் சேர்ந்த ஆதம்பாவா முஹம்மது கடாபி (வயது - 38) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கொலைச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இக் கொலைச்சம்பவம் அரசியல் நோக்கத்துக்காக இடம்பெற்றதாக கூறப்பட்ட போதிலும் இக் கொலை குடும்பத்தகராறு காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக வாழைச்சேனை காவல்துறையினர் தெரிவித்தனர்.

## அடிப்படைத் தேவைகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை



மட்டக்களப்பு - பதுளை வீதிப் பகுதியை அண்டியுள்ள வடிச்சல், ஊத்துச்சேனை கிராமங்களை சேர்ந்த மக்கள் மீள்குடியேறிய நிலையில் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டுமென ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் ஏ.சி.எம்.ஷயீட் தெரிவித்தார்.

இந்த மக்களின் மீள்குடியேற்றத்துக்கான எந்தவொரு உதவிகளையும் அரசாங்கமோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ, அரசியல்வாதிகளோ செய்து கொடுக்கவில்லை என்றார். இந்த மக்கள் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்யமுடியாத நிலையில் அல்லல்பட்டு வாழ்ந்து வருகின்றனர். மேற்படி கிராமங்களை சேர்ந்த மக்கள் தொடர்பில் யாரேனும் கவனத்திற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மதங்களுக்கிடையேயும் நல்லிணக்கம் தேவை

இந்த நாட்டில் நல்ல ஒரு அரசாங்கம் வந்தது போன்று இந்த நாட்டில் உள்ள மதங்களுக்-கிடையிலும் நல்லதொரு இணக்கப்பாடு ஏற்படுத்தவேண்டும் எதிர்காலத்தில் இந்த நாட்டில் கலவரங்கள், யுத்தங்கள் ஏற்படாத வகையிலான அத்திவாரங்கள் அடிமட்டத்தில் இடவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

நேற்று இடம்பெற்ற இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தேசிய ரீதியிலான இனங்களுக்கிடையான சமயங்களுக்கிடையிலான கிறிஸ்தவ சபைகளுக்கிடைலான ஒருங்கிணைப்புசபை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியம் ஆகியவற்றுக்-கிடையிலான கலந்துரையாடல் நிகழ்வின் போது ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை மேற்படி தெரிவித்திருந்தார்.

## வாழைச்சேனை திருச்சபை திருடப்பட்டுள்ளது

வாழைச்சேனை, ஆலம்குளம் கிராமத்திலுள்ள அமெரிக்கன் சிலோன்மிஷன் திருச்சபையில் திருட்டுப்போயுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். வாராந்த வழிபாட்டு நடவடிக்கைகளுடன் ஏனைய நாட்களில் முன்பள்ளி பாடசாலையாகவும் இந்த திருச்சபை இயங்கிவருகின்றது.

இந்த நிலையில், முன்பள்ளிப் பாடசாலையின் விடுமுறை முடிந்து எதிர்வரும் 31ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த திருச்சபையை சுத்தம் செய்வதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை சென்றபோது, திருச்சபையின் கதவுப் பூட்டு உடைக்கப்பட்டு திருட்டு போயுள்ளதை அவதானித்துள்ளனர். தொடர்ந்து காவல் துறையினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

50 கதிரைகள், 40 சிறிய கதிரைகள் மற்றும் 2 பெரிய மேசைகள் திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.



## வீட்டிலிருந்த சிறுமியைக் காணவில்லை




வீட்டிலிருந்த 14 வயதுச் சிறுமியைக் காணவில்லையென அவளது பெற்றோர் கடந்த செவ்வாய்க்-கிழமை முறைப்பா-டொன்றைச் செய்து-ள்ளதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முறக்கொட்டான்சேனைக் கிராமத்-தைச் சேர்ந்த சிறிஸ்கந்தராஜா ஷிரோமினா (வயது 14) என்ற சிறுமியே காணாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.

சிறுமி தனியாக வீட்டில் இருந்த போதே காணாமல் போயுள்ளார். தொழிலுக்காகச் சென்ற பெற்றோர் வீடு திரும்பிய போது சிறுமி வீட்டிலிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்-பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர். இதுவரை சிறுமி கடத்தப்பட்டதற்கான காரணம் கூட தெரியவரவில்லை என்கின்றனர் காவல்துறையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை

## கே.சிவாஜிலிங்கம்



இனஅழிப்பு தொடர்பினில் சர்வதேச விசாரணை கோரி குரல் கொடுக்க தொப்புள் கொடி உறவுகள் மற்றும் புலம்பெயர் உறவுகளிற்கு அழைப்புவிடுத்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாணசகை உறுப்பினருமான கே.சிவாஜிலிங்கம்.

ஊடக அமையத்தினில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பினில் அவர் தெரிவிக்கையினில் இறுதி யுத்த காலப்பகுதிகளினில் புலம்பெயர் உறவுகளும் தொப்புள் கொடி உறவுகள் எவ்வாறு ஓய்வொழிச்சலின்றி போராடினார்களோ அதே போன்று குரல் கொடுக்கவேண்டும்.

ஒரு சிலர் தேவையற்ற விதத்தினில் தெரிவித்த கருத்துக்களிற்கு நான் பகிரங்க மன்னிப்பு கோருகின்றேன்.

ஆனால் எமது தொடர் போராட்டங்களே ஐ.நா விசாரணை வரை சென்றிருந்தது. அதனால் சோர்வடையாது போராட வேண்டுமெனவும் சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

# சர்ச்சைக்குரிய கிணறு பாதுகாப்பில்



மன்னார், மாந்தை திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகே சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் சர்ச்சைக்கூறிய கிணற்றை மன்னார் நீதவான் பார்வையிட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா குறித்த கிணற்றை நேரில் சென்று பார்வையிட்டார்.

கடந்த 26 ஆம் திகதி மாலை 3 மணியளவில் மன்னார் நீதவான் முன்னிலையில் கிணறு அடையாளம் காணப்பட்டது. இதன் போது இப்பாதை மூடப்பட்டு கிணற்றை அடையாளப்படுத்துவதற்கு அங்குள்ள பற்றைக்காடுகள் அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதனைத் தொடர்ந்து நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை, அப்பகுதி பாதுகாக்கப்படவேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் சர்ச்சைக்குரிய கிணறு தொடர்பான வழக்கு விசாரனைகள் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் விசாரனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

# கின்னஸ் சாதனை - 35000 பேருக்கு தேநீர்




இலங்கை சுற்றுலா சபை, இலங்கை தேயிலை சபை மற்றும் இலங்கை விமான சேவை ஆகியன இணைந்து தோட்டத் தொழிலாளர்கள் மூலம் புதிய கின்னஸ் சாதனை பயணத்தை நேற்றுஆரம்பித்துள்ளனர்.

நுவரெலியா பீட்ரு தோட்டத்தில் 500 கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களைக் கொண்டு ஒரே நாளில் 2 மணித்தியாலங்களுக்குள் 3000 கிலோ கிராம் கொழுந்து பறித்து அதில் தேயிலை தூள் தயாரித்து 35,000 பேருக்கு தேநீர் வழங்கி இந்த கின்னஸ் சாதனை புரியப்படுகிறது.

நாளை கண்டி எசல பெரஹரா காண வருபவர்களுக்கு 35,000 கோப்பை தேநீர் வழங்கி கின்னஸ் சாதனை படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தீர்மானத்தில் தெரிவு

புதிய நாடாளுமன்றின் சபாநாயகராக ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ஒருவரும், பிரதி சபாநாயகராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கும் வழங்கப்படும் என ஊகங்கள் எழுந்துள்ளன. அதன்படி சபநாயகராக கரு ஜயசூரிய நியமிக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இத்தெரிவு குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# எரிபொருள் விலை வீழ்ச்சி

உலக சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சி காரணமாக இலங்கையில் எரிபொருள் விற்பனை விலை கணிசமான அளவில் குறைக்கப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வரை உலக சந்தையில் ஒரு பீப்பாய் எணணெய் 60-65 அமெரிக்க டொலர்கள் வரை விற்பனை செய்யப்பட்டிருந்தது.

எனினும் தற்போது 39-43 வரையான அமெரிக்க டொலர்கள் வரை சுமார் 35 வீத விலை வீழ்ச்சியில் உலக சந்தையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றது. ஆயினும் இலங்கையில் இதுவரையில் எரிபொருள் விலை குறைக்கப்படவில்லை.

இது தொடர்பாக எரிபொருள் அமைச்சின் செயலாளர் சுரேன் பட்டகொட, இலங்கையில் தற்போது எரிபொருள் விலையேற்றம் மற்றும் விலைக் குறைப்பு என்பன சூத்திரமொன்றின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. எனினும் உலக சந்தையில் எரிபொருள் விலைக்குறைப்பு காரணமாக இலங்கையிலும் ஓரிரு நாட்களில் விலைக்குறைப்பு அமுல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மலைமுரசு
MALAIMURASU

# தேசிய செய்திகள்

# இராணுவமா என விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது

இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றம் குறித்து விசாரணை நடத்தவுள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

சனல்-4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட போர்க்குற்றம் தொடர்பான ஆவணப் படம் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது. இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றம் குறித்த பல ஆதாரங்கள் அடங்கிய ஆவண காணொளியை, கலம் மெக்ரே தயாரித்திருந்தார். இது சர்வதேச ரீதியாக பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் வழமை போன்று இது போலியான ஆவணப்படம் என இலங்கை அரசாங்கம் மறுத்திருந்தது. ஆனாலும் குறித்த காணொளியின் உண்மைத்தன்மை குறித்து ஆராய நோக்கில், 2013ம் ஆண்டிலிருந்து இலங்கை இராணுவத்தினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த காட்சியில் தோன்றுவது இராணுவமா? என்பதை அடையாளப்படுத்தும் நோக்கில் இந்த விசாரணைகள் இடம்பெறுவதாக இலங்கை இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சந்தேகத்தில் உள்ளது இலங்கை விஜயம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்-குழுவின் தலைவர் இளவரசர் செய்யித் ஹுசைன் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பு நியூஸ்டுடே செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை செப்டம்பர் மாத இறுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதற்கு முன்னதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் இளவரசர் செய்யித் ஹுசைன் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ளார்.

எனினும் அவரது இலங்கை விஜயம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. அதன் காரணமாக பயணத்திற்கான திகதியும் இதுவரை முடிவாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் செப்டம்பர் 14ம் திகதிக்கு முன்னதாக இளவரசர் செய்யித் ஹுசைனின் விஜயம் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு நியூஸ் டுடே செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

# பொது விவாதத்திற்கு அழைப்பு




தேசிய அரசாங்கத்தின அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு தொடர்பில் விவாதமொன்றை நடத்துமாறு கோருவதற்கு ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 3ஆம் திகதி இந்த விவாதத்தை ஒத்திவைப்பு வேளை விவாதமாக நடத்துமாறு கோரவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை[illegible] நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் அனுமதியை கோரவுள்ளார்.

இதன் பின்னர் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவினால் ஒத்திவைப்பு வேளை பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்று ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

# எதிர்கட்சி தலைவர் தெரிவு சனாதிபதியிடம்

அமைக்கப்படவுள்ள தேசிய அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இந்த அதிகாரத்தை கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்துள்ளது.

தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்கள், மற்றும் எதிர்க்கட்சித் தலைவரை நியமித்தல் குறித்த அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் தற்போது ஜனாதிபதி இல்லத்தில் நடைபெற்று வருகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்று வரும் குறித்த சந்திப்பின்போது, எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவுசெய்யும் அதிகாரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## லொறிக்குள் 70 அழுகிய சடலங்கள்

ஆஸ்திரியா நாட்டில் உள்ள சாலை ஒன்றில் அநாதையாக நின்ற லொறியில் சுமார் 70க்கும் அதிகமான மனித சடலங்கள் இருந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்திரியா நாட்டிற்கு அருகில் உள்ள ஹங்கேரி நாட்டின் எல்லையோரத்தில் உள்ள A6 போக்குவரத்து சாலையில் லொறி ஒன்று அநாதையாக கிடப்பதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது. வியன்னா நகருக்கு செல்ல இருந்த அந்த வாகனத்திற்குள் அழுகிய நிலையில், 70க்கும் மேற்பட்ட நிலையில் மனித சடலங்கள் இருந்ததை கண்டு அதிர்ச்சியுற்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வந்தவர்களாக இருக்க கூடும் என்றும் காவல்துறையினரின் பரிசோதனைக்கு பயந்து வாகன ஓட்டுனர் லொறியை நிறுத்தி விட்டு தப்பியிருக்கலாம் என கூறியுள்ளனர் காவல்துறையினர்

லொறியின் உரிமையாளர் குறித்து விசாரணை செய்ததில், அது ஸ்லோவோக்கியா நாட்டை சேர்ந்த ஹைசா என்ற கோழிப்பண்ணையை சேர்ந்தது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலங்களை மருத்துவர்கள் பரிசோதனை செய்தபோது, ஆஸ்திரியா நாட்டிற்குள் நுழைவதற்கு முன்னதாகவே, அதாவது 2 நாட்களுக்கு முன்னரே அவர்கள் இறந்திருக்க வேண்டும் என கணித்துள்ளனர்.

லொறியில் பயணித்தவர்கள் எந்த நாட்டை சேர்ந்தவர்கள் மற்றும் எத்தனை பேர் இறந்துள்ளனர் என்ற உறுதியான தகவல்களை விசாரித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.



## தலை நசுக்கி மரண தண்டனை

ஐ.எஸ். தீவிரவாதிகள், தனது மனைவிக்கு துரோகம் செய்து பிறிதொரு பெண்ணுடன் இரகசிய காதல் தொடர்பை வைத்திருந்த குற்றச்சாட்டில் தம்மால் பிடிக்கப்பட்ட ஒருவருக்கு தலையைத் துண்டித்து மரணதண்டனை நிறைவேற்றப்படுவதை வெளிப்படுத்தும் புதிய புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி தீவிரவாதிகள்ால் தன்னினசேர்க்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 30 பேருக்கும் அதிகமானோருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ள நிலையிலேயே இந்தப் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஈராக்கிய நினெவெஹ் பிராந்தியத்திலேயே இந்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பழமை வாய்ந்த ஜெட் விபத்தில்

இங்கிலாந்தில் இடம்பெற்ற விமான சாகச நிகழ்ச்சியில் பங்கேற்ற ஜெட் விமானம் விழுந்ததால் விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.



இங்கிலாந்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சசெக்ஸ் கௌண்டியில் கடந்த 22 ஆம் திகதி, நடைபெற்ற நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 1950 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஜெட் விமானம் வானில் சாகசம் செய்து கொண்டிருந்த போது, திடீரென நிலைதடுமாறியதுடன், சிறிது நேரத்தில் விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் தரையில் விழுந்து தீப்பிடித்துக் கொண்டது.

இந்த விபத்தில் 07 பேர் உயிரிழந்ததாகவும், விமானி வைத்தியசாலையில், கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், பலியானோர் எண்ணிக்கை உயரக்கூடும் என மேலும் தெரிய வந்துள்ளது.

## புராதன கோவில் தகர்ப்பு



யுனெஸ்கோவின் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட சிரியாவின் பல்மைரா நகரத்தில் உள்ள இரண்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த கோயிலை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சேதமாக்கியுள்ளதாக மனித உரிமை குழுவொன்றும் நாட்டின் தொல்பொருட்துறை தலைவரும் தெரிவித்துள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பாரியளவில் வெடிபொருட்களை பால் மின் கோவிலில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடிக்கப் பண்ணியமையாலேயே அதிக சேதம் ஏற்பட்டதாக சிரிய தொல்பொருளியல் தலைவர் மமோன் அப்துல்கரீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 50 வருடங்களாக பல்மைரா தொல்லியற்துறை தலைவராக பணியாற்றிய 82 வயதான காலீத் அசாத், ஒரு மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்து தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு வந்தடைவதற்கு முன்னரே அருங்காட்சியகத்தில் இருந்த பெரும்பாலான பொருட்கள் தொல்லியற்துறை ஊழியர்களினால் அகற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மரண தண்டனையை ஒழிக்குமாறு பரிந்துரை

இந்தியாவில் மரண தண்டனையை ஒழிக்குமாறு, மத்திய அரசுக்கு பரிந்துரைக்க, சட்ட ஆணையகம் முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக 272 பக்க வரைவு அறிக்கையை சட்ட ஆணையகம் தயார் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட ஆணைய உறுப்பினர்களின் கருத்துகளை அறிந்தப்பின்னர் அடுத்த வாரத்தில் மத்திய அரசிடம் அறிக்கை சர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தீவிரவாத தாக்குதல் வழக்கில் தண்டனை பெற்றவர்களை தவிர்த்து, ஏனைய வழக்குகளில் தூக்கு தண்டனை நிறைவேற்றக்கூடாது போன்ற சரத்துக்கள் வரைவு அறிக்கையில் இடம்பெற்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா உள்பட 60 நாடுகளில் மரண தண்டனை நடைமுறையில் இருப்பது



குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் தொடர்பாக பேசிய நகர பொலிசார், பெண் அளித்துள்ள புகாரை தொடர்ந்து குற்றவாளியை தேடி வருவதாகவும், குதிரையை கொடூரமாக கொன்று மற்ற விலங்குகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் அந்த மர்ம நபர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என உறுதிப்பட தெரிவித்துள்ளனர்..

## புகார் கொடுத்தமைக்கு வெந்நீர் அபிஷேகம்

கிழக்கு சீனாவின் வென்ஜோ நகரில் ஹாட் ஸ்பாட் ஹொட்டலுக்கு கடந்த 24ஆம் திகதி மிஸ்லின் என்பவர் தனது குடும்பத்தினருடன் உணவருந்த சென்றுள்ளார். அவர்களுக்கு குறிப்பிட்ட ஊழியரின் சேவை சரியில்லை என்று ஹொட்டல் உரிமையாளரிடம் மிஸ்லின் புகார் செய்துள்ளார்.

பின்னர் தனது குடும்பத்துடன் மிஸ்லின் இருந்தபோது, திடீரென அங்கு வந்த அந்த ஊழியன் கொதிக்கும் வெந்நீரை எடுத்து வந்து, மிஸ்லின் மீது ஊற்றியதோடு, மிஸ்லின்னை கடுமையாக தாக்கியுள்ளார்.

மிஸ்லின்னின் முகம், கழுத்து மற்றும் தோள்பட்டை முழுவதும் காயம் ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து காவல்துறையில் அளிக்கப்பட்ட புகாரையடுத்து அவ் ஊழியனை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.



லிபியாவில் இருந்து புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய படகொன்று வழிமறிக்கப்பட்ட போது அதில் இருந்து 50 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக இத்தாலிய கடற்பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மூச்சுத் திணறல் காரணமாக இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடற்பாதுகாப்பு கப்பலொன்று குறித்த படகில் இருந்து 430 பேரை உயிருடன் மீட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 50 பேரின் சடலங்களுடன் கப்பல் மீட்பு

லிபியாவில் இருந்து மத்திய தரைக்கடல் ஊடாக ஆபத்தான கடற்பயணங்கள் மேற்கொண்ட ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளதுடன். பல்லாயிரக்-கணக்கான மக்கள் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்தில் கப்பல் ஒன்றியில் இருந்து 49 பேரின் சடலங்களை இத்தாலிய கடற்பாதுகாப்பு படையினர் மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது நிலவும் சீரான வானிலையை சாதகமாக பயன்படுத்தி ஆட்கடத்தல் காரர்கள் ஐரோப்பிய நிலப்பரப்பை நோக்கி புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய படகுகளை அனுப்பி வருகின்றனர்.

இவ்வாண்டு படகுமூலம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பேர் ஐரோப்பிய கண்டத்தை வந்தடைந்துள்ளதாகவும் 2000 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

## செய்தியாளர் சுட்டுக் கொலை

அமெரிக்காவின் வேர்ஜினியா மாகாணத்தில் டபிள்யூ.டி.பி.ஜே.7. தொலைக்காட்சியைச் சேர்ந்த செய்தியாளர் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அலிசன் பார்க்கர் என்ற (24 வயது) செய்தியாளரும் அவருடைய ஒளிப்பதிவாளர் ஆடம் வார்ட் என்பவரும் கொலை செய்யப்பட்டுள்ளதாக குறித்த தொலைக்காட்சி நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. குறித்த சம்பவத்தில் பேட்டி



கொடுத்துக் கொண்டிருந்தவர் உயிராபத்து இன்றி தப்பி விட்டதாக அந்த தொலைக் காட்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து காவல்துறை விசாரணை நடத்தி வருகிறது. இது தொடர்பாக சந்தேகிக்கப்படும் நபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

-ஒரு பூ அழுகிறது
ஒரு பூ அழுகிறது
காதல் பூ ஒன்று
உனக்காக அழுகிறது
காலத்தின் கன்னத்தில்
வழிகிறது கண்ணீர்
ஞாலத்தின் மார்புதனில்
நினைவு என்னும் பன்னீர்.-

– பிரபஞ்சப் பிரியன் –

# வீணையடி நீ எனக்கு...



30

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–



"என்ன நிவேதா இது.... இதப் பார்த்து நீர்.... ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்......"

"இது நான் எதிர் பார்த்தது தான் ரதன். இது எனக்கு முன்னமே தெரியும்....."

"என்னது முன்னமே தெரியுமா..... அப்படித் தெரிந்துமா இதுவரை விட்டுருக்கிறீர்......"

"இது நான் வளர்த்து விட்டதல்ல. ரதன் கிட்டத்தட்ட மூன்று வருட காலமாக விமலா தனக்குள்ளே வளர்த்துக் கொண்டது. உங்கள கண்டது முதலா அவள் உங்கள விரும்பியிருக்கிறாள். இது திருவிழாவுக்கு போயிருந்த அன்று தான் எனக்கு தெரியும்."

"எப்படி தெரியும் நிவேதா........?.."

"உங்கள கண்டது முதல் அவள் டைரி வடிவில் எழுதி வைத்திருக்கும் அந்தக் கவிதைகளை வாசித்துப் பார்த்தன். அவள் எவ்வளவு ஆழமாக உங்கள விரும்பி வருகிறாள் என்பது தெரிந்தது.........."

இந்த கடிதத்துக்கு உடனே பதில் எழுதி அனுப்பி விட வேண்டும்'."

"நிவேதா பாவம் அந்தப் பெண் அதுதான் அவள் திருவிழாவின் போது என்றுமில்லாதவாறு மிக நெருக்கமாக பழகினாள். எனக்கு இது அப்ப தெரியல்ல..... இப்ப தானே புரியுது......"

"எனக்கு தெரியும் ரதன்.... நானும் அதனைத்தான் விரும்பினன்..."

"என்ன.... அதில் உமக்கென்ன விருப்பம்......"

"ரதன் நான் ஒன்று சொல்லுவன் நீங்கள் கோவிக்கக்கூடாது......

ரதன்...... மௌனமாக இருந்தான் நிவேதா தொடர்ந்தாள்.

"ரதன் என்னைப் போலவே...... விமலாவும் உங்கள தீவிரமாக காதலித்து வருகிறாள். சொல்லப் போனால் என்னை விடவும்....... கூடுதலாக காதலிக்கிறாள் என்றால் அது தான் உண்மை. ரதன் தற்போது என்னுடைய நிலைமையில் நீங்கள் விமலாவை ஏற்றுக்கொள்வது தான் எனக்கு விருப்பம். பாவம் ரதன் விமலா.... எவ்வளவு ஆழமா நேசிக்கிறாள் என்பது அவளுடைய கவிதையைப் பார்த்தாதான் தெரியும்."

"நிவேதா உமக்கென பைத்தியமா பிடித்து விட்டது அவள் என்னை விரும்புறாள் என்றவுடன் நீர் அவளுக்கு தியாகம் செய்வதாக நினைத்துக் கொண்டு என்னை காதலிக்கச் சொல்கிறீர். எனது மனசைப் பத்தி.... நீர் கவலைப்படல்ல..... அப்படித்தானே......."

ரதன் சற்று கோபத்துடனேயே கூறினான். அவர்கள் வந்த வேன் பல்கலைகழக வாசலுக்கு வந்து நிற்கவும் அந்தக் கதை அத்துடன் முற்றுப் பெற்றது.

காலச் சக்கரம் தன் பாதையில் ஓடிக் கொண்டிருந்தது. கிழக்குப் பல்கலைக் கழக இறுதி பரீட்சைகள் ஆரம்பமாக இன்னும் சில நாட்களே இருந்தன. இறுதி வருட மாணவர்கள் பெக்கல்டி ரீதியாக தம் விரிவுரையாளர்களை அழைத்து பிரிவுபசார நிகழ்வுகளை நடாத்திக் கொண்டிருந்தனர்.

மூன்று வருடங்களுக்கு மேலாக ஒரே குடும்பமாக ஒன்றாக பழகித் திரிந்த மாணவ மாணவிகள் இன்னும் சில நாட்களில்...... தனித் தனிப் பாதைகளில்...... தம் வாழ்க்கையைத் தேடிப் பயணிக்க தொடங்கி விடுவர்.

இத்தனை நாட்களும் கல்விச் சுமையுடன் மட்டுமே திரிந்த மாணவர்கள். இனிமேல் குடும்பப் பொறுப்புக்கள், பொருளாதாரச் சுமைகள், வேலையில்லாச் சுமைகள் என பிரச்சனைகளை சந்திக்க தயாராகி விடுவர்.

மாணவப் பருவம் தான் எவ்வளவு இனிமையானது. அந்த நாட்கள் தான் எவ்வளவு ரம்மியமானவை. எதுவிதமான பொறுப்புகளுமின்றி சுற்றித்திரியும் அந்த நாட்கள் மறக்க முடியாத அனுபவங்கள் அல்லவா..........?

மாமாங்கம் திருவிழா முடிவடைந்து வந்ததில் இருந்து நிவேதா ரதனுடன் கதைக்கும் போதெல்லாம் விமலாவின் காதலைப் பற்றியே எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

எப்படியாவது அவனிடமிருந்து ஒரு சாதகமான பதிலை விமலாவுக்கு அனுப்பிவிட வேண்டும் என்ற அவளது முயற்சிகள் கைக்கூடாமலேயே போனது.

ரதன் தனது முடிவில் உறுதியாக இருந்தான்.

நிவேதா தனது நிலைமையை எடுத்துச் சொல்லியும் ரதன் தனது முடிவில் உறுதியாக இருந்தான்.

"நிவேதா மனசு காதல் என்ற பூவை ஒரு முறை தான் பூக்கும். காணும் இடமெல்லாம் காணும் பொழுதெல்லாம் அது பூக்காது. குறிஞ்சி மலர் பன்னிரண்டு வருடத்துக்கு ஒரு முறை தான் பூக்கும் என்றால் காதல் பூ ஒரு மனிதனுக்கு ஒரு முறைதான் பூக்கும். எனது காதல் பூ உன்னை நோக்கி பூத்துவிட்டது. இனிமேல் எந்த காரணத்தைக் கொண்டும் வேறு ஒரு பெண்ணை நோக்கி அது மலராது.

ரதனின் பேச்சு நிவேதாவுக்கு மனசளவில் சந்தோஷத்தைக் கொடுத்தாலும் அவளது மனசாட்சி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தனது நிலைமையை அவள் தினமும் நினைத்துப் பார்க்கும் போதெல்லாம்..... தான் ரதனுக்கு ஏற்றவள் தானா..... என்ற கேள்வியே முன் எழுந்து நின்றது.

ரதனைப் பொறுத்தவரை ரதனும் அவளும் காதலிக்கத் தொடங்கிய பின்னரே விமலா அவர்கள் வாழ்க்கையில் புகுந்திருந்தாலும் தான் களங்கப் பட்டு விட்டேனே என்ற மன ஆதங்கம் அவளை வாட்டிக் கொண்டிருந்தது.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

ரதனை காணும் போதெல்லாம் அவனுக்கு கொடுக்க வேண்டிய ஒன்றைத் தான் இழந்து விட்டேனே என்ற உணர்வே அவளுக்குத் தோன்றும். அவர்கள் காதல் வெறும் உடம்பு சம்பந்தப் பட்டதாக இல்லாதிருந்தாலும்.... ஒரு பெண் தனது கணவனுக்கு எதனைக் கொடுக்க முடியுமோ....... அதனைக் கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையை எண்ணி அவள் தினமும் கவலைப் பட்டுக் கொண்டாள்.

ஆனால் ரதன் அந்தச் சம்பவத்தையே மறந்துவிட்டவன் போலவே நடந்து கொண்டான். ஆனால் நிவேதா கவலையில் இருக்கும் போது அவளாகவே அந்த சம்பவத்தைப் பற்றி அவனிடம் கதைக்க முற்படும் போதெல்லாம் அவன் அதனை தவிர்த்தே வந்தான். அதனையும் மீறி அவள் கதைக்க முற்படுகையில் அவன் அதைப் பற்றி பெரிதாக எடுத்துக் கொள்ளாத மாதிரி அவளுக்கு பல வழிகளில் ஆறுதல் சொல்லுவான்.

கிழக்குப் பல்கலைகழக இறுதி வருட பரீட்சைகள் ஆரம்பமாகி மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. மாணவர்கள் அனைவரும் இரவு பகலாக படித்துக் கொண்டிருந்தனர். மூன்று வருட காலம் படித்து முடித்ததை மூன்று மணி நேரங்களுள் எழுத்தித் தள்ளும் பரீட்சை முறை..... ரதனுக்கு அந்த கல்வி முறையை நினைக்க மீண்டும் ஒரு முறை ஆத்திரமாத்திரமாக வந்தது.

பாடசாலை காலங்களிலும் அவன் அந்த கல்வி அமைப்பின் குறைபாடு பற்றி பல கட்டுரைகளும், கவிதைகளும் எழுதியிருக்கிறான். வருடக் கணக்கில் படித்ததை ஓரிரு மணித்தியாளங்களுக்குள் வெளிப்படுத்தி ஒரு மாணவனின் திறமையை சோதிக்கும் அந்த கல்வி முறையில் அவனுக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும்...... என்ன செய்வது படித்துத்தானே ஆகவேண்டும், என்ற நிலையில் அவன் படித்தாலும் ....... கடையில் கல்லாப் பெட்டியைத் திறந்து வைத்த படி வியாபாரம் செய்வதைப் போல "டியூட்டரிகள்" என்ற போர்வையில் கல்வி விற்கப்படுவதையும்...... அவன் மனம் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

அவனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் அவன் தனது மேற்படிப்பை மேற்கொள்ள பொருளாதார ரீதியாக மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறான். ஒரு தனியார் கம்பனியின் கணக்காளராக தொழில் புரிந்த அவனது தந்தை வேலை முடிந்து வீடு வரும் வழியில் காடையர்கள் சிலரால் மரத்தடிச் சந்தியில் வைத்து வெட்டப்பட்டதும் அன்றிலிருந்து சித்தப் பிரமை பிடித்தவளைப் போல் அவனது தாய் மாறியிருந்ததும் அவன் இளமையிலேயே அனுபவித்த கஷ்டங்கள்.

அந்த 83ம் ஆண்டு கலவரம்.... திருகோணமலை மண்ணில் பல உயிர்களைப் பறித்தும் சொத்துகளை சூறையாடியும் சென்றது.

ஒரே ஊரில் நண்பர்களைப் போல் பழகி வந்தவர்கள் ஓரிரவுக்குள் விரோதியாய் மாறிப் போனது மட்டுமல்ல, தமிழர்கள் உயிருக்கும் எமன்களாக ஆகிப் போனார்கள். ஆனாலும் அதிலும் சில நல்ல உள்ளங்கள் இல்லாமல் இல்லை. அவனுக்கும் அவனது தாய்க்கும் பல வழிகளில் உதவி புரிந்தவர்கள் அவனது தந்தையுடன் வேலை செய்த சிங்கள நண்பர்களே. காதல் திருமணம் முடித்து ஊர் விட்டு ஊர் வந்ததினாலோ என்னவோ ரதனின் தாய்க்கும், தந்தைக்கும் அங்கு சொந்தங்கள் என்று பெரிதாக இருக்க வில்லை. சொந்தங்கள் .... என்று இருந்தவர்களும் வேறு வேறு ஊர்களில் அறியப் படாதவர்களாகவே இருந்தனர்.

தந்தையின் இழப்பைத் தொடர்ந்து அவரது கம்பனியிலிருந்து கிடைத்த சிறுதொகை பணத்தை வங்கியில் வைப்பிட்டு அதிலிருந்து கிடைத்த வட்டிப் பணத்தைக் கொண்டுதான் ரதனும் தனது உயர் கல்வியை கற்க முடிந்தது.

பல்கலைகழகப் பரீட்சையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும்.... நேரம் கிடைக்கும் போது.... அனேகமான மாலை நேரங்களில் ரதன் நிவேதாவை சந்திக்கவென அவளைத் தேடி லேடிஸ் ஹொஸ்டலுக்குப் போகும் போதெல்லாம்..... நிவேதா ரதனை சந்திப்பதை தவிர்த்து வந்தாள். பரீட்சைக்கு படிக்க வேண்டும் என்ற காரணம் அவளுக்கு உதவி புரிந்தாலும்....... அவளது நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் ரதனுக்கு புரிந்தது. பலமுறை நிவேதாவைப் பார்க்க சென்றவனுக்கு நிவேதா பரீசைக்குப் படிக்க வேணும் என்ற காரணத்தை கூறி தட்டிக் கழித்து வந்தாலும் அன்று நடந்த நிகழ்வு ரதனுக்கு நிவேதா மீது முதல் முறையாக கோபத்தை ஏற்படுத்தியது.

அன்றும் அப்படிதான். தமிழ் பாட பரீட்சை முடிந்து மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழகத்தை விட்டு கலைந்து சென்று கொண்டிருந்தனர். இன்னும் இரு தினங்களில் நடைபெறவிருக்கும் நுண்கலைப் பாட பரீசையுடன் பரீட்சைகள் அனைத்தும் முடிவடைந்து விடும். அதற்கு பிறகு பல்கலைகழகத்தில் இருந்து மாணவர்கள் பெற்றுக் கொண்ட சகல வசதிகளையும் சலுகைகளையும் மீள பல்கலைகழக நிர்வாகத்திடம் ஒப்படைத்து விட்டு அவர்கள் தத்தம் வீடு செல்ல வேண்டியதுதான்.

பரீட்சை முடிந்து இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அவர்கள் செய்த ஆய்வு முயற்சி தொடர்பாக அவர்களை அழைத்து அது தொடர்பான கேள்விகள் கேட்பார்கள். இதனை "வைவா" என்று அழைப்பார்கள். தமது ஆய்வு தொடர்பாக தாம் சமர்ப்பித்த ஆய்வு புத்தகத்தில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு மாணவர்கள் பதிலளிக்க வேண்டும்.

ஜெயரதன் "ஈழத்தில் நவீன தமிழ் கவிதையின் வளர்ச்சி போக்கு...." தொடர்பாக தனது ஆய்வினை மேற்கொண்டிருந்தான்.

**வாசகர்களே! கடந்த ஆறு மாதங்களாக உங்கள் மலைமுரசு தாங்கி வந்த "வீணையடி நீ எனக்கு" எனும் குறுநாவல் விரைவில் நூலுருவில் வெளிவர உள்ளது. அந்நூலில் தங்களின் மனப்பதிவுகள் வரவிரும்பின் மலைமுரசு அலுலகத்திற்கு தங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள்.**

மேவும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## எனது குருதியும் - உனது துப்பாக்கியும்

அதற்குத் தெரியாது
நான் யார் என்று . . .

ஆதியோடந்தமாய்
ஓடும் உயிர்க் குருதியை . .
அது
தாங்கிச் செல்லும் - என்
ஆழ்ந்த சுவாசத்தை . . .

இருள் கழிந்து — ஓர்
நாளில்
ஒளி நிறைந்த உலகிற்
பிறந்து . . .
நாளாறு மணி நேரமும்
தூங்கி . . . அழுது . . .
பசியுணர்த்திப்
பாலுண்டு . . .
உடல் திருப்பிப் பிரண்டு
தவழ்ந்து . . . நிமிர்ந்தென்
தாய்க் கரம் பற்றி
நடந்து . . . வெண்
பல் வெளித்தள்ளி

குடை நடுவேயிருந்து
கொழுக்கட்டையேந்தி — நான்
அனுவனுவாய் வளர்ந்து
ஆறுடன்நான்கின் - பெருக்கமாய்
அகவைகள் தாண்டி

உன் முன் . . .

ஆடையின்றி
முழங்காலூன்றிக் - கை
பின்னே கட்டிய
என்
பிடறியிற் கூசும்...
உன் வாய்...

மரண முகவரி கூறும்

உன் முன்னே நான் . . .
அம்மணமாய் . . .

உனக்கென்ன தெரியும்
நான் யார் என்று ? . . .
ஆணியடித்துச் சுவரில்
அவதாரங்களை மாட்டிக்
காலை முழுதும் பூவாய்ந்து — அதை
கழுவிப் படைத்துச்
சாம்பிராணிப் புகையூட்டி

ஒரு நேர உணவின் - அரைப்
பங்கையுண்டு — என்
வருகைக்காய் காத்திருக்கும்
அம்மாவிடம் கேள் -

நான் யாரென்று ? . . .

உனக்கென்ன தெரியும் . . .

ஒரு தோட்டா உமிழ்ந்து
என் கனவுகளையும்
தலையையும் - ஒரு
சேரச் சிதறடிக்கும்
உனக் கென்ன
தெரியும் - நான் யாரென்று

உதிரம் வழிந்து — ஓடி
உறைந்து போன
இம் மண்ணில் - என்
தாய்
மறுபடியும் ஓர்
மகனைப் பிரசவிப்பாள் . . .

மரணத்தைக் கொன்ற
மனிதர்கள் நாம் . .

மரணத்தைத் தின்ற
மனிதர்கள் நாம் . .

மறுபடியும் பிறப்போம் . . .

பிறகென்ன . . .
என் பிடறியினுள்
உமிழ்
உன் தோட்டவை

நான்
மரணிக்க வேண்டும்

அதன் முன்
இதையாவது
தெரிந்துகொள் - நீ

மறுபடியும் பிறப்பேன் நான்..

- மாயன் -

## காதல்

உறவுகளை உடைத்து,
உணர்வுகளை தகர்த்து,
உடமைகளை தொலைத்து,
உண்மைகளை மறுத்து,
உலகை மறந்து,
உயிர்மட்டும்
விழித்திருப்பதுதான்,
காதல்!

- வித்தகன் -

பள்ளத்தோட்டம் சஜீசு

உன் காதலுக்காய்
ஏங்கி நின்று !
களைப்படைந்த என்
இதயத்திற்கு!
கனவிலாவது நிம்மதி
தேடுகிறேன்!
அப்போதும் கூட
என் விழித்திரையில்!
உன் உருவம்தான்!

## பழைய பல்லவியே பாடப்பட்டிருக்கிறது!!!

ஐ.நா அறிக்கையின்னும்
ஆறுமாத காலத்திற்கு
மௌன மாக்கப்பட்டிருக்கும்
மாற்றத்தை கண்டரசால்;

நீல அரசினாலும் இங்கு
பலவர்ண ஆட்சியாலும்
கோலங்கள் போடுவதில்
கொள்கை மாற்றத்தில்
முன்னேற்ற மில்லை;
இறுதி யுத்த நேரத்திலே
இரு தரப்பும் மேற்கொண்ட
மனித உரிமை மீறல்களை
மதிப்பீடு செய்து வரும்
புனித நேயபணியாளர்களை
நுழைய விடவில்லையிங்கு;

சர்வதேச விசாரணைக்கு
சந்தர்ப்பம் வழங்காமல்
உள்ளக விசாரனைக்கே
ஒரு தலைப் பட்சவழி இங்கு
முன்பும் நடந்திருக்கு அதை
மீண்டும் நடத்துவதே இந்த
நல்லாட்சி யுகத்திலும்.

(சேனையூரான்)



## இன்னாது!!

தாமரைத்தீவான்
(மூச்சந்தீவு)

காலத்தை வென்ற பெயர் - அப்துல்
கலாம் என்கின்ற பெயர்,
ஞாலத்தில் மண்டேலா - பெயர் போல்
நாவில் வழங்கும் பெயர்!

அப்துல்கலாம் ஐயா - உங்களின்
அறிவைப் போற்றுகிறேன்,
எப்போதுமே பயிலும் - பள்ளியின்
இளைஞர் போற்றுதல் போல்!

"இடும்பைக்கிடும்பை செய்வீர் - இடும்பைக்
கிடும்பைப்படாஅ நீவிர்' (623)
கடும் குறள் இதையும் - மாணவர்
காதுள் நுழைத்து விட்டீர்!

எண்பத்து நாலாச்சே - எனக்கும்
எப்போதென வறியேன்?
'இன்னது இனியார்தம் - பிரிவு' (1158)
என்பதை எண்ணுகிறேன்!

## எனக்குள் நீ!

உன் விம்பம் என் விழியில்!
உன் பேச்சு என் உதட்டில்!
உன் கோவம் என் கண்சிமிட்டலில்!

உன் நடை என் கூந்தல் அசைவில்!
உன் திமிரு என் சிணுங்களில்!
உன் புன்னகை என் மௌனத்தில்!

உன் துன்பம் என் விழிநீராகும்!
உன் உயிர் மூச்சு என் இதயத்துடிப்பினில்!
என்றும் என்றென்றும் நீ எனக்குள்ளே!

(ஸ்ரீகயல்)

## பொல்லாத காதல்போதை வந்தால்;



கவிநிலவன் சேனையூரான்

கல்லூரிப் படிப்பும்
போகும்:
நல்லொழுக்கப் பேரும்
போகும்:
செல்வாக்கு புகழும்
போகும்:
பொல்லாத காதல்
போதை வந்தால்:

குடும்ப கௌரவம்
போகும்:
கூடி நின்றோர் உறவு
போகும்:
பாடுபட்ட குறிக்கோள்
போகும்:
பாழடிக்கும் போதை
காதல் வந்தால்:

கண்கெட்ட காதல்
போதை
கண், மண் தெரியாமல்
ஏறும்:
நன்று தீதென்றும் பாரா
காமம்
கொன்று தின்று போகும்
கூடாத காதல் வந்தால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் பொறிமுறை விசாரணை மூலம் மீண்டும் தமிழர்கள் பொறிக்கிடங்கில் விழுவார்களா??

இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட போர்க் குற்ற விசாரணையில் சர்வதேச விசாரணை என்றிருந்த தமிழ் மக்கள் அது உள்ளூர் பொறிமுறை விசாரணையாக முடிவுக்கு வந்த போது மீண்டும் தலையில் இடி விழுந்தது போல உணருகிறார்கள். முள்ளிவாய்க்காலோடு தமிழர்களின் ஆயுதப் போர் மௌனிக்கப்பட்ட நிலையில் சர்வதேச விசாரணை மூலம் தமக்கு ஒரு விடிவு கிடைக்கும் என்று நம்பியிருந்தனர். இந்த கடைசி முடிவும் சறுக்கிவிட்டதால் இனிமேல் தமிழர் சார்பாக அரசியல் செய்வதற்கும் ஒருவரும் இல்லை என்ற நிலையே உருவாகியுள்ளதாக தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோல்வி கண்ட நிலையில் தமிழர்களின் அரசியல் நகர்வும் தோல்வி கண்டிருப்பது இந்த உள்ளூர் பொறிமுறை விசாரணையில் இருந்து நன்கு தெரிகிறது. அரசியல்வாதிகள் கதிரைக்காக சண்டை பிடிக்கிறார்கள். தமிழன் சுதந்திரமாக இருக்க நிலமில்லை என்ற போதும் கதிரைக்காக சண்டை பிடிக்கும் தமிழ் அரசியல்வாதிகளை என்னவென்று சொல்ல...

இந்த அரசியல்வாதிகளை சந்தித்து இலங்கை நிலவரம் குறித்து அறிவதற்காக இலங்கை வந்தார் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் புதிய அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுவதற்கு தாம் எதிர்பார்ப்புடன் உள்ளதாக தெரிவித்தார். இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு . இலங்கையை வந்தடைந்த அவர், வெளிவிவகார அமைச்சில் வைத்து மேலும் உரையாற்றுகையில் ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான வளங்களுக்கான அர்ப்பணிப்புடன், மீள்குடியேற்றத்துக்கும் கல்விக்கும் சம்பூரில் நாங்கள் உதவி வழங்கவுள்ளோம். அத்தோடு, இந்நாடானாது தனது முழுமையான ஆற்றலளவை அடைவதற்கு, இந்த விடயத்திலும் ஏனைய விடயங்களிலும் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் புதிய அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் எதிர்பார்ப்புடன் உள்ளோம்" எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்த நிஷாவால், தேர்தலுக்கு பின்னரான அரசியல் நிலைமைகள் தொடர்பில் முக்கியமாக அவதானம் செலுத்தப்பட்டதாகவும் கடந்த தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் குறிப்பாக தமிழ் மக்களின் காணி விடுவிப்பு, வடக்கு கிழக்கு கடற்பரப்பில் தமிழ் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடியில் ஈடுபடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குதல், காணாமல் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் போர்க் குற்ற அறிக்கை வெளியிடப்படும் என்றும், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்று நிஷா பீஷ்வால் உறுதியளித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடக்கு முதல்வர் சீ.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள சர்வதேச விசாரணை அறிக்கை குறித்து பேசப்பட்டதாக எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சிறிலங்காவின் புதிய அரசாங்கத்துடன் அமெரிக்கா அதிகளவு மென்போக்கை கடைப்பிடிப்பதாகவும், அதன் காரணமாகவே போர்க் குற்றங்கள், பொறுப்புக்கூறல் குறித்து, அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் வாய்திறக்கவில்லை என்றும் கொழும்பு அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சார்பில் சிறிலங்கா தொடர்பாக கருத்து வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில், பொறுப்புக்கூறல், போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் தொடர்பாக குறிப்பிடப்படுவது வழக்கம்.

எனினும், கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய நிஷா பிஸ்வால் மற்றும், இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி ஆகியோர், போர்க்குற்றங்கள், பொறப்புக்கூறல், மனித உரிமைகள் குறித்த எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. அவர்கள் சுருக்கமான உரையின் போது இந்த மூன்று சொற்களையும் பயன்படுத்தவேயில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, தண்டனை விலக்குரிமை, நல்லிணக்கம், போன்ற சொற்களையே அவர்கள் பயன்படுத்தியிருந்தனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் கொழும்புடன் முதலாவதாக இராஜதந்திர கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ள வொசிங்டன், சிறிலங்கா தொடர்பாக காண்பித்துள்ள மென்போக்கு சமிக்ஞையாக இது கருதப்படுகிறது. அதேவேளை, "சில விடயங்களை அடைவதற்கு முன்னோக்கிச் செல்வது கடினமானது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். இந்த முயற்சிகளை நிறைவேற்ற காலஅவகாசம் தேவை என்பதை ஏற்கிறோம். குறுகிய காலத்துக்குள் ஆச்சரியங்களை எதிர்பார்க்க முடியாது" என்றும் ரொம் மாலினோவ்ஸ்கி கருத்து வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

வன்னியில் இறுதிப் போரில் இடம்பெற்ற போர் மீறல்கள் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படுவதற்கு 48 மணிநேரம் முன்னதாகவே இலங்கை அரசுக்கு கையளிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பணியகம் மற்றும் இலங்கை அரச வட்டாரங்கள் மேற்கோள்காட்டி ஆங்கில வாரப் பத்திரிகையொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.



நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் சர்ச்சைக்குரிய ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்தாலும் இந்த அறிக்கையால் போர்க் குற்ற விசாரணை பெரிய அளவில் இடம்பெறும் என்று சொல்லமுடியாது என்று உள்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த அறிக்கை முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தொடர்பான கடுமையான குற்றச்சாட்டுக்களைக் கொண்டதாக இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்-கின்றன. இந்த அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படுவதற்கு 48 மணித்தியாலங்கள் முன்னதாக இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் அறிக்கை வெளியிடப்-படுவதற்கு முன்னர் அந்த அறிக்கை வெளியில் கசிவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக கடந்த வார இறுதியில் அல்லது இந்த வாரத்தின் பிற்பகுதியில் இலங்கை அரசிடம் கையளிக்கப்பட இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30 ஆவது கூட்டத்தொடருக்கு முன்னதாக ஐக்கிய நாடுகள் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இந்த அறிக்கை இறுதிப் போருடன் தொடர்புபட்டிருந்த சாட்சிகள் மற்றும் ஏனைய தரப்புகளின் சாட்சியங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இறுதிப் போரின் போது மனித உரிமைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. வெளிப்படைத் தன்மை குறித்த கரிசனைகள் இருந்தாலும் சாட்சியம் அளித்தவர்கள் பற்றிய அடையாளங்கள் வெளிடப்படாமல் பாதுகாக்கப்படும். இந்த அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி கலந்துரையாடப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் அமர்வின் போது செப்ரெம்பர் அமர்விற்கு முன்பாக உள்ளகப் பொறிமுறையை ஏற்படுத்துவதாக கொழும்பு உறுதியளித்திருந்தது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக அந்தப் பொறிமுறை ஏற்படுத்தப்படவில்லை. முதலில் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற நிலைமை காணப்பட்டது. இப்போது அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் நிலையில் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுமா?

இதேவேளை வடமாகாண சபையில் முதன்முறையாக சபையில் முன்மொழியப்பட்ட பிரேரணை வழிமொழியப்படாமல் தோற்கடிக்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் 33 வது அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த அமர்வில் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இலங்கை தீவில் தமிழ்-சிங்கள இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்கு உதவியாக சர்வதேச சமூகத்தையும் ஐ.நா சபையினை அழைப்பதெனவும் கோரும் பிரேரணையை சபையில் முன்மொழிந்திருந்தார்.

இந்நிலையில் குறித்த பிரேரணை சிவாஜிலிங்கத்தினால் முன்மொழியப்பட்டதன் பின்னர் சபையில் வழிமொழிவதற்கு ஒருவரும் முன்வராத நிலையில் பிரேரணை காலாவதியாவதாக அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து மேலும் பிரேரணையினை விளக்க தமக்கு மேலும் 5 நிமிடங்கள் கேட்ட நிலையில் 5 நிமிடங்கள் வழங்கப்பட்டது. இதனையடுத்து சிவாஜிலிங்கம் விளக்கத்தை வழங்கினார். இதனை தொடர்ந்தும் வழிமொழிய எவரும் முன்வராத நிலையில் பிரேரணை காலாவதியாவதாக அவைத் தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 6 மாதங்களுக்கு தீர்மானத்தை மீண்டும் முன்மொழியப்பட முடியாது எனவும் அவைத் தலைவர் சபையில் அறிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணை தேவையில்லை உள்ளூர் பொறி முறையில் விசாரணை என்ற கொள்கையில் புதிய அரசு இருந்து வரும் நிலையில் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளூர் பொறிமுறை விசாரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. பிறகு எப்படி போர்க் குற்ற மீறல்கள் விசாரணை சிறந்த முறையில் இடம்பெறும் என்று சொல்ல முடியும்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்ற சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்துவதற்கு சர்வதேச சமூகத்திற்கு எவ்வித உரிமையும் கிடையாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் அவ்வாறான விசாரணையை கேட்பது இந்நாட்டு நீதித்துறை முறைமை தொடர்பில் நம்பிக்கையை சீர்குலைப்பதற்கே ஆகும். போர்க் குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்தான விசாரணைகளை மேற்கொள்வதற்கு கடந்த அரசாங்கத்தினால் 2009ஆம் ஆண்டும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வாக்குறுதியளித்தாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

போர்க் குற்றம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியது உள்ளூர் பொறிமுறையில் மாத்திரம் என கூறிய பிரதமர் ரோம் உடன்பாட்டில் கையொப்பமிடவில்லை என்பதனால் இந் நாட்டில் ஒருவரும் போர்க் குற்றம் சாட்டப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன் கொண்டு செல்ல முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கமைய உள்நாட்டு மற்றும் சர்வதேசம் ஏற்று கொள்ளக் கூடிய விசாரணையை இந் நாட்டினுள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

வன்னி இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்ற விசாரணையை இல்லாமல் செய்வதற்கு புதிய சிங்கள அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. அதன் முதற்படியே போர்க்குற்ற விசாரணையை சர்வதேச விசாரணை என்றில்லாமல் உள்ளூர் பொறிமுறை விசாரணையாக அரசு கொண்டு வந்திருப்பது சிங்கள அரசுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். இந்த விசாரணை ஊடாக இறுதிப் போரில் போர்க் குற்ற மீறல் இடம்பெறவேயில்லை என்று இலகுவாக தனது விசாரணையை முடித்துவிடும் என்பது உண்மை. இதற்கு தமிழ்த் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு தெரிவித்தாக வரலாறு பதியப்படும்.

காணாமல் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் தமிழ் மக்கள் தெரிவிக்கும் சாட்சியங்களுக்கு பதிலளிக்க முடியாமல் ஊமையாக இருக்கிறது. ஒரு பதிவுக்காக கூட அல்லாமல் சர்வதேசத்தை மட்டுமல்ல தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்காக ஆணைக்குழு தனது வேலையைச் செய்து வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இதே நிலை தான் போர்க் குற்ற விசாரணையும்.

சர்வதேச விசாரணை தான் வேண்டும் என்று தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் புதிய அரசுடன் சேர்ந்து இருந்து கொண்டு தமிழ் மக்களுக்கு ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலே தீர்வு தொடர்பில் ஒன்றுமே பேச முடியாத சூழலில் தலையாட்டும் பொம்மை போல் தான் இவர்கள் இருக்கப் போகிறார்கள் என்பது உண்மை.

**துன்னாலைச் செல்வம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 68

# அறிவை பகிர்தலும் ஆற்றலை வளர்த்தலும்



(வி.என்.சந்திரகாந்தி)

மக்களில் அனேகம் பேர் சமூகத்துடன் எந்த ஒரு அறிவு பகிர்தலுமின்றி வாய் பேசா மௌனிகளாக ஒதுங்கி. வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இங்கு அறிவு பகிர்தல் என்று குறிப்பிடப்படுவது மக்களாகிய நாம் நண்பர்கள், சமூகம் ஆகியவர்களிடையே அறிவை குறிப்பாக தகவல்கள், செய்திகள், ஆற்றல்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதலை-யேயாகும். மனிதன் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவன். நாகரீக வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி மற்றும் அனைத்து அறிவியல் வளர்ச்சிகளுக்கும் அடிப்படையானது மனிதனின் சிந்தனைத்திறனே!

எமக்கு செய்திகள் எப்படி கிடைக்கின்றது? நிச்சயமாக அறிவு பகிர்தல் மூலமே ஆகும். உலகின் மீதான எமது பார்வை, . நாம் உலகைக்காணும் விதம், மனத்தில் ஏற்படும் பதிவு அவை மீதான எமது சிந்தனை ஆகியவையே அறிவுக்கான வித்துக்களாகும். அந்த வித்து விருட்சமாக வளர்வதில்தான் எமது சிந்தனைத்திறன் தங்கியுள்ளது. நாங்கள் எதை எவ்வளவு தூரம் அறிவோம் என்பதை நாம் அறியமாட்டோம். அறிவு பகிர்தல் ஒன்றுதான் எமது சிந்தனைகளை கூர்மையாக்க வல்லது.

அறிவே சக்தி என்று கூறுவார்கள். உண்மையில் அறிவு பகிர்தலே சக்தி என கொள்ள வேண்டும். எமது அறிவையும் அனுபவங்களையும் நாம் மற்றவர்கள் முன் வைக்க வேண்டும். எமது நண்பர்கள், சகஅலுவலர்கள், அதிகாரிகள் மற்றும் நாம் பழகும் அத்தனைபேருமே எமது கருத்துக்களுக்கான சாதக பாதக தன்மைகளை எமக்கு எடுத்துரைக்க இடம் தரவேண்டும். அப்போது எமது அறிவு கூர்மை அடைகின்றது.

அதிக அளவு அறிவு தொடர்பாடலால் நாமே மிகுந்த நன்மை அடைகின்றோம். எமது சுய ஆற்றல் அதிகரிக்கின்றது. அலுவலகத்திலும் சமூகத்தின் முன்னும் எமது திறமை வெளிப்படும், பாராட்டுக்கள் குவியும், விருதுகள் தேடிவரும்.

எமது அறிவை சரியாக உறுதி செய்து கொள்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. அவைதாம் கலந்துரையாடல். ஏனையது எழுதுதல். இந்த இரண்டு வழிகளையும் நாம் பயிற்சி செய்ய வேண்டும். கலந்துரையாடல் எமது கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்களை தோற்றுவிக்க வல்லது. அதே போன்று எழுதுவதன் மூலம் எமது கருத்துக்கள் வலுப்பெறும். ஒரு கட்டுரையை, கதையை, கவிதையை எல்லோராலும் வடிக்க முடியாது. அறிவுபூர்வமான தெளிந்த சிந்தனை அதற்கு அவசியம். உங்கள் அறிவை எடைபோடுவதற்கு கலந்துரையாடலும் எழுத்தாற்றலுமே சிறந்த வழிகளாகும். அந்த ஆற்றல்கள் ஒரு சிலருக்கே கைகூடும். எம்மால் முடியாதப்பா என்று ஒதுங்கியிருக்கக் கூடாது. முயற்சித்தால் முடியாதது எதுவும் இல்லை அல்லவா? கட்டாயமாக முயற்சிக்க வேண்டும். இந்த உலகில் வலுவானவர்களாக நாம் வளர வேண்டுமானால் எமது ஆற்றல்களை வளர்க்க வேண்டாமா? எமது இலக்கை பூர்த்தி செய்யும் திறன் எம்மில்தான் அதிகம் தங்கியுள்ளது.

எமது அனுபவங்கள் மிக மிக பெறுமதி வாய்ந்தன. அவைபற்றி நாம் அசட்டையாக இருப்போமாயின் எமது அறிவும் அதன் நிமித்தமான ஆற்றலும் எமக்கு கிட்டாமல் போய்விடும். எமக்கு கிடைக்கப்பெறும் அனுபவங்களில் நாம் முன்னர் அறியாத பல செய்திகள் புதைந்து கிடக்கும். சரியான முறையில் சிந்திப்பதன் மூலமும் அவைபற்றி மற்றவர்களுடன் கலந்துறையாடுவதன் மூலமும் அவை வெளிப்படும்.

மக்களில் அனேகம் பேரிடம் ஒரு தவறான சிந்தனை இருக்கின்றது. அது மற்றவர்களிடம் தமது அறிவுப் பற்றாக்குறையை காட்டிக்கொள்ளக்கூடாது என்ற தவறான எண்ணம். எனவே மற்றவர்களிடம் தமது ஐயங்கள் குறித்து கேள்விகள் கேட்பதை தவிர்கிறார்கள். உண்மையில் கேள்வி கேட்பவன் அந்த சில விநாடிகள் மட்டுமே முட்டாளாகின்றான். கேள்வி கேட்காதவன் அந்த ஐயம் தெளிவுறும் வரை அல்லது வாழ்க்கை பூராகவுமே முட்டாளாக இருக்க நேர்கின்றது. கேள்விகள் வாயிலாகவே பல சிந்தனைகள் உருவாகின்றன. கேள்விகள் எழும்போது தான் பல சந்தேகங்களுக்கு விடை கிடைக்கின்றது. எமது வாழ்க்கையில் எந்த ஒரு விடயத்தையிட்டும் ஐயம் இருக்குமாயின் எமது முன்னேற்றம் தடைப்படும். ஆனால் மற்றவர்களுடன் கலந்துரையாடும் போது அந்த தடை தகர்த்தெறியப்படும் என்பதை மக்கள் ஒவ்வொருவரும் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.



மக்களில் அனேகம் பேர் ஒரு அலுவலகத்தில், நிறுவனத்தில், வியாபாரதலத்தில் அல்லது ஏதாவதொரு பொதுப்பணியில் ஈடுபடுபவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களாகவோ, மேற்பார்வை-யாளர்களாகவோ, தொழில்நுட்பவியலாளர்-களாகவோ, முகாமைத்துவ உதவியாளர்-களாகவோ இன்னும் பல பொறுப்புக்களில் அமர்த்தப்பட்டிருப்பர். அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பொறுப்புக்கள் பல இருக்கும். அவற்றை திறமையுடன் கையாள்வதில்தான் அவர்களது எதிர்கால சுபீட்சம் தங்கியிருக்கும். அதற்காக அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் தமது சகாக்களுடன் தவறாது கருத்து பரிமாறல் செய்வதுதான். எந்த ஒரு பதவியில் இருப்பவரும் ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பாக தான் திட்டமிடுவது என்ன என்று பிறருக்கு கூறுவது சிறந்த வழியாகும்.

இன்னும் சொல்லப்போனால் எவரும் முன்வந்து மற்றவர்களின் உதவியைக் கோர தயங்கக்கூடாது. பல அனுபவஸ்தர்கள் ஒவ்வொரு நிறுவனத்திலும் பணி புரிந்து கொண்டிருப்பர். மற்றவர்கள் ஒரு விடயம் குறித்து எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருப்பர் என்பதை அவர்கள் ஊகிக்க முடியாதவர்களாக மௌனம் காப்பார்கள். யாராவது முன்வந்து உதவி கேட்டால் உடனே தயாள மனத்துடன் ஒத்துழைப்பு நல்குவர். அவர்களால் தெளிவுபடுத்தப்பட்ட விடயம் நிச்சயம் வெற்றியைத்தரும்.

ஆனாலும் சில பொறுப்பான கருமங்களில் வாய்மூல ஆலோசனைகள் மட்டும் பூரண அறிவைத் தரமாட்டாது. அப்படியான சந்தர்ப்பத்தில் மற்றவர்-களை அப்பணியில் இணைத்து கரும-மாற்ற அழைப்பதில் தவறேதுமில்லை. அதுவே உரிய வழியுமாகும். அதில் தராதரம் பார்க்க கூடாது.

ஒவ்வொருவரும் தாம் நிறுவனத்தில் என்ன செய்கின்றோம், ஏன் செய்கின்றோம் என்பதை மற்றவர்களுடன் கருத்து பரிமாற்றம் செய்ய வேண்டும். அது அவர்களின் எண்ணம் அல்லது திட்டம் நிறுவனத்துக்கு இசைவானதா என்பதை வெளிப்படுத்தும். நிறுவனத்தின் கொள்கைக்கு சார்பானதாக இல்லாத கட்டத்தில் முற்கூட்டியே அதனை அறிந்து கொண்டு தவிர்க்கவும் முடியுமல்லவா?

இன்னும் சொல்லப்போனால் தாம் நினைப்பவற்றை மற்றவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்யும் அதே வேளை, மற்றவர்கள் அவ்விடயம் பற்றி என்ன அறிந்து வைத்திருக்கின்றார்கள். அவ் விடயம் பற்றி என்ன எண்ணுகின்றார்கள் என்பது பற்றி கேட்டு தெரிந்து கொள்வதிலும் எந்த தவறும் இல்லை. அவர்களுக்கே தெரிந்த விடயங்கள் பற்றி ஊடுருவி கேள்வி கேட்க பலர் கூச்சப்படுவர். அது தவறு. அவரது குடும்ப பிரச்சனைகள் பற்றி கேள்வி எழுப்புவதே தவறு. அலுவலகம் நிறுவனம் போன்றவை பொதுத் தேவைகளை முன்னிட்டு பலரால் ஆக்கபூர்வமாக கொண்டு நடாத்தப்-படுவன. இரகசியம் பேணுவதல்ல அதன் பொறுப்பு. நம்பகத்தன்மையையே. அது பிரதான இலக்காகக் கொண்டிருக்கும். அந்த வகையில் ஒவ்வொரு அலுவலரும் ஊழியரும் தாம் அறியாதவற்றை பிறரிடம் கேட்டு அறிந்து கொண்டு வினைத்திறனுடன் பணிபுரிய வேண்டும்.

அப்படி அவர்களது ஆலோசனையை கேட்டறிந்து ஒரு கருமத்தை ஆற்றும் அதே சமயம் ஆலோசனை வழங்குபவர் அக்கருமத்தை நிறைவேற்ற வேண்டி நேர்ந்தால் எப்படி காரியமாற்றுவார் என்பதையும் அறிந்து கொள்வது நன்று. ஒரு இடத்தை அடைய பல மார்க்கங்கள் இருக்கலாமல்லவா?

இன்றைய எமது இளைய சமுதாயத்தை எடுத்தால் அவர்கள் மத்தியில் தேடல் மிகவும் அரிதாக காணப்படுகின்றது. பல அடிப்படை விடயங்களை மட்டுமன்றி பொதுவான சமூக நடப்புகளைக் கூட அவர்கள் தெரிந்துகொள்ளாது இருப்பது ஆச்சரியத்திற்குரியதாக இருக்கின்றது. நாலு பேர் பேசிக்கொண்டிருக்கும் போது பலரும் பலவிடயங்கள் பற்றியும் அலச முற்படுவர் அது அரசியல் பொருளாதாரம், நாகரீகம், விஞ்ஞானம், சம கால நடப்புக்கள் எதுவாகவும் இருக்கலாம். இவை பற்றி நாமும் சிறிதளவேனும் அறிந்திருந்தால் தான் அவர்களுடைய கலந்துரையாடலில் பங்குபற்ற முடியும். அவர்கள் பேசும் விடயங்களில் பங்குபற்றாமலும் நாமறிந்த விடயங்களை இட்டு வலிந்து கருத்து தெரிவித்தலும் விவாதத்தை திசை திருப்புதலும் எமது அறிவு பற்றாக்குறையை வெளிப்படுத்திவிடும்!

செய்திகளை நேரில் சென்று தேடி சேகரிக்கவேண்டிய ஒரு நிலை இன்று அற்றுப்போய்விட்டது. பத்திரிகை நிருபர்களின் தேவை கூட அருகிக்கொண்டு வருகின்றது. அந்த அளவிற்கு இணையம் இன்று செய்திகளையும் தகவல்களையும் முந்திக்கொண்டு தருகின்றது. கணனியில் பேரார்வம் கொண்ட நீங்கள் ஏன் அதன் மூலம் உங்கள் அறிவையும் ஆற்றலையும் வளர்க்க கூடாது.

---

# அது ஓர் இரவு




**சஞ்சு** புதிதாக திருமணமானவன். அவன் தனது மனைவி மீது மிகுந்த காதல் கொண்டிருந்தான். வேலை, வேலை முடிந்ததும் தன் மனைவியுடன் வெளியில் செல்வதுமாக அவனது வாழ்க்கை மிகவும் சந்தோசமாக கழிந்து கொண்டிருந்தது.

இன்று அவன் தனிமையில் இருக்கையில் அவன் அவளோடு இருந்த ஒவ்வொரு கணத்துடன் வாழ்ந்தான். வேறொன்றுமில்லை... அவள் தலை பிரசவத்திற்காக அவளது தாயாரின் இருப்பிடமான மன்னாரிற்குச் சென்றிருந்தாள்.

முதல் நாள் தான் அவன் வேலையின் நிமித்தம் கொழும்பு சென்று வந்திருந்தான். வந்தவுடன் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக அவன் அலுவலகம் சென்றிருந்தான். அவனே வாகனம் ஓட்டி சென்றமையால் மிகுந்த அசதியாக இருந்தது அவனுக்கு. மாலை நான்கு மணியளவில் உத்தரவைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பியிருந்தான் சஞ்சு.

வீடு வந்து சேர்ந்தவுடன் தன் அன்பான மனைவிக்கு தொலைபேசி அழைப்பு விடுத்த போது அவளோ தான் வைத்தியசாலையில் நிற்பதாகவும் நோர்மல் செக்கப்பிற்கு வந்ததாகவும் தெரிவித்தாள். தன்னிடம் விடயத்தை கூறாமையால் சற்று கோபப்பட்டவன் போல் நடித்து, தொலைபேசியை துண்டித்தான். துண்டித்த வேளையில் அவனது உதடுகள் புன்முறுவல் பூத்தன. ஒரு மணி நேரத்திற்கு அலாமை சரி செய்துவிட்டு நித்திரைக்குச் சென்றான் சஞ்சு.

தொலைபேசி மணி ஒலித்ததைக் கேட்டு திடுக்கிட்டு எழும்பியவன் நேரம் 11 ஆகியதை கண்ணுற்றான். இவ்வளவு நேரம் உறங்கிவிட்டோமா? என கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்தவன் உடன் தொலைபேசியில் யார் அழைப்பினை ஏற்படுத்தியது என தேடினான். தன் மனைவியிடமிருந்தே 12 அழைப்புகள் வந்திருந்தன. தான் பேசியதால் தான் எடுத்திருப்பாள் என எண்ணியவன் அழைப்பினை ஏற்படுத்திய போது மனைவியின் பிரசவத்தில் ஏதோ சிக்கல் இருப்பதை அறிந்து கொண்டான்.

தனக்குத் தேவையான இரண்டு செட் உடுப்புகளை எடுத்துக் கொண்டவன் தனது மேலதிகாரிக்கு நிலைமையை மின்னஞ்சல் மூலம் தெரிவித்து விட்டு உடன் புறப்பட்டான். அவன் வெளிக் கதவை சாத்தும் போது சரியாக அவர்களின் வீட்டு மணிக்கூடு டிங் டிங் என பன்னிரெண்டு தடவைகள் அடித்தது. சென்று காரை ஸ்டார்ட் செய்தால் காரோ மாட்டேன் என்றது. இறங்கிச் சென்று செக் செய்து பார்த்தவன் ஒரு பிழையும் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு மீண்டும் ஸ்டார்ட் செய்தான். வண்டி புறப்பட்டது.

அவனது எண்ணம் முழுவதும் தனது மனைவி குறித்தே இருந்தது. கார் 120 இல் பறந்து கொண்டிருந்தது. மெல்ல காரின் வெளிச்சம் இருட்டைக் கிழித்துக் கொண்டு வழி ஏற்படுத்திக் கொடுத்தது. ஒரு தடவை கார் ஆடி பின் சரியாக ஓடத் தொடங்கியதும் சற்று பயந்து தான் போனான் சஞ்சு. எனினும் ஏதேனும் கல் அல்லது குழியாக இருக்கும் என மனதை தேற்றினான். ஓரிரு நிமிடங்களில் அவன் கையில் கட்டியிருந்த நூல் கழன்று விழுந்தது. குனிந்து எடுத்தவன் வாகனத்தை செலுத்துதில் கருத்தாய் இருந்ததால் நூலை ஒரு பக்கமாக வைத்தான். அவனது சிந்தனை செயற்பட ஆரம்பித்தது. ஏன்? ஏன்? ஏன் நூல் கழன்றது? விடையறியா மனம் சற்று குழம்பியது.

நேரே செல்ல வேண்டிய வண்டி திடீரென்று அறியாத பாதை ஒன்றுக்குள் சென்றது. சுதாகரித்தவன் இதுவல்லவே நான் செல்ல வேண்டிய பாதை என அறிந்தான். சில நொடிகளில் ஓர் வயதானவர் இடை மறித்தார். கால் தானாகவே ப்ரேக் போட்டது. ஏனெனில் அவர் தெய்வத்தன்மை பொறுந்திய ஒருவராக காணப்பட்டமையே ஆகும்.

தொடரும்...

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## திரை விமர்சனம் "வாலு"

தமிழ் சினிமாவின் 80 வருட பாரம்பரியம் கெடாதபடி ஹீரோ இந்த படத்திலும் வேலைக்கு போகாமல் நண்பர்களுடன் ஜாலியாக ஊர் சுற்றி வருகின்றனர். அப்பா பேச்சை கேட்பது கிடையாது, ஆனால், அப்பா மகன் மீது பாசத்தை அள்ளி தெளிக்கிறார். (டி.ஆர் சாரை பார்த்தது போலவே இருக்கும்). அம்மா பேச்சை கேட்பது இல்லை, தங்கச்சியை சண்டைக்கு இழுப்பது என சிம்பு மிடில் கிளாஸ் பையனாக வலம் வர, வழக்கம் போல் ஹன்சிகாவை பார்த்து முதல் பார்வையில் காதல் தொற்றிக்கொள்ள, விரட்டி விரட்டி காதலிக்கிறார். பின் ஒரு கட்டத்தில் ஹன்சிகாவிற்கு சூழ்நிலை காரணமாக கட்டப்பஞ்சாயத்து செய்யும் அவருடைய தாய் மாமாவுடன் திருமணம் நிச்சியக்கப்பட்டது சிம்புவிற்கு தெரிய வர, எப்படி இதையும் மீறி ஹன்சிகாவை சிம்பு கரம் பிடித்தார் என்பதை கலகலப்பாக கூறியிருக்கிறார் இயக்குனர் விஜய் சந்தர்.

சிம்பு எத்தனை வருடங்கள் கழித்து வந்தாலும் அதே எனர்ஜி. அவர் வரும் ஓவ்வொரு காட்சிகளிலும் விசில் பறக்கிறது. அதிலும் லவ் பெயிலியர் கிங் என்பதால் சிம்பு பேசும் பல வசனங்கள் இன்றைய இளைஞர்களின் தேசிய கீதம் தான். சந்தானம் தான் படத்தின் அடுத்த ஹீரோ என்று சொல்லலாம், அவர் வாய் திறந்தாலே மக்கள் சிரிக்க ஆரம்பித்து பிடுகிறார்கள். சிம்புவிற்கு ஏற்ற பக்கா ஜோடி சந்தானம். ந்தானத்திற்கு துணையாக VTV கணேஷ் கரகர குரலால் கலக்கியுள்ளார். அவரே அப்படி இருக்கும் போது ரியல் லைப் ஜோடியாக இருந்த ஹன்சிகா சொல்லவா வேண்டும்? செம்ம கெமிஸ்ட்ரி சார்.

இதையெல்லாம் விட ஆச்சரியம் இசை? இதுவரை தமன் இசையமைத்த படங்களிலேயே இது தான் பெஸ்ட். பின்னணி இசையில் மிரட்டியுள்ளார் தமன். இத்தனை வருடம் கழித்து வந்தாலும் இன்றைய காலகட்டத்திற்கு பொருந்தும் காட்சிகள். கிளைமேக்ஸ் சண்டைக்காட்சி எதற்கு என்று இயக்குனருக்கே தெரியவில்லை போல, படத்தில் வில்லன் என்று ஒருத்தன் இருக்கனும் என்பதற்காக ஒருவரை வைத்துள்ளார்கள்.

மொத்தத்தில் ரசிகர்கள் மனதின் ஈர்ப்பு தெரிந்தவர் இந்த நடிகர்.

## விஜய் சந்தரின் இயக்கத்தில் சிலம்பரசன், ஹன்சிகா நடிக்கும்



## ரஜனியின் தோற்றம் எது??



கபாலி படத்தில் ரஜினியின் கெட்அப் எப்படி இருக்கும்? ரசிகர்களின் மில்லியன் டாலர் கேள்வி இது. வலையுலகிலும் திரையுலகிலும் இதே பேச்சாக இருக்கிறது. ரசிகர்கள் ரஜினியின் தோற்றம் இப்படித்தான் இருக்கக் கூடும் என்று கற்பனை செய்து அதற்கு ஒரு படிவமும் கொடுத்து உலவவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் 20 ஆண்டுகளுக்கு முன் வந்த தர்மதுரை படத்தின் ஆரம்ப மற்றும் இறுதிக் காட்சிகளில் வருவது போலத்தான் இந்தப் படத்தில் ரஜினி தோன்றப் போகிறார் என செய்திகள் கசிந்துள்ளன. ரஞ்சித் இயக்கும் இந்தப் படத்தின் முதல் தோற்ற போஸ்டர் எதிர்வரும் செப்டம்பர் 17ம் தேதி வெளியாகவிருக்கிறது.

**சஞ்சீவனின் இயக்கத்தில் வெளியான "தாக்க தாக்க" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......**



## சூரியை அழவைத்த அஜித்

அஜித் படத்தில் நடிப்பதையே தன் வாழ்வின் லட்சியமாக கொண்டிருந்தார் சூரிக்கு எப்படியோ சிவா மனது வைத்ததால் தல-56 படத்தில் நடிக்கும் வாய்ப்பு அமைந்தது. சூரியின் பிறந்தநாளை தல-56 படக்குழு கொண்டாடிய போது. அஜித் நேராகவே சூரியை சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து கூறியுள்ளார். இந்த சந்தோஷத்தில் சூரி திக்குமுக்காடி விட்டாராம். சந்தோஷத்தில் அழுதே விட்டாராம் சூரி.

## பாகுபலி தோல்வியடைந்ததா!!



ராஜமௌலி இயக்கிய பாகுபலி படம் வெளியாகி வசூலில் சாதனை படைத்ததோடு மக்களின் அமோக வரவேற்பையும் பெற்றுள்ளது. இப்படம் வெளியாகி 50 நாட்கள் கடந்துள்ள நிலையில், படக்குழுவினர் அதனை கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில் ராஜமௌலி, 50, 100, 175 நாட்கள் என்பதெல்லாம் கடந்த காலத்தில் நடந்தது. ...யிரம் திரையரங்குகளில் ...யானதால் 3, 4 வாரங்கள் ஓடுவது ... நினைக்க கவலையாக இருக்கின்றது என்றார்.

## சாந்தனு - கீர்த்தி திருமணம்

திரைப்பட இயக்குநரும்,, நடிகருமான பாக்யராஜின் மகன், நடிகர் சாந்தனு - பிரபல நடன இயக்குநர் ஜெயந்தி - விஜயகுமார் தம்பதியரின் மகள் கீர்த்தி ஆகியோரின் திருமணம், சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கேரளா ஹவுஸில் இன்று நடைபெற்றது. இந்த திருமண நிகழ்வில் நடிகர்கள் சத்யராஜ், பிரபு, வெங்கடேஷ், விஜய், கார்த்தி, விஷால், விக்ராந்த், நடிகைகள் ரேவதி, சுஹாசினி, குஷ்பூ, ஜோதிகா, சுகன்யா, இயக்குனர்கள் மணிரத்னம், பார்த்திபன், பாண்டியராஜன், தரணி மற்றும் பல திரைப்பட கலைஞர்களும் பங்கேற்றனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

MOBILE

## Galaxy S6 Edge plus



ஸ்மார்ட்போன்களின் சந்தையில் சாம்சுங் நிறுவனம் மற்ற நிறுவனங்களை விட முன்னணியில் உள்ளது எனவே கூறலாம்.

இந்நிலையில் மற்ற நிறுவனங்கள் சந்தையை கைப்பற்றும் போட்டியில் வேகமாக முன்னேற அதற்கு தக்க பதிலடியாக தனது Galaxy S6 Edge plus கைப்பேசியை அறிமுகம் செய்துள்ளது. பிரமாண்டமான 5.7 இன்ச் தொடுதிரையுடன் அறிமுகமாகியுள்ள இந்த கைப்பேசி மேலும் பல வசதிகளுடன் களமிறங்கியுள்ளது. இதன் 4 ஜிபி ராம் மூலம் பல்வேறு அப்ளிகேசனையும் கண்ணிமைக்கு வேகத்தில் நாம் இயக்க முடியும்.

ஆண்ட்ராய்ட் 5.1 (Lollipop) வசதியும் இதற்கு துணை புரிகிறது. மேலும் இதன் 16 மெகாபிக்சல் பின்பக்க கமெரா மூலம் துள்ளியமான காட்சிகளை பெறலாம். செல்பிக்கு என்றே 5 மெகாபிக்சல் முன்பக்க கமெராவும் இணைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக 4k எனப்படும் மிக துள்ளியமான வீடியோக்களை நாம் எடுக்கமுடியும்.

மேலும் எடுத்த உடனேயே நொடிப்பொழுதில் யூ டியூப்பில் பதிவேற்றம் செய்யும் வசதியும், அதிகமான புகைப்படங்கள், வீடியோக்கள் போன்றவற்றை சேமிக்கும் வகையில் 32 ஜிபி மெமரியும் கைப்பேசியுடனேயே வழங்கப்பட்டுள்ளது.

INFOMATION TECHNOLOGY

## வாட்ஸ்ஆப் புதிய அம்சங்கள் : நீங்கள் அப்டேட் செய்தாச்சா..?

WhatsApp

ஒரு மாத சோதனைகளுக்கு பின் வாட்ஸ் ஆப் செயலியின் வி2.12.250 வெர்'ன் ஆண்ட்ராய்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி புதிய அப்டேட் மூலம் வாட்ஸ்ஆப் நிறுவனம் தனது பயனாளிகளுக்கு சில புதிய அம்சங்களை வழங்கி இருக்கின்றது. அதன் படி புதிய அப்டேட் மூலம் அதிகப்படியான எமோஜிக்கள் மற்றும் வாய்ஸ்கால் மேற்கொள்ளும் போது குறைந்த அளவு டேட்டா மட்டும் செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அட்டகாசமான வசதியுடன் OUTLOOK IOS

Outlook

Outlook மின்னஞ்சல் சேவையானது மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வருகின்றமை அறிந்ததே.

இச் சேவையினை மொபைல் சாதனங்களில் பயன்படுத்துவதற்காக அப்பிளிக்கேஷன்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நிலையில் iOS சாதனங்களுக்காக புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பதிப்பில் மின்னஞ்சலில் இணைக்கும் கோப்புக்களை நேரடியாகவே எடிட் செய்யும் வசதி தரப்பட்டுள்ளது. அதாவது மின்னஞ்சல்களுடன் இணைக்கப்படும் (Attach) Word, Excel மற்றும் PowerPoint போன்ற கோப்புக்களை மொபைல் சாதனங்களினூடாக ஒன்லைனில் வைத்தே எடிட் செய்யும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இப் புதிய பதிப்பினை App Store தளத்திலிருந்த தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ள முடியும்.

OTHER

## ஜெர்மனியின் கார்பிளேன்... அடுத்து ஒரு புதிய பறக்கும் கார்!



டெர்..பியூஜியா, ஏரோமொபில் போன்ற பறக்கும் கார்கள் குறித்த தகவல்களை டிரைவ்ஸ்பார்க் தளத்தில் தொடர்ச்சியாக படித்து வருகிறீர்கள். இந்த திட்டங்களின் வேகம் விரைவில் பறக்கும் காரை நனவாக்கும் என்று கருதப்படுகிறது. இந்த வரிசையில், தற்போது புதிய பறக்கும் கார் ஒன்று இணைந்திருக்கிறது. ஜெர்மனியில் தயாராகி வரும் இந்த புதிய பறக்கும் காருக்கு கார்பிளைன் என்று பெயரில் அழைக்கின்றனர். ஐரோப்பிய யூனியனின் நிதி உதவி திட்டத்தில் உருவாகி வரும், இந்த புதிய பறக்கும் கார், இன்னும் இரு ஆண்டுகளில் வர்த்தக ரீதியில் வர இருப்பதாக கணிக்கப்படுகிறது.

## முப்பரிமாண பிரிண்டர் அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை!

**பிரிண்டிங் தொழில்நுட்ப**த்தில் முப்பரிமாண (3D) பிரிண்டர்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை அறிந்ததே. ஆனால் முதன் முறையாக ஒரே நேரத்தில் 10 வகையான பொருட்களை பிரிண்ட் செய்யக்கூடிய முப்பரிமாண பிரிண்டரை கண்டுபிடித்து அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

MultiFab எனும் இப் பிரிண்டரின் கண்டுபிடிப்பில் Computer Science மற்றும் யுசவகைைஉயைட Intelligence Lab (CSAIL), Massachusetts Institute of Technology (MIT) ஆகிய நிறுவனங்களில் விஞ்ஞானிகள் தமது பங்களிப்பை செய்துள்ளனர்.



## HTML தமிழில்....



HTML கற்றுக்கொள்வதற்கு முன்பு அதைப்பற்றியதொரு அடிப்படையான விளக்கங்களை முதலில் தெரிந்து கொள்வோம்.

HTML -I கற்றுக்கொள்ள வேண்டுமெனில், முதலில் உங்கள் கணிப்பொறி இணையத்துடன் எவ்வாறு ஊடாடுகிறது (Interacts) என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

"Internet" என்னும் சொல் Interconnection மற்றும் Networks என்பதிலிருந்து உருவானது. இதைச் சுருக்கமாக நாம் 'net' என்று அழைக்கிறோம். நம்மில் பெரும்பாலானவர்கள் முழுவார்த்தையும் உபயோகிப்பது கிடையாது. இன்டர்நெட் என்று சொல்வதைக் காட்டிலும் நெட் என்று சொல்வதையே வழமையாக்கிக் கொண்டுள்ளோம் அல்லவா?

இணையம் என்பது என்ன?

இணையம் என்பது வலையமைப்புகளின் வலையமைப்பாகும். இணையத்தில் நீங்கள் கணிப்பொறிகளைக் காணலாம்.

Web என்று அழைக்கப்படும் உலக விரி வலையில் (World wide web - www) ஏராளமான ஆவணங்கள் நிறைந்திருப்பதைக் காணலாம். உலக விரி வலை (WWW)என்பதே ஆவணங்களின் தொகுப்பாகும்.

WWW என்பது விரிந்திருக்கும் உலகை சிலந்தி வலையைப்போன்று தொடர்ந்து இணைப்பில் இருக்குமாறு பின்னி வைத்திருப்பதைப் போன்றது. சிலந்தி தன் வலையில் எந்தவொரு இடத்திலிருந்தும் மற்றொரு பாதைக்கு, இடத்திற்கு எளிதாக செல்வதைப்போல.. இணையத்திலும் ஒரு இடத்திலிருந்து மற்ற இடங்களில் இருக்கும் தகவல்களை காண முடியும் என்பதால்தான் இதற்கு வலை எனப் பெயர் வந்தது.

இணையத்தில் பகிர்ந்துகொள்ளப்படும் இந்த ஆவணங்கள் வலைப்பக்கங்கள் (Web Pages) என்றும் அழைக்கபடுகிறது.

இந்த வலைப்பக்கங்கள்தான் நாம் பயிலப்போகும் HTML (Hyper Text Markup Language) எனப்படும் கணிப்பொறி மொழியில் எழுதப்பட்ட மின்னணு ஆவணங்களாகும் (Electronic Documents).

**நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.**

## கணனி பற்றி கண்ணோட்டம் - அதன் வரலாறும், ஏற்பட்ட மாற்றங்களும்

ஆதலால்தான் மகிந்த சிந்தனையின் செயல்வடிவம் இந்நாட்டின் கல்வித்துறையிலும் அதிசயிக்கத்ததாக அமைய வேண்டும் என்று கூறப்படுகின்றது.

அந்தவகையில் "இலவசக் கல்விக்காக எமது பிள்ளைகளுக்குள்ள உரிமையை எந்த வகையிலும் இல்லாதொழிக்கமாட்டேன். நாடு பூராவுமுள்ள சகல மகா வித்தியாலயங்கள் மற்றும் மத்திய மகா வித்தியாலயங்களுக்குத் தேவையான உயர்தர விஞ்ஞானக்கூடம், சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் கற்கும் அமைப்பைக் கொண்ட மொழிநிலையம், கணனி நிலையம், நூலகம், விளையாட்டரங்கம் உட்பட்டதாகச் சகல வசதிகளையும் பெற்றுக் கொண்டு பூரணமான பாடசாலைகளாக அவற்றை உயர்நிலைக்கு கொண்டு வருவேன் (மகிந்த சிந்தனை- 2005 - பக்கம் 72)

பாடசாலைக் கல்வி முறையானது எதிர்வரும் அபிவிருத்தித் தசாப்தத்தின் பொருட்டாகவன்றி பல நூற்றாண்டுகள் தொலைதூரம் செல்லக்கூடியவாறே நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

தற்போது கல்விக்காக ஒரு சிறுவர் செலவழிக்கின்ற காலம் எவ்வளவு தூரத்திற்கு எதிர்காலத்திற்கு பயன் உள்ளதாக இருக்கின்றது என்பது பற்றி ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

சிறுவர்கள் தமது எதிர்காலத்தினுள் வழிதவறாதவாறு பாடசாலை வகுப்புகளின் அளவையும் பரீட்சை முறையையும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் (மஹிந்த சிந்தனை 2010- பக்கம் 78)" என்று கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இன்று ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஒரு பாடசாலை தெரிவு செய்யப்பட்டு கணனியின் ஊடாக கற்பிக்கின்ற மென்பொருளை தயாரித்து வழங்கிவரும் கல்வியமைச்சு குறிப்பாக ஆரம்பக்கல்வியில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்காக கொண்டு ஆசிரியர்களுக்கும், ஆசிரிய ஆலோசகர்களுக்கும் பயிற்சிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

தற்காலத்தில் கணனி என்பது மிகவும் தேவையான ஒன்றாகி விட்டுள்ளது. இது எதிர்காலத்தில் கணனியில் கற்பதற்கான வசதிகளை மேலும் வலுப்படுத்துவதற்குதவும் என்றே கூறலாம்.



முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக் கதை

# மணப்பொருத்தம்

– திருமலை. வீ. என். சந்திரகாந்தி –

இப்போ எல்லாம் வெளிநாடுதான்! ஒரு மாப்பிள்ளை பார்க்கவேண்டுமா? அதுவும் வெளிநாடு என்றால் தான் திறம்! வெளிநாட்டு மாப்பிள்ளைமார் பற்றி எத்தனை எத்தனை கதைகள் அடிபடுகின்றன. அனுபவித்து துன்பப்படுகின்ற பெண்களே, 'சகோதரிகளே ஏமாறாதீர்கள்' என்று புத்தகம் கூட அடித்து வெளியிட்டுள்ளார்கள். யார் தான் காதில் போட்டுக் கொண்டார்கள்.

கௌரியின் விவாகம் பல தடங்கல்களுக்கு உள்ளாகி காலதாமதமாகிக்கொண்டிருந்தது. பக்கத்து வீட்டுக்கு வாடகைக்கு குடியிருக்க வந்த ஜெயந்தியும் அவளது கணவனும் வந்து மூன்று மாத காலம் கூட ஆகவில்லை. கௌரிக்கும் ஜெயந்திக்கும் இடையில் வலுவானதொரு நட்பு உருவாகியது.

கௌரி அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய் உதவி ஒத்தாசைகள் புரிந்து வந்தாள்.

'ஜெயந்தி அக்கா... என்ன புதிதாக தொலைக்காட்சி பெட்டியொன்று!'

"ஓம் கௌரி" இது எனது அண்ணன் முறையான ஒருத்தர் அன்பளிப்புச் செய்திருக்கிறார். வெளிநாட்டில் இருந்து வந்திருக்கின்றார். பெண்பார்க்கும் படலம் நடக்கிறது. கலியாணம் முடிந்தால் பெண்ணையும் அழைத்துக்கொண்டு திரும்பி போய்விடுவார்."

கௌரியின் மனதில் பற்பல கற்பனைகள் வண்ணத்துப்பூச்சி யென சிறகடித்தன. இதயத்தில் பெண்மையின் மென்மையான உணர்வுகள் பூத்துக்குலுங்கின. ஜெயந்தி கூறிய சேதியை கதையோடு கதையாக பெற்றோரின் காதில் போட்டு வைத்தாள் கௌரி.

ஜெயந்தி ஊடாக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. ஜாதக பொருத்தம், சீதனம் எல்லாமே சரிவந்து விட்டன. பெண் பார்க்கும் படலமும் விமரிசையாக நடந்தது. சங்கரின் கம்பீரமான தோற்றத்திற்கு கௌரியின் அழகும் மிடுக்கும் குறைந்ததல்ல என்பதை அவனது பெற்றோர்களும் ஏற்றுக்கொள்ளவே, அடுத்த கட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

சங்கரும் கௌரியும் தனியே சந்தித்து கருத்து பரிமாற சந்தர்ப்பம் தரப்பட்டது...

'கௌரி.... உங்களுடைய அழகும் அடக்கமும் எனக்கு நன்றாக பிடித்திருக்கின்றது."

கௌரியின் மனதில் பல்லாயிரக்கணக்கான வர்ண மத்தாப்புக்கள் ஒளி விட்டு பூத்து பிரகாசித்தன...

"நீங்கள் இல்லாவிட்டால் எனக்கு இந்த வாழ்க்கையே தேவையில்லை என்று உங்களை கண்டவுடனேயே தீர்மானித்துவிட்டேன்." கௌரியும் பதிலிறுத்தாள்.

சங்கருடைய மனம் நிறைந்தது. ஒரு பெண் மட்டுமல்ல ஆண்கூட புகழ்ச்சிக்கு மயங்குகின்றான்...

"என்றாலும் கௌரி.... வாழ்கை என்பது இலகுவானதல்ல. பல மேடு பள்ளங்களை உடையது. பொறுமை.... விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை.... மன்னிக்கும் சுபாவம்.. எந்த கஷ்டம் வந்தாலும் எதிர் நீச்சல் போடும் மனத்தைரியம்...' சங்கர் கூறிக்கொண்டே போனான். கௌரி இடைமறித்தாள்... ' இதெல்லாம் சரியான வயது .... பராயம் வராதவர்கள் சிந்திக்க வேண்டிய விடயங்கள். விவாகத்திற்கு உரிய பராயத்துக்கு வந்து விட்ட எங்களுக்கு இவையெல்லாம் புரியாமல் இருக்குமா?

கௌரி கூறுவது மிக மிகச் சரியென்றே சங்கருக்கு பட்டது.

"உம்முடைய கருத்தை நான் பாராட்டுகின்றேன் கௌரி. ஆனால் மறுபக்கத்தில் மிக மிக இளவயதினள் ஒருத்தி தான் கடந்து வந்த குறுகிய வாழ்க்கை பயணத்தில் ஆபத்துக்களையும் சோதனைகளையும் சந்தித்திருக்க கூடிய சந்தர்ப்பம் மிக மிக குறைவு. ஆனால் உமது வயது முதிர்ச்சிக்கு நீர் பல அனுபவங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் முகம்கொடுத்திருக்கவேண்டி ஏற்பட்டிருக்கலாம். அப்படியான சம்பவங்கள் எதுவும் எமது எதிர்கால வாழ்வுக்கு இடையூறாக வரும் என நீர் நினைத்தால் எனக்கு இப்போதே சொல்லிவிடலாம்."

கௌரி கால் பெருவிரலால் தரையைக் கீறினாள்.

"அப்படியான அனுபவங்களோ சோதனைகளோ எனக்கு ஏற்படவில்லை." சங்கரின் மனம் இந்த பதிலால் குளிர்ந்தது.

'உண்மையைச் சொல்லப்போனால் கௌரி.... உமது அழகுக்காக என்ன விலை வேண்டுமாயினும் கொடுக்கலாம். நானும் நீரும் ஒன்று சேர்வதற்கான தடையென எனது பெற்றோர் எண்ண கூடிய காரணிகள் எதுவும் இருந்தால் கூட நான் அவற்றை மறைத்தாயினும் உம்மை அடைந்தே தீருவேன்".

ஒரு முத்த பரிமாறலுடன் அவர்கள் பிரிந்தார்கள். மீண்டும் ஒன்று சேர்வதற்காக,

ஒரு சில வாரங்களிலேயே சங்கர் கௌரி விவாகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஜெயந்தி முன்னின்றுழைத்தாள். சங்கர் கௌரிக்கான படுக்கையறை அலங்காரம் கூட அவளது மேற்பார்வையில் அழகுற அமைக்கப்பட்டது.

வாழ்கையின் சுவாரசியமானதும் இன்பமூட்டுவதுமான அத்தியாயங்களை தொடங்கி வைப்பதற்காக சங்கரும் கௌரியும் மீண்டும் ஒருவரையொருவர் தனியறையில் எதிர்கொண்டனர்.

"கௌரி... உம்மை நான் எப்படியாவது மனைவியாக அடையவேண்டும் என்ற ஆசையில் நான் அன்று உம்மிடம் ஒரு உண்மையை மறைத்துவிட்டேன். இப்போதாகிலும் நான் அந்த உண்மையை கூறிவிட வேண்டும் என்று எனது மனசாட்சி உறுத்துகின்றது. நான் வெளிநாட்டு மாப்பிள்ளை இல்லை கௌரி."

கௌரிக்கு எதிர்பாராத அதிர்ச்சி. சாதாரணமாக ஆண்கள் பல பெண்களுடன் பலவிதமாக பழகியிருப்பார்கள். அதை தனது மனைவியிடம் மறைக்கவும் தான் செய்வார்கள். ஆனால் இப்படியொரு குண்டு வந்துவிழும் என்று அவள் கருதியிருக்கவில்லை.

"அப்ப ஜெயந்தி அக்கா சொன்னது!...?"

"நான் வெளிநாடு போகவேண்டும் என முடிவெடுத்து தலைநகரில் தங்கியிருந்து வருடக்கணக்கில் முயற்சிகள் செய்தது உண்மை. ஆனால் எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஊரில் பலர் வெளிநாடு சென்றுவிட்டதாக நம்பினார்கள். ஜெயந்தியும் அப்படித்தான் எண்ணியிருந்தாள். ஜெயந்தி வாயிலாக உம்மை பற்றி அறிந்த பெற்றோர் எனக்கு தகவல் தந்தார்கள். நான் செலவை பார்க்காமல் தொலைக்காட்சி பெட்டியொன்றை விலைகொடுத்து வாங்கி ஜெயந்திக்கு அன்பளிப்பு செய்ததுடன். விவாகம் நிமித்தமாக நான் நாடு திரும்பிவிட்டதாக தகவல் கொடுத்தேன். அவளும் அதனை முற்று முழுதாக நம்பினாள்.

பெண்களுக்கு கதையை கொடுத்தால்



அவர்களுடைய வாய் சும்மா கிடக்காது என்று கணக்கு பண்ணி அப்படி செய்தேன். நான் நினைத்தபடியே எல்லாம் நடந்தது. நான் வெளிநாடு போகும் தீர்மானத்திலேயே இன்னும் இருப்பதால் இப்படி செய்தது உம்மை ஏமாற்றியதாக இருக்காது என்று நம்பினேன். இந்த விடயத்தில் நீர் என்னை மன்னிக்க வேண்டும் கௌரி."

கௌரி தனக்குள் சிரித்துக்கொண்டாள்...

ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்யவும் புரிந்து கொள்ளவும் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இதனை கூறாது தன்னை அவனது மனைவியாக்கிக் கொள்ளுமளவிற்கு அவன் தன்மேல் கொண்ட ஆசையையும் ஆர்வத்தையும் இரசித்த கௌரி....

"இதெல்லாம் பெரிய விஷயமே அல்ல. நான் ஐந்து வருட காலம் அரபு நாடொன்றில் வீட்டுப்பணிப் பெண்ணாக பணிபுரிந்து பல இலட்சக்கணக்கில் பணம் சேமித்துளேன். நாம் மகிழ்ச்சியாக வாழ்கை நடாத்த அந்த பணம் போதுமானது."

கௌரி கூறவும்... சங்கருக்கு பஞ்சணையே சுழன்றது!

# மறுக்கப்பட்ட விடிவெள்ளிகள்

சஞ்சயன் செல்வமாணிக்கம்

மோட்டார்சைக்கில் நகர்ப்புறத்தைத் கடந்து கிறவல் பாதையில் ஓடிக்கொண்டிருந்தது. வெய்யிலும் வெம்மையான காற்றும் முகத்திலடிக்க சுற்றாடலை அவதானித்துக்கொண்டிருந்தேன். மனம் எதிலும் லயிக்கவில்லை. என்னை அழைத்துச் சென்றவர் அடிக்கடி தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தார்.

மோட்டார் சைக்கில் மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தது. தார்ப்பாதைகள், சீமெந்துப்பாதைகள், கிறவற்பாதைகள் என்றில்லாமல் ஒற்றையடிப் பாதைகளினூடாகவும், வெட்டை வெளிகளினூடாகவும் ஒரு மணிநேரம் ஓடிய பின் ஒரு மரத்தடியில் சற்று இளைப்பாறிய பின் மீண்டும் ஒரு அரை மணிநேரப் பயணம்.

வீடு அருகில் இருப்பதாகவும் என்னை இவ்விடத்தில் நிற்கும்படியும் கூறி என்னை அழைத்துவந்தவர் அந்த பெண்போராளியின் வீட்டுக்குச் சென்றார். என்னை அழைத்துச் செல்லாததன் காரணம் அந்து போராளியும் அவர்களின் குடும்பத்தாரும் முன்பின் அறியாத என்னைக் கண்டால் இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் என்று கருதலாம், எதையும் பேசப் பயப்படலாம் என்று அவர் அறிந்திருந்தார்.

நிமிடங்கள் மிகவும் மெதுவாகவே கடந்துபோய்க்-கொண்டிருந்தது. ராணுவத்தினர் தண்ணீர் வண்டி ஒன்றினை ஓட்டிப்போயினர். ஒரு இ.போ.ச பஸ் புழுதியை இறைத்தபடியே. கடந்து போனது. வீதியெங்கும் கிறவல் தூசு செம்மஞ்சலாக பறந்துகொண்டிருந்தது.

தூரத்தில் இருந்து எனது நண்பர் கையைக் காட்டி அழைத்தார். அவரை நோக்கி நடக்கலானேன். ஒரு வீட்டு முற்றத்தில் ஒருவர் அமர்ந்திருந்தார். ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக்கொண்டோம். அருகிலேயே அவரின் உறவினர்கள், தாயார் நின்றிருந்தார்கள்.

தெளிந்த முகம். தெளிவான வார்த்தைகள், வசீகரமான முகம், மீசை என்றிருந்தார். பொது விடயங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோம். இறுதி யுத்தத்தின் பின் புனர்வாழ்வு முடிந்த பின் ஒரு பாதிரியார் இவரை பாதுகாத்திருக்கிறார். பாதிரியார் விலாசத்தைப் பெற்று குடும்பத்தினருக்கு ஒரு கடிதம் எழுதிய பின் குடும்பத்தினர் வன்னி சென்று இவரை அழைத்துவந்திருக்கின்றனர். இதைக் கூறியபோது அத் தாயின் அழுகை கலந்து தளுதளுத்த குரல்ஒலி என் உயிரை ஊடுருவிப்பாய்ந்தது.

சற்று நேரத்தின் பின் அத்தாய் "தம்பி, உன்ட கண்ணை ஒரு தரம் அண்ணைக்கு காட்டு" என்றார். அவர்கள் பயந்திடுவார்கள் என்றார் அவர். நான் நீங்கள் விரும்பினால் அகற்றுங்கள் என்றேன். அப்போது அவர் தன் கண்ணை மூடியிருந்த துணியினை அகற்றினார்.

நான் சொல்வதை நம்பினால் நம்புங்கள். அவர் இரண்டு செக்கன்களின் பின் கண்ணை மீண்டும் கறுப்புத் துணியால் மூடிக்கொண்டார். என்னால் ஒரு செக்கன் கூட அவரின் கண்கள் இருந்த இடத்தைப் பார்க்க முடியவில்லை. இரண்டு கண்கள் இருந்த இடங்களிலும் 3 - 4 சென்டிமீற்றர் அளவுக்கு இரு குழிகள் இருந்தன. கண்கள் இல்லாத அவரது உருவம் பயங்கரமாக இருந்தது.... சுதாரித்தக்கொள்ள சில நிமிடங்களாயின.

"பார்த்தீங்களா அண்ணை .. அது தான் சொன்னேன் என்றார் அவர்" 2008ம் ஆண்டு ஒரு செல் அவரின் கண்களை பறித்துப்போயிருக்கிறது.

சற்று நேரம் அங்கு பேச்சு இருக்கவில்லை. மெதுவாய் அவரின் கையைப் பற்றிக்கொண்டேன். அவரும் ஆதரவாய் எனது கையைப் பற்றிக் கொண்டார்.. பார்வையின் மொழியோ, பேசும் மொழியோ எதுவும் அங்கிருக்காவிடினும் எம் கைகளின் ஸ்பரிசங்கள் பேசிக்கொண்டன. எம் வாழ்வுக்காய் போராடிய ஒரு இளைஞன் வாழ்வின் வசந்த காலத்தில் இருக்கவேண்டிய வயது அவருக்கு, ஆனால் வாழ்வையே தொலைத்துவிட்டுவந்து நிற்கிறார். தொழில் இல்லை வருமானமில்லை, தந்தையில்லை, தாயாரின் மற்றும் தங்கையின் குடும்பத்தினர் மட்டுமே இருக்கிறார்கள்: அவரின் எர்காலத்தை சற்று சிந்தித்துப்பார்த்தேன். அவருக்கு ஒரு 25 வயதிருக்கலாம். மிகுதிக் காலத்தை எப்படி கழிக்கப் போகிறார் என்று எனக்குப் புரியவில்லை. அவரின் வாழ்க்கையை பதிவு செய்யும் நிலையில் நான் இருக்கவில்லை. என்னால் அங்கு நிற்கமுடியாதிருந்தது. எனவே மீண்டுமொருநாள் அவரிடம் வருவதாகக் கூறி புறப்பட்டேன்.

இன்னும் ஒருவரை சந்திக்கவேண்டியிருந்தது. மனமோ கலங்கிப் போயிருந்தது. அந்தச் சந்திப்பையும் பின்போட்டுக்கொண்டேன்.

மோட்டார் சைக்கில் வயல், வறண்டுபோயிருந்த வாய்க்கால்கள், கிறவற் பாதைகளினூடாக கிழக்குப் பக்கம் நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. கிழக்குப் பக்கத்து வானம் இருட்டியிருந்தது.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாக்காளர்களை எப்படி விளங்கிக் கொள்வது??

தமிழ் வாக்காளர்கள் மறுபடியும் கூட்டமைப்புக்கு ஓர் ஆணையை கொடுத்திருக்கிறார்கள். 2003 இல் இருந்து அவர்கள் கொடுத்துவரும் ஓர் அணையின் தொடர்ச்சியா இது?

ஆயுதமோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த சுமார் ஆறாண்டுகளுக்கு மேலாக கூட்டமைப்பின் செயற்பாடுகளைக் குறித்து தமிழ் வாக்காளர்கள் மத்தியில் அதிருப்தியும் விமர்சனங்களும் அதிகரித்துக் காணப்பட்ட ஓர் அரசியல் சூழலில் தேர்தல் முடிவுகள் இவ்வாறு அமைந்திருக்கின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள முன்னேறிய பிரிவினர் என்று கருதத்தக்க அரசியலை புத்தி பூர்வமாக அணுகும் தரப்பினர் கூட்டமைப்பின் மீது அதிருப்தியோடு காணப்பட்டார்கள்.

இக்கட்டுரை ஆசிரியர் உட்பட தமிழ் ஆய்வுப் பரப்பில் கட்டுரைகளையும் பத்திகளையும் எழுதுபவர்களில் ஒருபகுதியினர் கூட்டமைப்பை நோக்கி கேள்விகளைக் கேட்டதோடு மக்கள் முன்னணியின் மீது பரிவோடும் காணப்பட்டார்கள்.

தமிழ் ஊடகப் பரப்பில் ஆசிரியர் பீடங்களின் மத்தியிலும் ஊடகவியலாளர்களின் மத்தியிலும் ஊடகச் செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் கூட்டமைப்பின் மீது விமர்சனங்களைக் கொண்டிருந்தவர்களின் தொகை அதிகரித்துக் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒருபத்திரிகை "ஆமை பிடிப்பார் மல்லாத்துவார் நாமது சொன்னால் பாவமடா" என்று ஆசிரியர் தலையங்கம் எழுதுமளவிற்கு ஊடகப்பரப்பில் ஒருபகுதியினர் கூட்டமைப்பின் மீது விமர்சனங்களோடு காணப்பட்டார்கள்.

வடமாகாண முதலமைச்சரும் ஏறக்குறைய இதையொத்த ஒரு நிலைப்பாட்டோடுதான் காணப்பட்டார். தமிழ் டயஸ்போறாவில் குறிப்பிடத்தக்க ஒருபிரிவினர் மக்கள் முன்னணியின் மீது பரிவோடு காணப்பட்டார்கள். தாயகத்தில்நடக்கும் ஒரு தேர்தலுக்காக டயஸ்போறாவில் சுவரொட்டிகளை ஒட்டுமளவிற்கு அவர்களுடைய ஆதரவின் அளவு காணப்பட்டது.

இணையப்பரப்பில் சமூக வலைத்தளங்களில் ஒரு பெரும் பிரச்சார யுத்தமே முன்னெடுக்கப்பட்டது. இணையப்பரப்பில் உருவாக்கப்பட்ட சித்திரத்தைப் பொறுத்தவரை மக்கள் முன்னணிக்கு வாய்ப்புக்கள் அதிகரிப்பது போல ஒரு தோற்றம் உருவாகியது.

கூட்டமைப்பினர் மத்தியிலும் தமது ஏகபோகம் சோதனைக்குள்ளாகிறது என்று ஒரு பதட்டம் காணப்பட்டது. தமது வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அவர்களிற் சிலர் கோடிக்கணக்கில் செலவழித்தார்கள்.

ஆனால் தேர்தல் முடிவுகள் மேற்படி எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் பொய்யாக்கிவிட்டன. கூட்டமைப்பின் மீது அதிகரித்து வந்த அதிருப்தியை வாக்குகளாக மாற்ற மக்கள் முன்னணியால் முடியவில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக தமிழில் அரசியல் எழுதும் ஒருபகுதியினரின் நம்பிக்கைகளும் சாதாரண தமிழ் வாக்காளர்களின் நம்பிக்கைகளும் ஒன்றல்ல என்பதை இத்தேர்தல் நிருபித்திருக்கிறது. அல்லது தமிழ் அரசியல் எழுதுபவர்களால் சாதாரண தமிழ் வாக்காளர்களின் கருத்துலகத்துக்குள் நுழைய முடியவில்லை என்பதையும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஒரு செயற்பாட்டாளரான நண்பர் கேட்டார் "தமிழ் மக்கள் என்று நாங்கள் யாரைக் கருதுகிறோம்? நாங்கள் பழகுவோர் இடை ஊடாடுவோர் மட்டும் தானா தமிழ் மக்கள்?" இல்லை….. என்று. சாதாரண தமிழ் வாக்காளர்களுக்கும் தமிழ் சமூகத்தில் உள்ள முன்னேறிய பிரிவினருக்குமிடையிலான பாரதூரமான ஓர் இடைவெளியையும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இத்தகையதொரு பின்னணியில் கூட்டமைப்புக்கு தமிழ் வாக்காளர்களில் பெருமளவினர் வழங்கியிருக்கும் ஆகப் பிந்திய ஆணையை எப்படி வியாக்கியானம் செய்வது?

தமிழ் வாக்காளர்கள் மாற்றத்தை விரும்பவில்லை என்று எடுத்துக் கொள்ளலாமா? அல்லது அவர்கள் கூட்டமைப்பின் கடந்தகால செயற்பாடுகளையிட்டு திருப்தியாக உள்ளார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? அல்லது அவர்கள் கூட்டமைப்பின் தலைவர்கள் கேட்டது போல ஒருதீர்வுக்காக வழங்கிய ஆணையா இது?

அல்லது சில கூட்டமைப்பு பிரமுகர்கள் கூறுவது போல புலிகள் இயக்கத்தால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு என்ற அங்கீகாரம் இம்முறையும் அவர்களுக்குச் சாதகமாக அமைந்ததா? அல்லது சில கூட்டமைப்புப் பிரமுகர்கள் கூறுவது போல தமிழ் வாக்காளர்கள் ஐக்கியத்தைச் சிதைக்க விரும்பவில்லை என்றும் எடுத்துக் கொள்ளலாமா?

அல்லது ஒருநாடு இரு தேசம் என்ற கொள்கையை அவர்கள் நிராகரிக்கிறார்கள் அதன் மூலம் ஒரே நாடு ஒரே தேசம் என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாமா? அல்லது சில விமர்சகர்கள் கூறுவது போல ஒருநாடு இரு தேசம் என்பது வாக்காளர்களுக்கு விளங்கவில்லையா?

அல்லது இருக்கிற நிலைமைகளை குழப்ப விரும்பாத ஒரு கட்சியை வாக்காளர்கள் தெரிந்தெடுத்தார்களா? சில விமர்சகர்கள் கூறுவது போல தீவிர நிலைப்பாடுள்ள ஒரு கட்சியைத் தெரிவு செய்தால் அது மறுபடியும் நிலைமைகளைக் குழப்பிவிடும் என்று சிந்தித்து தீவிர நிலைப்பாடற்ற ஒரு கட்சியை வாக்காளர்கள் தெரிந்தெடுத்தார்களா?

அல்லது மேற்சொன்ன எல்லா தர்க்கங்களுக்கும் அப்பால் தமிழ் வாக்காளர்கள் மிகவும் எளிமையான தர்க்கங்களுக்கூடாக தட்டையாகச் சிந்தித்து தமது இன அடையாளத்தை நிரூபிக்கும் விதத்தில் வழங்கிய வாக்குகள் இவை என்று எடுத்துக் கொள்ளலாமா?

மேற்கண்ட வியாக்கியானங்களில் ஒன்றோ அல்லது பலவோ பொருத்தமாய் இருக்கலாம். ஆயின் மேற்படி ஆணையை தமிழ் வாக்காளர்கள் எந்த அடிப்படையில் வழங்கியிருக்கிறார்கள்?

எனது கடந்த வாரக் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டதைப் போல தமிழ் வாக்காளர்கள் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுகளின் படி வாக்களித்தார்களா? அல்லது மக்கள் முன்னணியின் ஒருபகுதி ஆதரவாளர்கள் கூறுவது போல கடைசி நேரப்பிரச்சாரத்தால் மனம் மாறினார்களா? அல்லது ஏற்கனவே பழக்கப்பட்ட ஒருசின்னத்திற்கு பழக்கப்பட்ட ஒருகட்சிக்கு பழக்கதோசத்தின் பிரகாரம் ஒருசடங்கைப் போல வாக்களித்தார்களா? இவற்றில் எதுசரி?

மக்கள் முன்கூட்டியே எடுக்கப்பட்ட முடிவுகளோடு இருந்தார்கள் என்று கூட்டமைப்புப் பிரமுகர்கள் கூறுகிறார்கள். ஆயின் அந்தமுடிவுகளை வாக்காளர்கள் எப்பொழுது எடுத்தார்கள்? எந்த அடிப்படையில் எடுத்தார்கள்? அவை வழமையாகக் கூறப்படுவது போல வாக்காளர்கள் தெளிவாகச் சிந்தித்து எடுத்த முடிவுகளா? கடந்தவாரக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளதைப் போல தெளிவாகச் சிந்தித்து முடிவெடுப்பது என்பது அரசியல் மயப்பட்ட வாக்காளர்களுக்கே உரியதாகும்.

அவ்வாறு தெளிவாகச் சிந்தித்து முடிவெடுக்கும் வாக்காளர்கள் முன் முடிவுகளோடோ முற்கற்பிதங்களோடோ தேங்கி நின்றுவிடுவதில்லை. மாறாக கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் அவர்கள் தொடர்ச்சியாக விவாதித்தே முடிவுகளை எடுப்பார்கள். ஆனால் நடந்து முடிந்த தேர்தலின் போது அத்தகைய விவாதங்கள் எதையும் பகிரங்கத்தில் காணமுடியவில்லை.

பிரச்சாரக் கூட்டங்களில் வேட்பாளர்கள் மோதிக் கொண்ட அளவுக்கு வாக்காளர்கள் மோதிக் கொள்ளவில்லை. வாக்காளர்கள் பெருமெடுப்பில் பிரச்சாரக் கூட்டங்களுக்கு வரவேயில்லை. இத்தகையதோர் பின்னணியில் தமிழ் வாக்காளர்கள் எத்தகைய உரையாடல்களுக்கூடாக அல்லது விவாதங்களுக்கூடாக தெளிவாகச் சிந்தித்து முடிவுகளை எடுத்தார்கள்?

மக்கள் முன்னணியின் ஒருபகுதி ஆதரவாளர்கள் கூறுகிறார்கள் இறுதி நேரப் பிரச்சாரங்களால் வாக்காளர்கள் முடிவுகளை மாற்றியிருக்கலாம் என்று. ஊடகங்கள் பக்கச்சார்பாகச் செயற்பட்டன என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் அவர்களுடைய கட்சிக்காரர்கள் ஒப்புக் கொள்வதைப் போல முழு மூச்சான ஒருபிரச்சாரத்தை அவர்கள் ஜனவரி - 08 இற்குப் பின்னரே முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது.

அதற்கு முன்பு வரை அந்தக் கட்சியானது சிலநபர்களின் கட்சியாகவே சுருங்கிக் காணப்பட்டது. அதற்கு முன்பு நடந்த தேர்தல்களின் போது வேட்பாளர்களைக் கண்டுபிடிப்பதே அக்கட்சிக்கு பெரியசவாலாக இருந்தது. பகிரங்கத் தளத்தில் அக்கட்சிக்கு ஆதரவாகக் காணப்பட்ட புத்திஜீவிகள் சட்டத்துறை நிபுணர்கள் ஊடகவியலாளர்கள் போன்ற சமூகப் பிரபலஸ்தர்கள் பலரும் அக்கட்சியில் உறுப்பினர்களாகச் சேர்ந்து செயற்படத் தயாராக இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கமானது அக்கட்சி தொடர்பில் வெளிப்படையான ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கத் தயங்கியது. கூட்டமைப்பு தோல்வியுறுமா என்பது தொடர்பில் அவர்களுக்கு ஐயங்கள் இருந்தன என்பதினாலேயே "ஆமைபிடிப்பார் மல்லாத்துவார் நாமது சொன்னால் பாவம்" என்ற ஒரு மனோநிலை பரவலாகக் காணப்பட்டது. குறிப்பாக பரப்புரைகள் முடிவுக்கு வந்த அன்று இரவு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பெயரால் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அதை மறுத்து இன்னொரு அறிக்கை வெளிவந்தது. ஆனால் இந்த அறிக்கை போர் ஒரு தோல்விகரமான வெற்றிடத்தையும் வெளிக்காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையில் முன்பு குறிப்பிடப்பட்ட வவுனியாவை மையமாகக் கொண்டு இயங்கும் அந்த செயற்பாட்டாளர் கேட்டது போலஉலகம் பூராகவும் பொதுவாக மாற்றம் என்றுவரும் பொழுது அதன் முதற்பொறி மாணவர்கள் மத்தியில்தான் எழுவதுண்டு. இம்முறை தேர்தல் களத்தில் நிலைமை அவ்வாறு இருந்ததா? மாற்றத்தின் இதயமாக இருக்க வேண்டிய மாணவர்களின் பெயரால் உத்தியோகப் பற்றற்ற அறிக்கைகளை வெளியிடலாம் என்ற ஒருநிலைமை எதைக் காட்டியது? பல்கலைக்கழக மாணவர்கள் மாற்றத்தின் முன்னணிப் படையாக அல்லது கூர்முனையாக இருக்கவில்லை என்பதைத்தானே?.

மக்கள் முன்னணியானது கடந்த இரு மாதங்களாகத்தான் தேர்தல்களத்தில் முழு மூச்சாகச் செயற்பட்டது. அவர்கள் கனவுகண்ட மாற்றத்தை ஏற்படுத்த அந்த இரண்டு மாதங்கள் போதுமா? பலதசாப்தங்களாக தமிழ் வாக்காளர்களின் மனதில் படிந்து போயிருக்கும் ஒருசின்னத்தையும் ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகளாகப் பதிந்து போயிருக்கும் ஒருகட்சிப் பெயரையும் மாற்றுவதற்கு சுமார் இரண்டுமாதகால முழு அளவிலான பிரச்சாரங்கள் மட்டும் போதுமா?

பரப்புரைக் களத்தில் ஒப்பீட்டளவில் மக்கள் முன்னணியே புத்திபூர்வமான அரசியலை முன்வைத்தது ஆனால் அதைச் சாதாரண வாக்காளர்களுக்கு விளங்கத்தக்க விதத்தில் எளிமையான சூத்திரங்களாக எளிமையான கோசங்களாக பரவலாக்குவதில் அவர்கள் போதியளவு வெற்றியைப் பெறவில்லை. கோச அரசியலின் ஆரவாரங்களுக்குள் புத்திபூர்வமான உரையாடல்கள் அமுங்கிப் போவது என்பது அதிகம் முன்னேறாத ஜனநாயகப் பரப்புக்களில் ஒருபொதுப் போக்காகக் காணப்படுகின்றது.

சிறிலங்காவின் அனுபவம் மிக்க சிவில் அதிகாரியான நெவில் ஜெயவீர ஒருமுறை சொன்னார், "ஜனரஞ்சகத்திற்கும் புத்திசாலித்தனத்துக்கும் பொதுவாக பொருந்தி வருவதில்லை" என்று. தனது கொள்கை இலக்குகளை வாக்காளர்கள் மயப்படுத்துவதில் மக்கள் முன்னணியானது போதியளவு வெற்றி பெறவில்லையா?

எனவே, தமிழ் வாக்காளர்கள் மிகவும் அரசியல் மயப்படுத்தப்பட்டதால் தெளிவாகச் சிந்தித்து முடிவெடுத்தார்கள் என்று கூறப்படுவது ஒரு முழு உண்மையா? அல்லது இறுதிநேரப் பிரச்சார உத்திகளால் வாக்காளர்கள் குழப்பி விடப்பட்டார்கள் என்பதும் ஒரு முழு உண்மையா? அல்லது ஒரு பழக்கத்தின் பிரகாரம் தமிழ் வாக்காளர்கள் ஒரு பழகிய சின்னத்திற்கு, ஒரு பழகிய கட்சிக்கு சடங்கு போல வாக்களித்துவிட்டு வந்தார்கள் என்பதுதான் சரியா?

இதில் எதுவும் சரியாக இருக்கலாம். ஆனால் இம் மூன்று கருதுகோள்களை விடவும் மிகமிகச் சரியானது எதுவெனில் தமிழ் அரசியலை வாக்கு வேட்டை அரசியலாக மாற்றுவதில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் வெற்றி பெறத் தொடங்கிவிட்டார்கள் என்பதே. இக்கட்டுரை முழுவதும் தமிழ் வாக்காளர்கள் என்ற ஒருசொல் நோக்கம் கருதியே பயன்படுத்தப்படுகிறது.

முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்கவைத்த ஒரு போர்க்களத்தில் வாழ்ந்த மக்கள் கூட்டம் அதிலும் குறிப்பாக குணப்படுத்தப்படாத கூட்டுக் காயங்களோடும் கூட்டுமனவடுக்களோடும் மல்லுக்கட்டும் ஒருமக்கள் கூட்டம் வெறும் வாக்காளர்களாக சிறுத்துப் போயிற்றா? அதுவும் தேர்தலில் வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் தேசியப் பட்டியலின் மூலம் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்படும் ஒரு ஜனநாயகச் சூழலில் தமிழ் மக்கள் வாக்காளர்களாக மட்டும் சிறுத்துப் போயினர் என்பது எவ்வளவு பெரியகொடுமை?




# மனைவியை தீண்டாமை!!!!



நான்கு மாதங்களுக்குள் சத்தியம் செய்தவர் அந்த சத்தியத்தை அவர் முறிக்க நாடினால் முறிக்கலாம். உதாரணமாக, ஒரு மாத காலம் உன்னைத் தீண்டமாட்டேன் என சத்தியம் செய்தவர் மறு நாளே மனைவியுடன் இல்லறத்தில் ஈடுபடலாம். ஆனால், சத்தியத்தை முறித்ததற்காக பரிகாரம் காண வேண்டும். இந்த வசனம் பெண்கள் அடம்பிடிக்கும் போது அவர்களை அடக்குவதை அனுமதியளிக்கும் அதே வேளை பெண்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமையையும் தடுக்கின்றது. இந்த வசனத்தை வைத்து சில தலைவர்கள் தவறாக குடும்பங்களைப் பிரிப்பதுண்டு. நான்கு மாதங்களுக்குள் வாழ்வு கொடுக்காவிட்டால் அதையே விவாகரத்தாக அறிவிக்கும் கடமை ஜமாஅத்துக்கு உண்டு எனக் கூறி நான்கு மாதங்களுக்குள் சேராவிட்டால் அதுவே தலாக்தான் என பிரித்துவிட முற்படுகின்றனர். இது தவறாகும். நான்கு மாதம் சேராவிட்டால் அதுவே தலாக்தான் என்றால், அடுத்த வசனத்தில், 'அவர்கள் விவாகரத்துச் செய்வதையே தீர்மானமாகக் கொண்டால்...' என அல்லாஹ் கூற வேண்டிய தேவை இல்லை.

எனவே, இது போன்ற நிலையில் பெண் ஜமாஅத்திடம் நான்கு மாதம் தாண்டிவிட்டால் முறையிடலாம். அப்படி முறையிட்டால் இருவரையும் அழைத்து ஜமாஅத் விசாரித்து சேர்ந்து கொள்ளும்படி கணவனுக்கு அறிவுரை கூற வேண்டும். அவன் நான்கு மாதங்களை விட அதிகமாக ஒதுக்கி வைக்கும் உரிமை இல்லை என்பதை உணர்ந்து சேர்ந்து வாழ நினைத்தால் சேர்ந்து வாழலாம். அல்லது அதில் விருப்பம் இல்லையென்றால் தலாக் சொல்லலாம். நான்கு மாதங்கள் ஒதுங்கினாலே அது தலாக்தான் என்பது தவறான கருத்தாகும்.

தலைவர்கள் இதைத் தவறாகப் புரிந்து கொண்டு குடும்பங்களைப் பிரித்துவிடக் கூடாது என்பதற்காக இங்கு இது குறிப்பிடப்படுகின்றது.

முற்றும் .. ..

**– இஸ்மையில் –**

# திருச்சபையின் வரலாறு

கடந்தவழ தொடர்ச்சி .. ..



கி. பி. 155 இல் ஈஸ்டர் தினத்தைப் பற்றிக் கலந்தாலோசிக்க பொலிகார்ப் ரோமிற்குப் போனார். ரோமில் பிசப்பாக இருந்த அனிசேட்ஸோடு இதில் பொலிகார்ப்-பிற்கு ஒத்துப் போகமுடியாவிட்டாலும் அவருடைய நண்பராக இருந்தார். இக்காலத்தில் ரோமில் இருந்த பிசப் ஏனைய இடங்களில் இருந்த சபைகள் மீது அதிகாரம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.

அன்டோனியஸ் பயஸ் என்ற ரோம அதிபதியின் காலத்தில் பொலிகார்ப் உயிரோடு எரிக்கப்பட்டார். தனது எதிரிகள் மீது பொலிகார்ப் அன்பு செலுத்தியதை அவர் ஸ்மிர்னா சபையில் இருந்து எழுதிய கடிதம் தெரிவிக்கிறது. பொலிகார்ப்பை எரிப்பதற்கு முன்பாக ரோமப்படைத் தளபதி அவரைப் பார்த்து, கிறிஸ்துவை நீ விசுவாசிக்கவில்லை என்று சொன்னால் உன்னை விட்டுவிடுகிறோம் என்று கூறியபோது பொலிகார்ப் அவரைப் பார்த்து, எண்பத்தியாறு வருடங்கள் அவருக்காக நான் உழைத்திருக்கிறேன். அவர் எனக்கு எந்தத் துன்பமும் செய்ததில்லை. என்னை இரட்சித்த என் தேவனை நான் எப்படி மறுதலிக்க முடியும்? என்று கேட்டார். பொலிகார்ப் மெய் விசுவாசமுள்ள ஒரு சீடனாக மரித்தார்.

பிளினிக்கும் ரோம அதிபதி டிராஜானுக்கும் இடையில் நடந்த கடிதத் தொடர்பு – இரண்டாம் நூற்றாண்டு சபை பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள பிளினிக்கும் டிராஜானுக்கும் இடையில் நடந்த கடிதத் தொடர்பு உதவுகிறது. கி. பி. 111 இல் பித்தினியாவின் கவர்னராக பிளினி பொறுப்பேற்றபோது அங்கே கிறிஸ்தவர்கள் பெரும் வளர்ச்சி அடைந்து வேற்று மதக்கோவில்களே இல்லாமல் போயிருப்பதைக் கண்டார். கிறிஸ்தவத்தைப் பற்றி அதிகம் தெரிந்திராத பிளினிக்கு கிறிஸ்தவத்தின் வளர்ச்சி அதிக சங்கடத்தை அளித்தது. கிறிஸ்தவர்கள் மூட நம்பிக்கையுள்ளவர்கள் என்று பிளினி எண்ணினார். கிறிஸ்தவத்தின் வளர்ச்சியைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுத்தார். இருந்த-போதும் கிறிஸ்தவர்களின் நடவடிக்கைகள் அவரை வியப்படை-யச் செய்தது. கிறிஸ்தவர்கள் அதிகாலையில் எழுந்து கீர்த்தனை-களைப் பாடி, கிறிஸ்துவுக்கு முன் தாம் திருடமாட்டோம், விசுவாசத்திற்கு எதிராக நடக்க மாட்டோம், விபச்சாரத்தில் ஈடுபடமாட்டோம் என்றெல்லாம் உடன்படிக்கை செய்வதைக் கண்டார்.

தொடரும் .. ..

www.bible.me

# தற்கொலையிலிருந்து பாதுகாக்கலாம்



தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் உள்ளவர்களின் மனநிலையை ரத்தப் பரிசோதனை மூலமாக முன்கூட்டியே தெரிந்துகொள்ளலாம் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அமெரிக்காவின் இண்டியானா பல்கலைக்கழகத்துக்குட்பட்ட உளவியல் ஆராய்ச்சி நிலையத்தின் நரம்பியல் துறை தலைவர் நிக்யூலெஸ்க்யூ தலைமையிலான குழுவினர் கடந்த மூன்று ஆண்டுகளாக ஏராளமான ஆண்களிடம் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளனர்.

யாருமே தற்கொலை எண்ணம் இருப்பதைப் பற்றி நேரடியாக பகிர்ந்துகொள்ள விரும்ப மாட்டார்கள் என்பதால் இவர்களிடம் தற்கொலை தொடர்பான நேரடிக் கேள்விகள் எதுவும் கேட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களது ஸ்மார்ட்போன்களில், இதற்கென உருவாக்கப்பட்ட செயலியின் உதவியாலும் இது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த மூன்றடுக்கு முறையில் நடந்த பரிசோதனைகளில் துல்லியமாக முடிவு கிடைத்துள்ளது.

இவ்வாறு தற்கொலை எண்ணம் மேலோங்கி இருப்பது முன்னரே கண்டறியப்படும்போது, அவர்களுக்கு முறையான மனநல ஆலோசனை வழங்க முடியும். அதன்மூலம் தற்கொலைகள் தடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சிரியுங்கோவன்.. ..





*வைக்கோல் சாப்பிட்டா கண்ணுக்கு நல்லது!*

சும்மா அளக்காதே!

*உண்மையாதான் சொல்றன்... எந்த மாடாவது மூக்குக் கண்ணாடி போட்டு பார்த்திரு-க்கிறியா?*

சே ! சரியா ஒன்பது மணிக்கு ஆபீஸ்ல இருக்கனும்னு நினைக்கிறேன் ஆனா முடியமாட்டேங்குதே.

ஏன் ?

எனக்கு தான் இன்னும் வேலையே கிடைக்கலையே !

*கிடைக்கலையே!*

# பிறந்த எண் பலன்கள் ௯

9,18,27 தேதிகளில் பிறந்திருந்தால் பொறுமை எப்படி இருக்கும் எனக் கேட்பவர் நீங்கள். செயலில் வேகம், உறுதி போர்குணம் எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்கிற போக்கு உங்களின் சிறப்பு. பிறரிடம் காரியங்களை சாதித்து கொள்ள மென்மையாக அணுக மாட்டீர்கள். அதிகார தோரணையில் கேட்பீர்கள். முரடர், பெரியஆள், சரியான மனிதன் என்கிற மறைமுகப்பட்ட பேர் விளங்கும், நல்ல கருத்துக்களுக்கு செவி சாய்த்தாலும். மேலோட்டமான உங்கள் அதிகாரம் முரட்டு குணங்கள் தான் மற்றவருக்கு தென்படும். பேச்சில் கூட மற்றவரை பயமுறுத்தி சாதித்துக் கொள்வீர்கள். தோல்வியை ஏற்றுக் கொள்ளாதவர் விளையாட்டுகளில், ஆர்வம் இருக்கும், பிரயாணங்கள் அடிக்கடி ஏற்படும் உடல் ஆரோக்கியம் திடகாத்திரமாக காணப்படும்.

# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்டபடி, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்-களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.



**ரிஷபம்** : தடைநீங்கி முன்னேற்றம் வாழ்வில் உருவாகும். கடந்தகால உழைப்பின் பயனைத் தற்போது அனுபவிப்-பீர்கள்.



**மிதுனம்** : நீண்டநாள் எதிர்பார்-ப்பும் கூட, அதிர்ஷ்டவசமாக நிறைவேறும். மறைமுக எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் விலகிச் செல்வர்.



**கடகம்** :அனைவரிடமும் இனிமையுடன் பேசி மகிழ்வீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பை பின்பற்றுவது நல்லது.



**சிம்மம்**: அன்பால் அனைவரையும் கவர்வீர்கள். வாழ்வில் முன்னேற்றத்திற்காக புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தான, தர்மத்தில் மனம் ஈடுபடும்.



**கன்னி** :உறவினர்களிடம் கருத்து வேறுபாடு மறைந்து நிம்மதி பிறக்கும். குடும்பத்தில், சுப வி'யம் குறித்த பேச்சு அடிக்கடி நடந்தேறும்.



**துலாம்** : எண்ணிய எண்ணம் எளிதில் நிறைவேறும். பணவரவும், புகழும் வந்து சேரும். அரசு சார்ந்த நன்மை பெறுவீர்கள்.



**விருச்சிகம்** :சிறு முயற்சியிலும் கூட நன்மை காண்பீர்கள். சுப விஷயத்தில் நல்ல முடிவை எட்டுவீர்கள். குடும்ப செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.



**தனுசு** :குடும்பத்தில் விரைவில், சுப நிகழ்ச்சி நடத்தும் சூழல் உருவாகும். பூர்வீகச் சொத்து மூலம், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும்.



**மகரம்** : கடந்த கால நற்செயலுக்கு, உரிய பலன் தேடி வரும். புத்திரர் படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் காண்பர். எதிர்ப்பாளரின் கெடு செயல் பலமிழக்கும்.



**கும்பம்** : பணிகளில் நேர்த்தி மிகுந்திருக்கும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். வீட்டுத்தேவைகளை ஆடம்பர முறையில் நிறைவேற்றுவீர்கள்.



**மீனம்** : ஆர்வமுடன் புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உடல்நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமையல் சமையல்



### சுறா மீனுடன் பிட்டு

**தேவையான பொருட்கள்**

சுறா மீன் துண்டு - 300 கிராம், வெங்காயம் (பொடியாக நறுக்கியது) - 3 அல்லது 4, பூண்டு (பொடியாக நறுக்கியது) - 6 பல், பச்சை மிளகாய் - 3, கறிவேப்பிலை – சிறிது, மல்லித் தழை – சிறிது, முழு உளுந்து – 1 தே.கரண்டி, கடுகு - ½ தே.கரண்டி, மஞ்சள் தூள் - சிறிது, சீரகம் - ½ தே.கரண்டி, உப்பு - தேவைக்கு, எண்ணெய் - 2 மே.கரண்டி

**செய்முறை**

சுறா மீன் துண்டுகளை சூடான நீரில் போட்டு 10-15 நிமிடங்கள் வேக வைக்கவும். பின் அதனுடன் மஞ்சள் சேர்க்கவும். மீன் துண்டுகள் வெள்ளை நிறத்தில் மாறிவிட்டால் அது வெந்து விட்டது என்று அர்த்தம். மீன் துண்டுகளை தனியாக எடுத்து பரலாக(அதாவது) உதிரியாக உதிர்த்து வைக்கவும். தாச்சியை சூடாக்கவும். பின்னர் அதில் எண்ணெய் விட்டு கடுகு தாளித்து பின்பு முழு உளுந்து மற்றும் சீரகம் சேர்த்து வறுக்கவும்.

அதனுடன் பூண்டு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து வதக்கவும். பின் நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தை அதனுடன் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும். உதிர்த்து வைத்துள்ள சுறா மீனை அத்துடன் சேர்த்து ஐந்து நிமிடங்கள் கிளறவும். பின்னர் உப்பு சேர்த்து ஐந்து முதல் பத்து நிமிடங்கள் அடுப்பில் வைத்திருக்கவும். இறுதியாக நறுக்கி வைத்துள்ள மல்லித் தழை சேர்த்து பரிமாறவும்.

## வியர்வை வெளியேறுவதால் நன்மை





வியர்வை வெளியேறுவதன் மூலம் பல்வேறு ஆரோக்கிய நன்மைகள் ஏற்படுகின்றன.

வியர்வை வெளியேற்றத்தின் போது, உடலில் மற்றும் இதயத்தில் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். இதனால் இதயத்தின் செயல்பாடு ஆரோக்கியமாக இருக்கும்.

உடற்பயிற்சி செய்து வியர்வை வெளியேறும் போது மனநிலையை மேம்படுத்தி, சந்தோஷமாக உணர வைக்கும் எண்டோர்பின் ஹார்மோன்கள் சுரக்கப்படுகிறது.

வியர்வை மூலம் உடலில் தங்கியுள்ள டாக்ஸின்கள் வெளியேற்றப்படுவதால், உடல் சுத்தமாவதோடு, சருமத்துளைகளில் தங்கியுள்ள அழுக்குகளும் வெளியேறி சருமமும் பொலிவோடு இருக்கும்.

வியர்வை அதிகம் வெளியேறினால் சிறுநீரக கல் உருவாவதைத் தடுக்கலாம். எப்படியெனில் வியர்வையின் மூலம் உடலில் உள்ள உப்புக்கள் வெளியேறி, எலும்புகளில் கல்சியம் தக்க வைக்கப்படும். இதன் மூலம் சிறுநீரகங்களில் உப்பு மற்றும் கால்சியம் படிந்து கற்களாக உருவாவதைத் தடுக்கலாம்.

அதுமட்டுமின்றி வியர்வை அதிகம் வெளியேறினால், தண்ணீர் அதிகம் குடிக்க தோன்றும். இப்படி தண்ணீர் அதிகம் குடிப்பதால், சிறுநீரகங்களின் செயல்பாடும் மேம்படும்.

வியர்வை வெளியேறுவதன் மூலம் உடலின் வெப்பநிலை சீராக இருக்கும்.

## உடலிற்கேற்ற ஆடை அணிய வேண்டும்

**அழகு குறிப்பு**

குண்டாக இருப்பவர்களுக்கு தங்கள் ஆடை விடயத்தில் கூடுதல் கவனம் தேவை. ஏனெனில், தங்கள் உடல்வாகுக்கு ஏற்ற ஆடைகளை தெரிவு செய்து அணிந்தால்தான் பார்க்க அழகாக இருக்கும், இல்லையென்றால் அதுவே அலங்கோலமாக காட்டிவிடும்.

- குண்டாக இருப்பவர்கள் வழுவழுப்பான ஆடைகளை தவிர்ப்பது நல்லது, காரணம் அவ்வகையான ஆடைகள் உடலோடு ஒட்டி, உடல் பாகங்களை வெளிப்படையாக காட்டும். எனவே காட்டன் ஆடைகளை உடுத்துங்கள்.
- சுடிதார் அணியும்போது, தொள தொளவென அணியக்கூடாது, அதேபோல் குறிப்பாக குள்ளமாக, குண்டாக இருப்பவர்கள் மிகவும் இறுக்கமாகவும், இடுப்புபகுதியில் அளவு குறைத்து ஓரளவாவது ஸ்ட்ரக்சர் கொண்டுவரும்படி இருக்க வேண்டும். மிகவும் இறுக்கமாக இருந்தால் பின்புறம் அசிங்கமாக இருக்கும், எனவே இடை பகுதியில் கொஞ்சம் கவனமெடுத்து சுடிதார் அணியவேண்டும்.
- ஒல்லியாக உள்ளவர்கள் மிகவும் மெல்லிய ஆடையை தவிர்க்க வேண்டும், இவை உடலை மிகவும் ஒல்லியாக காட்டும். எலும்புகள் துருத்திக் கொண்டு அசிங்கமாக இருக்கும். சுடிதார் அணியும் போது கையின் அளவு ரொம்ப குறைவாக வைக்க கூடாது. இது உங்களின் நீண்ட கைகளை (ஒல்லியாக இருப்பதால்) இன்னும் நீண்டதாக காட்டும். தெரிவு செய்யும் உடை திக்கான உடையாக பார்த்துக் கொள்வது நல்லது.



## டிசைன்ஸ்






**சிறுவர்களுக்கான குட்டிக் கதை**



### சிங்கத் தோலும் கழுதையும்

அது ஒரு அடர்ந்த காடு. பக்கத்து கிராமத்திலிருந்து கழுதை ஒன்று அந்தக் காட்டிற்கு வழி மாறி வந்தது. வரும் வழியில் பல மிருகங்கள் பயத்துடன் ஓடி வந்தன, அதில் ஒரு மானும் இருந்தது.

அந்த கழுதை மானிடம், "ஏன் அனைவரும் இப்படி பயத்துடன் ஓடி செல்கின்றன?" என்று கேட்டது. அதற்கு மானோ, "இந்த காட்டில் சிங்கம் ஒன்று உள்ளது. அதைக்கண்டு தான் நாங்கள் அனைவரும் ஓடுகின்றோம்." என்று கூறிவிட்டுச் சென்றது. கழுதையும் சிங்கத்தின் வீரத்தை நினைத்து கொண்டே காட்டிற்குள்ளே சென்றது. சிறிது தூரம் கடந்து சென்ற களைப்படைந்த கழுதை ஒரு ஓடையைப் பார்த்தது.

கழுதையும் தண்ணீர் குடிக்க அந்த ஓடைக்கு அருகில் சென்றதும் அங்கே சில வேட்டைக்காரர்கள் தாங்கள் வேட்டையாடிய மான், புலி, சிங்கம் போன்ற மிருகங்களின் தோலை அங்கிருந்த பாறைகள் மேல் உலர வைத்திருந்தனர்.



அதைப் பார்த்ததும் கழுதைக்கு ஒரு ஆசை வந்தது. உடனே ஒரு சிங்கத்தின் தோலை எடுத்துத் தன் உடம்பின் மேல் போர்த்திக் கொண்டது. அந்த கழுதை பார்ப்பதற்கு சிங்கம் போலவே இருந்ததனால், மற்ற மிருகங்கள் கழுதையைப் பார்த்து பயந்து ஒதுங்கிச் சென்றன. மிருகங்கள் எல்லாம் தன்னைப் பார்த்து பயந்து மரியாதையாக வழிக் கொடுத்து ஒதுங்கிப் போனதைப் பார்த்து கழுதைக்கு, கர்வம் தலைக்கேறியது.

சிறிது தூரம் அந்த கழுதை அந்த காட்டில் உலாவி கொண்டிருந்தது. செல்லும் வழியில் நரி ஒன்றினை அந்த கழுதை பார்த்தது சரி இந்த நரியையும் பயமுறுத்தலாம் என்று நினைத்து, நரியின் அருகில் சென்றது. நரியும் பயத்தில் நடுங்கிக்கொண்டே "சிங்க ராஜா, நான் தெரியாமல் இந்த பக்கம் வந்துவிட்டேன் இனி நான் இந்த காட்டிற்கே வர மாட்டேன்", என்று கழுதையிடம் கூறியது.

கழுதையும் சிங்கம் போல கர்ஜிக்கணும்னு நினைச்சு "ங்கெ ங்கெ"ன்னு கத்தியது. அதோட குரல் அது கழுதையென்று நரிக்கு காட்டிக் கொடுத்தது. அதன் பிறகு அந்த கழுதையை நரி மதிக்கவேயில்லை.

"எனக்கு கோவம் வருவதற்குள் இங்கிருந்து சென்று விடு", என்றது கழுதை. அதற்கு நரியோ, கழுதையைப் பார்த்து "முடியாது" என்று பதில் கூறியது. மேலும் நரி கழுதையிடம், "நீ சிங்கம் போன்று வேஷம் போட்டாலும் உன்னுடைய உண்மையான குணத்தை உன்னால் மாற்ற முடியாது." என்று கூறியது. கழுதையும் வெட்கித் தலைகுனிந்தது.

**– நாம் நாமாக இருக்கும் போதே மதிப்படைகின்றோம்–**

**சிந்திக்க .. ..**

விதைத்தவன் உறங்கலாம்
ஆனால் – விதைகள்
ஒரு போதும் உறங்குவதில்லை!!

### பொது அறிவு வினா விடை

01. சீனப் பெருஞ்சுவரை கட்டிய மன்னன் யார்? ரிசன்சி
02. வழிநடத்தலில் முக்கியமாக கையாளப்படும் வளம் யாது?
மனித வளம்
03. "Brics" ங்கியின் தலைமையகம் எங்குள்ளது?
சங்காய் நகரில்
04. ஈரமாக இருக்கும் போது மட்டுமே உடையக் கூடியதும் இறுகியதும் உடைக்க முடியாததும் ஆன கல் வகை எது?
சிவப்புக் கப்பிக் கல்
05. 2012 இல் ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் யார்?
மரியோ டிராகி

*யோ.யானு, 8C*
*நாவற்்றோலை, கும்புறுபிட்டி*

*செல்வி.வி.உஷா*
*கல்லடி,*
*மட்டக்களப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. Y - 5 = 0 எனின் Y இன் பெறுமானத்தைக் காண்க.
02. 2 lg 5 + lg8 - lg 2 இன் பெறுமானத்தைக் காண்க.
03. Q, R ஆகியன இருநிலைத்த புள்ளிகள் முக்கோணி PQR இன் பரப்பளவு மாறாதிருக்குமாறு புள்ளி P மாறுகின்றது. புள்ளியின் ஒழுக்கு யாது? ஒரு பரும்படிப் படத்தினால் விளக்குக.
04. ஒரு தொட்டிக்கு நீர் 500 மில்லிலீற்றர்/நிமிடம் என்னும் வீதத்தில் பம்பப்படுகிறது. ஒரு மணித்தியாலத்தில் தொட்டியில் சேரும் நீரின் கனவளவு எத்தனை லீற்றர்?
05. ஒரு வட்டத்தின் ஆரை எவ்வளவாக இருக்கும் போது அவ்வட்டத்தின் பரிதியின் எண் பெறுமானத்திற்குச் சமமாக இருக்குமெனக் காண்க.
06. 0.08l ஐ மில்லிலீற்றரில் காட்டுக.
07. பின்வரும் கோவைகளிடையே விடையாக 4Y கிடைக்கும் எல்லாக் கோவைகளையும் தெரிந்தெடுத்து எழுதுக.

2 (Y+Y)   (2Y+Y)   2Y x 2Y   2 + 2Y

**பகுதி 02**

01. ஆண்டின் தொடக்கத்தில் மோகன் ரூ.8000 ஐ இட்டு ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தார். அதற்கு மூன்று மாதங்களின் பின்னர் முகுந்தனும் அதிலிருந்து மேலும் மூன்று மாதங்களின் பின்னர் சங்கரும் ரூ.8000 வீதம் இட்டு வியாபாரத்தில் இணைந்தனர். ஆண்டின் இறுதியில் வியாபாரத்திலிருந்து ரூ.7200 இலாபம் கிடைத்தது.

01. சமனாகப் பணம் இடப்பட்டிருக்கிறமையால் இலாபமும் மூவருக்குமிடையே சமனாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பது சங்கரின் கருத்தாக இருந்தது. இக்கருத்து நியாயமானதன்று என்பதற்கு காரணங்களை எழுதுக.
02. மூவருக்குமிடையே இலாபம் பிரிக்கப்பட ணேடிய விகிதத்தைக் கண்டு அதனை மிக எளிய வடிவத்தில் எடுத்துரைக்க
03. இதற்கேற்ப மோகனுக்குக் கிடைக்கும் இலாபத்தைக் கண்டு அதனை அவர் இட்ட பணத்தின் சதவீதமாகக் காட்டுக.

## பாடம் : வரலாறு

01. பிந்திய அநுராதபுர காலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகளின் பிரதான அம்சம்.
   (1) அவற்றுள் பெரும்பாலானவ படையெடுப்புகளாகும்.
   (2) அவை வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை.
   (3) அவை சமய,பண்பாட்டு அம்சங்களைப் பற்றியவை.
   (4) கலைப்படைப்புகளுக்கு முன்னுரிமை வழங்கியமை.

02. வடமேற்கு இந்தியாவிற்கு வந்த ஆதி முஸ்லிம்களின் பிரதானமான குறிக்கோள்
   (1) இந்தியாவிலே செல்வங்களைச் சூறையாடிக்கொண்டு தமது தாயகத்திற்குத் திரும்பிச் செல்லுவது
   (2) தமது சமயத்தைப் பரப்புது
   (3) அங்கு குடியேற்றங்களை ஏற்படுத்துது
   (4) ஒரு பேரரசினை உருவாக்குவது

03. ஜெர்மனியர்கள், தூய ஆரியர்களின் வழிவந்த ஓர் உன்னதமான இனத்தவர் என்ற கருத்தைக் கொண்ட ஜெர்மனிய அரசியற் கோட்பாடு
   (1) பாஸிஸம்   (2) பயனுடைவாதம்   (3) மானிடவாதம்   (4) நாஸிஸம்

04. சோல்பரி அரசியலமைப்பின் படி மந்திரி சபையினுள்ள எத்துறைக்குரியவரை செனற் சபையிலிருந்து கட்டாயமாக தெரிவு செய்தல் வேண்டும்?
   (1) பாதுகாப்பு   (2) நிதி   (3) நீதிபரிபாலனம்
   (4) வெளிநாட்டு அலுவல்கள்

05. பின்வருவனவற்றுள் சட்ட வாக்கத்தில் மக்கள் நேரடியாக பங்கு கொள்கின்ற விடயம் எது?
   (1) ஜனாதிபதித் தேர்தல்   (2) பாராளுமன்றத் தேர்தல்
   (3) சர்வஜன வாக்கெடுப்பு   (4) மாகாணசபைத் தேர்தல்

06. புவியியலின் அமைப்புக் காரணமாக நிலை பெற்ற இராசதானி
   1. அநுராதபுர   2. பொலநறுவை
   3. கண்டி   4. சீதாவாக்கை

## பாடம் : விஞ்ஞானம்

01. கலப்பிரிவின் போது கருவும் குழிய முதலுருவும் இரண்டாகப் பிரிந்து மகட் கலங்கள் உருவாகின்றன. இழையுருப் பிரிவின் போது மகட் கலத்திற்குத் தாய் கலத்தில் உள்ள
   (1) நிறமூர்த்த எண்ணிக்கைக்குச் சமனான நிறமூர்த்த எண்ணிக்கை உரியதாகும்.
   (2) அமைப்பொத்த நிறமூர்த்த சோடியிலிருந்து ஒரு நிறமூர்த்தம் வீதம் உரியதாகும்.
   (3) நிறமூர்த்த எண்ணிக்கையின் இரு மடங்கு உரியதாகும்.
   (4) நிறமூர்த்த எண்ணிக்கையில் அரைவாசி உரியதாகும்.

02. குடித்தொகை சரியாக வரையறுக்கப்படுவது.
   (1) ஒரு குறித்த பிரதேசத்தில் வாழும் எல்லாச் சாகியங்களும் அவற்றுடன் இடைத்தாக்கம் புரியும் உயிரற்ற சூழலுமாக
   (2) புவி மீது அங்கிகளின் பரந்திருக்கும் வலயமாக
   (3) ஓர் அங்கியை இரையாகக் கொள்ளும் வேறு அங்கிகளாக

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

**மரபுத்தொடர்கள்.**

**சொற்கள் சேர்ந்து நின்று தமக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் குறிப்பான வேறு ஒரு பொருளை உணர்த்திவருவது இலக்கணத்தொடர் எனப்படும். அத்தகைய குறிப்புப் பொருள் பரம்பரை பரம்பரையாக மக்கள் மத்தியில் வழங்கி வருவதலால் அதனை மரபுத்தொடர் என்றும் கூறுவதும் வழக்கம்.**

117. தட்டிக் கழித்தல் - சாக்குப் போக்குச் சொல்லுதல்
118. தவிடு பொடியாதல் - சிதறிப் போதல்
119. தாரை வார்த்தல் - தனக்குரியதைப் பிறருக்குத் தானமாக கொடுத்து விடுதல்
120. திக்குமுக்காடுதல் - செய்வதறியாது தடுத்தல்
121. வழி பார்த்தல் - உபாயந்தேடல்
122. விழலுக்கு இறைத்த நீர் - முயற்சி வீணாதல்
123. வெட்டிப் பேசுதல் - மறுத்துப் பேசுதல்
124. மட்டந்தட்டுதல் - வீணாக்குதல்
125. மொட்டையடித்தல் - முழுவதும் அபகரித்தல்
126. முதலைக் கண்ணீர் - பாசாங்கு செய்தல்
127. நட்டாற்றில் கைவிடுதல் - ஆபத்திற் கைவிடுதல்
128. நெருப்பெடுத்தல் - கோபித்தல்

**இரட்டைக்கிளவி**

உ-ம் கேட்போர் திடுக்கிடும் படி சிங்கம் கர்ச்சித்தது. நாய் துடிதுடித்து உயிர் விட்டது. கிடுகிடு, துடிதுடி என்பன இரட்டைக் கிளவிகள் கிடு+கிடு, துடி+துடி என இரண்டாகப் பிரித்தால் பொருள் தரமாட்டா. ஒரே ஒலி இரட்டித்து வருவதால் இது ஒலிக்குறிப்பு என்றும் கூறப்படும். கிளவி சொல் இரட்டைக் கிளவி இசை பண்பு குறிப்பு என்பன பற்றி வரும்.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

***Fill in the blanks with the most suitable word. write the letter in the space provided. the first one is done for you.***

Saman: (1)...d.... times have you been to sinharaja?
Piyal: Well,I've been there many times.
Saman: Is that so? (2)..... did you go there last?
Piyal: During the August holidays.
Saman: (3) ...... did you go with?
Piyal: With my aunt and her family.
Suman: (4) ...... does you aunt live?
Piyal: In Deniyaya, very close to sinharaja. (5)..... do you ask all these questions?
Saman: Well I've never been to singharajah.I want to go there. (6) So .... is the best route to take?
Piyal: I'll tell you . Let's first drink this cup of tea.

a. What   d. how many
b. Whye   e. Who
c. Where   f. When

   (4) ஒரு குறித்த பிரதேசத்தில் குறித்த காலத்தில் வாழும் ஒரே இனத்தின் அங்கிகளாக

03. பாதுகாப்பிற்காக வீட்டு மின்சுற்றில் பயன்படுத்தப்படாத துனையுறுப்பு
   (1) உருகி   (2) பிரதான ஆளி   (3) மின் மானி   (4) இடறுஆளி

04. கழிவுப் பொருள் என்பன உடலின் உயிரிரசாயனச் செயன்முறைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேவையற்ற பொருள்களாகும். இதற்கேற்ப மனிதனின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களாக அமையாதது,
   (1) தோலில் இருந்து வெளியேறும் வியர்வை.
   (2) சிறுநீரகங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் நீர்.
   (3) சுவாசத்தொகுதியிலிருந்து வெளியேற்றப்படும் நீர்.
   (4) உணவுக் கால்வாயிலிருந்து வெளியேற்றப்படும் மலம்.

05. நகப்பூச்சுக்களை நீரில் கழுவி அகற்ற முடியாது. ஆனால் மெலிதாக்கி என்னும் கரைப்பானைப் பயன்படுத்தி அவற்றை எளிதாக அகற்றலாம். இதற்கேற்ப அவற்றில் எவை சம முனைவியல்புகளைக் கொண்டுள்ளவென முடிவு செய்யலாம்?
   (1) நீரும், நகப்பூச்சும் மாத்திரம
   (2) நீரும், மெலிதாக்கியும் மாத்திரம்
   (3) மெலிதாக்கியும், நகப்பூச்சும் மாத்திரம்
   (4) நீர், நகப்பூச்சு, மெலிதாக்கி ஆகிய மூன்றும்

06. உடல்நலமுள்ள, வளர்ந்த ஒருவரின் குருதியில் உள்ள சிறு மணியற்ற வெண்குழிய வகை எது?
   (1) இயோசீனாடி   (2) மூல நாடி
   (3) நடுநிலை நாடி   (4) மொனோசைற்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 24ம் திகதி...

அடுத்து மக்கள் தமது......

போராட்டத்தைத் தொடரும் நிலை ஏற்பட்டள்ளது.

திருகோணமலை, சல்லி கிராமத்தைச் சேர்ந்த தங்கரூபன் (முத்தன்) கடந்த 24ம் திகதி முதல் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். இவர் 23ம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கத் தனியாகச் சென்றுள்ளார். அடுத்த நாள் அதிகாலை வேளையில் சுருக்குவலைஞர்களுக்கும் இவருக்கும் இடையே தகராறு நிகழ்ந்திருப்பதாகச் சொல்லும் கிராம மக்கள் அத் தகராறு முடிவடைந்து சில மணி நேரங்களின் பின்னர் முத்தனிடம் இருந்து தான் இனந்தெரியாதவர்களால் சுற்றிவளைக்கப்படுவதாக அனுப்பப்பட்ட குறுஞ்செய்தியை அடுத்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக திருகோணமலை வாழ் மக்களும் தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களும் இணைந்து கடந்த 26ம் திகதி திருகோணமலை-முல்லைத்தீவு நெடுங்சாலையை மறித்து அதிகாலை முதல் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இப்போராட்டத்தினைத் தற்காலிகமாக நிறுத்த முனைந்த கிழக்கு மாகாணசபைக் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி மற்றும் முதலமைச்சர் ஹாபிஸ் நஷீர் அஹமட் ஆகியோரின் முயற்சி கைகூடாமற் போகவே மாவட்டச் செயலாளர் புஸ்பகுமார அவ்விடத்திற்கு வருகை தந்து இரண்டு உறுதிமொழிகளை எழுத்து மூலம் வழங்குவதாகத் தெரிவித்த பின்னரே போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

28ம் திகதிக்கு முன் தங்கரூபன் தொடர்பான தகவல்களைக் கண்டறிந்து காவல்துறை வெளிப்படுத்தும் மற்றும் சுருக்குவலைப் பாவனை முற்றாகத் தடுக்கப்படும் ஆகிய உறுதிமொழிகளை அடுத்தே போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

என்றாலும் இச்செய்தியை எழுதும்வரை காவல்துறையினர் தங்கரூபன் தொடாபான தகவல்களை வெளிப்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் போராட்டத்தை முன்னெடுக்கும் முயற்சிகள் தொடரலாம் எ தெரியவருகின்றது.

இக்குற்றம் தொடர்பாக ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் சிலர் கைதாகியி - ருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆதிசிவன்....

புரிவதாகவும் தெரிகின்றது. இவர்களின் முயற்சியால் பெரிய அளவிலான புத்தர் சிலையொன்றை தம்பலகாமம் சிவன் கோவிலுக்கு முன்புறமாக அமைக்கும் பணிகள் இரகசியமாக முன்னெடுக்கப்பட்ட போதும் அதனை அறிந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகள் இந்நடவடிக்கையைத் தடுக்கும் முயற்சிகளை முன்னெடுத்திருந்தனர்.

அதனையடுத்து பெரிய சிலையை வைக்கும் முயற்சி பின்தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது எனினும் இவ்வபாயம் முற்றுமுழுதாக நீங்கவில்லை என மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தம்பலகாமம் பிரதேசத்தில் புத்தர் சிலையை அமைக்கவிரும்பும் இடத்தில் சிங்கள மக்கள் எவரும் வசிப்பதில்லை. அங்கு நிறுவப்பட்ட சிறிய புத்தர் சிலையானது இராணுவம் அங்கிருந்த போது வைக்கப்பட்டதெனினும் இராணுவம் தனது நிலைகளை விட்டு நகர்ந்த போது அச்சிலை அகற்றப்படவில்லை.

இதேவேளை குறித்த பெரிய புத்தர் சிலையுடன் பிள்ளையார் சிலையொன்றையும் வைக்கும் ஏற்பாட்டை அங்குள்ள ஒருவர் முன்மொழிந்திருந்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

## சம்பூருக்கு....

பெற்றுக்கொண்ட மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக அமெரிக்க அரசு ஒரு மில்லியன் டொலர் வள உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. இந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்த தெற்காசியப் பிராந்திய உதவி இராசாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் இவ்வறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் சம்பூரில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மீளக்குடியேறியவர்களுக்கு உலர் உணவு மற்றும் நிவாரண உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளது. சம்பூரில் மீளக் குடியேறியுள்ள-வர்களுக்கு ஒன்றரை மாத காலம் வரையான உலர் உணவு மற்றும் நான்கு மாதங்கள் வரை மீள்குடியேற்றநிவாரண நிதியும் வழங்க உலக உணவுத்திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது. மீள்குடியேறியுள்ள இருநூற்று முப்பத்தினான்கு குடும்பங்களுக்கு இந்த உதவி கிடைப்பெறும் எனத் தெரிகின்றது.

## கூட்டமைப்பின்....

தேர்தலின் பின்னரான நிலைமை, மக்கள் ஆணை, புதிய தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதா? இல்லையா? மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தூதுக் குழுக்களை சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து கலந்துரையாடுவதற்கென கொழும்பில் கூடி இக்கட்சிகள் ஆராயவுள்ளன.

எனினும் தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கை-களால் தமிழத் தேசியக் கூட்டமை-ப்பிற்குள் எழுந்துள்ள நெருக்கடி நிலையினை எதிர்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யும் விடயம் தொடர்பான கலந்துரையாடல் இக்கூட்டத்தில் முக்கியம் பெறும் என சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

2009ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவை கழற்றிவிடப்பட்டதைப் போன்று இம்முறை தோதலின் பின்னர் சுரேஸ் தலைமையிலான ஈபிஆர்எல்எவ் கட்சியைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கழற்றி விடப்படுகின்ற கட்சிகளுக்கு "துரோகி" பட்டம் சுமத்தப்படுவது நிகழ்வதாகவும் அதற்கு அனைத்து ஊடகங்களும் சர்வதேச நிர்ப்பந்தத்தின் பேரில் உதவி செய்வதாகவும் எழுந்துள்ள சந்தேகங்களை அடுத்தே பங்காளிக் கட்சிகள் தமது இருப்பை உறுதி செய்துகொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை இக் கூட்டத்தில் முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிகின்றது.

இதேவேளை அமெரிக்க தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்கான இராஜாங்க செயலரை தமிழ் தேசியக்கூட்டமைப்பு சந்-தித்த போது தமிழீழ விடுதலை இயக்-கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநா-தனுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஊடாக அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் நேரடியாக அமெரிக்க தூதர-கத்தில் இருந்தே இவ் அழைப்பு வந்தததா-கவும் தெரிவிக்கப்படுவதுடன் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குள் அதிகளவான விரிசலை ஏற்படுத்தி -யுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

## உள்ளக....

அமெரிக்கா ஆதரவளிப்பதாக அறிவித்ததை அடுத்து அதனை வெளிப்படையாக எதிர்க்காமல் நழுவத் - தொடங்கியுள்ளது.

உள்ளக விசாரணையை ஆதரிப்பதாக அமெரிக்கா அறிவித்ததை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரை பி.பி.சி உலக செய்திச் சேவை பேட்டி கண்டபொழுது அமெரிக்க அரசின் தெற்காசியப் பிராந்திய உதவி இராசாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் அவ்வாறு அறிவித்திருப்பதைப்பற்றித் தனக்குத் தெரியாது என இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் பி.பி.சி செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் "ஆட்சியில் அமர்ந்துள்ள புதிய அரசாங்கம் சர்வதேசச் சமூகத்தைப் பொறுத்தளவில் வேறுவிதமாகக் கருமங்களை ஆற்றிவருகின்றார்கள். அதன் காரணமாக எவ்விதமான மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றதோ? இல்லையோ? எங்களுக்குத் தெரியாது. உள்ளக விசாரணை எந்த அடிப்படையில் நடைபெறும் என்பதும் எங்களுக்குத் தெரியாது. இருந்த-போதிலும்கூட இந்த நாட்டில் எவ்வித உள்ளக விசாரணைகளும் நம்பகத்-தன்மை உள்ளவகையில் நடைபெற-வில்லை என்பது எம்மைப் பொறுத்தவரையில் எமது அபிப்பிராயம். அதனால் கருமங்கள் எவ்விதமாக முன்னெடுக்கப்படப்போகின்றன என்ப-தை அவதானித்து அதற்கேற்றவகையில் அந்தந்த நேரத்தில் எமது கருத்தைச் சொல்ல வேண்டியது மாத்திரமல்ல எடுக்க வேண்டிய முயற்சிகளையும் மேற்கொள்வோம்" என உள்ளக விசாரணை தொடர்பான அமெரிக்க இராசதந்திரியின் அறிவிப்புத் தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு சம்பந்தன் பதில் வழங்கியுள்ளார்.

## தோல்விக்கு....

"புதிய கதாநாயகர்களைக் கொண்டு சினிமாப்படமொன்றை இயக்கவே பொதுச் செயலாளர் முன்நின்றார். பழையவர்களை மக்கள் தேர்வு செய்யக் கூடாது என்று எமக்கு எதிரான பிரசாரங்களை கடுமையாக முன்னெடுத்தார். சித்தாண்டி மக்களின் பிரதிநிதியாகத் தேர்தலில் போட்டியிட முன்வந்த ஒருவரைத் தாம் இருவருமே சதிசெய்து நீக்கியதாக மக்களிடையே புனையப்பட்ட கதைகளை அவிழ்த்து விட்டு சித்தாண்டி மக்கள் எமக்கு எதிராக வாக்களிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்" போன்ற பல குற்றச்-சாட்டுக்களைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளருக்கு எதிராக அரிய-நேத்திரனும், பொன். செல்வராசாவும் முன்வைத்திருக்கின்றனர்.

## அமெரிக்க...

எனினும் அமெரிக்காவின் இந்த தீர்மானம் தமக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை என அமையத்தின் பேச்சாளர் ஆர் கே குருபரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 8 மற்றும் ஒகஸ்ட் 17 ஆம் திகதிகளில் இலங்கையில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தை பாதுகாக்க அமெரிக்கா விரும்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதேச்சை அதிகாரத்தில் இருந்து ஜனநாயகத்திற்கு மாறுவதற்கு ஆட்சி மாற்றம் அவசியம் இல்லாத போதிலும் சீனாவின் செல்வாக்கில் இருந்து அமெரிக்க-இந்திய செல்வாக்கு ஏற்படுவதற்கு ஆட்சி மாற்றம் அவசியமானது என குருபரன் கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கும் விடயங்களுக்கு எதிர்ப்பு வெளியிடும் சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகளிடம் இருந்து இந்த ஆட்சி மாற்றத்திற்கு ஆபத்து வரலாம் என்பதை அமெரிக்காவும் இந்தியாவும் அறிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் தமது நிழச்சி நிரலுக்கு அமைய விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளுமாறும் அனுசரித்து செயற்படுமாறும் ஒத்துழைக்குமாறும் தமிழ் தரப்பு மீது அழுத்தங்களை அவர்கள் பிரயோகிப்பதாக தமிழ் சிவில் சமூக அமையத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழ் மக்கள் ஆணையை வழங்கியிருந்தும் கூட தமிழ் மக்களுக்கு எதிராகவே அவர்கள் செயற்படுவதாக குருபரன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்

## 6வது நாடா....

மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்....

கட்சி முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சுசந்த புஞ்சிநிலமேயையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரா. சம்பந்தனையும் வாக்குகளின் ஊடாகத் தேர்வு செய்துள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது தேசியப் பட்டியல் ஊடாக ஐந்தாவது நாடாளுமன்ற உறுப்பினராக குணவர்த்தனவைத் தெரிவு செய்திருந்த நிலையில் ஆறாவதாக துரைரெட்ணசிங்கம் தெரிவு செய்யப்பட்டள்ளார்.

இரண்டாவது தடவையாகத் துரைரெட்ணசிங்கம் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதைக் கண்டித்துள்ள மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய தேர்தலில் போட்டியிட்டு விருப்பு வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டவருமான பொன் செல்வராசா இந்நியமனம் தேவையற்றது எனத் தெரிவித்திரு-க்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு



...ரும். ...ளை ...ளைக் கொண்டவரும், ஒரு நல்ல மனிதையுமாக எம்முள் வாழ்ந்த **திருமதி சாந்தி சச்சிதானந்தம்** அவர்களை இழந்து நிற்கின்றோம்.

அவரது ஆன்மா சாந்தியடைய மலைமுரசு தனது வேண்டுதல்களை இயற்கையை நோக்கி விடுக்கின்றது.

அமரர் சாந்தி தொடர்பில் திருவாளர். இரவி அருணாசலம் அவர்கள் தனது பேஸ்புக்கில் வரைந்த குறிப்பு கீழே தரப்படுகின்றது.



நம்ப முடியாத ஒரு வாக்கியத்தை இன்று நான் கொண்டு திரிந்தேன். "சாந்தி சச்சிதானந்தம் காலம் ஆனார்". அதுவே அவ்வாக்கியம். அது எவ்வாறு நிகழ முடியும்? ஒரு பெண்ணின் ஆளுமையை அவரில் கண்ட அளவு நான் எவரிலும் காணவில்லை. இன்று, நேற்றல்ல நெடுங்காலமாக அவரை நான் அறிவேன். சந்தர்ப்பமாகக் குறிப்பிட வேண்டுமெனில் மூன்று சந்தர்ப்பங்கள்:

1. 1982 ஆம் ஆண்டு. "நண்பர் குழாம்" என்ற நாடக அரங்க அமைப்பு "பிச்சை வேண்டாம்" நாடகத்தை மீள மேடை ஏற்றியது. ஏலவே தார்சீசியஸ் நெறியாள்கையில், பாலேந்திரா, ஆனந்தராணி நடிப்பில், ஞானம் லம்பேர்ட்டின் மொழிபெயர்ப்பில், அலெக்சி அபுசோர்வின் பிரதியான "பிச்சை வேண்டாம்" நாடகத்தை 1975ஆம் ஆண்டில் பார்த்திருந்தேன். இது 1982 ஆம் ஆண்டு. ஆனந்தராணி ஏற்று நடித்த "வல்யா" எனும் பாத்திரத்தில் நடித்தவர், சாந்தி சச்சிதானந்தம். "புதுசு3" ஆம் இதழில்(1982) இவ்வாறு குறிப்பு வருகிறது: "...நடிப்பிலும் எல்லா நடிகர்களும் சோபிக்கிறார்கள். குறிப்பாக "வல்யா" (சாந்தி சச்சிதானந்தம்) தன்னுடைய பாத்திரத்தை ஆழமாகப் பதிய வைக்க முயல்கிறார்..."

2. 1995 ஆம் ஆண்டு. "விபவி"யின் ஆதரவில் மட்டக்களப்பில் நாடக அரங்கப் பயிற்சிப் பட்டறை நடத்தப் போகிறோம். அங்கு "விழுதுகள்" எனும் அமைப்பினூடாக அதனை நடத்திக் கொண்டிருப்பவர், சாந்தி சச்சிதானந்தம் அவர்கள். அப்பொழுது அவருடனான உறவும் பகிர்வும் எம்மை இன்னொரு தளத்திற்கு இட்டுச் சென்றது. "மகா ஆளுமை" என அவரையிட்டு நான் உணர்ந்தேன்.

3. 1998 ஆம் ஆண்டு. இலங்கை தனது சுதந்திர நாளை கண்டி தலதா மாளிகையில் நிகழ்த்த விரும்புகிறது. தலதா மாளிகையில் அவ்வேளையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் அதிராதார் எவருமில்லை. "புனித ஆலயத்தில்" எவ்வாறு குண்டு வெடிப்பு நிகழலாம் எனும் கேள்வி எழுந்தது. அப்போது "விடுதலைப் புலிகள்" மீது கடும் கண்டனம் எழுந்தது. அதற்கு சாந்தி சச்சிதானந்தம் "சரிநிகர்"இல் ஒரு கட்டுரை எழுதினார். அதன் சாராம்சம் இதுதாம். "ஒரு நாட்டின் சுதந்திர நாளை உங்களால் விகாரையில்தாம் கொண்டாட முடியுமெனில், அதனை எதிர்க்கும் சக்திகள் வேறு எங்கு குண்டு வைப்பது? உங்கள் வீட்டுக் கோடியிலா?'

எனினும் ஒரு கணம் தவித்துப் போகிறேன் சாந்தியின் இறப்பை இட்டு. வல்லமை மிக்கோளே, நீ சரியான வாழ்விடம் தேடுவாய்.

மக்கள் முரசு

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

உதாரணமாக Operation Torch, Operation Overlord, Operation Cobra, Operation Normandy, Stalingrad, ஹிட்லரின் மின்னல் வேகத் தாக்குதல் முறை, பதுங்கு குழிகள் அமைக்கும் முறை, திகைப்புத் தாக்குதல், பதுங்கிச் சுடுதல் போன்ற உலகப்போர் சம்பவங்களுடன் ஒப்பிட்டு தாயகத்தில் ஆகாய கடல் வெளிச்சமர், ஆணியிறவுச் சமர், முல்லைச் சமர், இத்தாவில் தரையிறக்கம், ஜெயசிக்குறு எதிர்ச் சமர், கட்டுநாயகா, அனுராதபுரம்.. என்று பட்டியல் நீண்டு கொண்டே போனது. .

2ம் உலகப்போரில் அமேரிக்கா நிகழ்த்திய இராணுவ நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தனி வரலாறாக பதியப் பட்டுள்ளன. அவற்றை தனித்தனிய பார்த்தால் நாம் இதற்குள்ளேயே சுற்றி சுற்றி செக்கு இழுக்க வேண்டியதுதான். நாம் இதனைக் கடந்து போய்கொண்டு இருப்போம். ஆங்காங்கு இந்த போரில் அமேரிக்கா பற்றி அறியலாம். ஏனென்றால் இன்றைய நவீன உலகத்தின் ஆணிவேர் இந்த 2ம் உலகப் போரில் இருந்துதான் ஆரம்பமாகிறது. ஆரோக்கியமான போட்டியா அல்லது அருவருப்பான போட்டியா என்று உலகம் அப்பொழுது சிந்தித்துக் கொண்டிருக்க வில்லை. போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து கொண்டே இருந்தது உலகம். கண்டு பிடித்ததை பயன்படுத்தியதும், பயன்படுத்தியதை மேம்படுத்தவும் இங்கிருந்துதான் உலகம் தொடங்குகிறது.

குறிப்பாக இந்த யுத்தத்தின் இறுதி அத்தியாயமும், என்னதான் ஜப்பான் மீது வெறுப்பு இருந்தாலும் மனதை கலங்க வைத்த விடயமுமான ஜப்பான் மீதான அணுக்குண்டு வீச்சு பற்றியும், வல்லரசு ஜப்பான் வாங்கிக் கட்டியதற்கான காரணம் பற்றியும் ஆராயலாம்.

ஏன்? திருக்கோணமலைக்கும் ஜப்பானுக்கும் கூட சம்பந்தமுண்டு. பலருக்குத் தெரிந்த விடயம்.

என்னதான் இருந்தாலும் ஜப்பான் இன்று அமேரிக்கா ஹீரோஷிமா நகரம் மீது அணுக்குண்டு வீசிய 70 ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தவிர்க்க முடியாமல் இந்த இடத்தில் ஜப்பான் பற்றியும் நாம் பார்த்தே ஆகவேண்டிய நிலையில் இருக்கிறோம். காரணம், 2 ம் உலக யுத்தம் என்றாலே நினைவுக்கு வருபவை என்றால் ஒன்று ஹிட்லர், மற்றயவை ஹீரோஷீமா, நாஹசாகி என்கிற இரு ஜப்பானிய நகரங்கள். இந்த இரு நகரங்களை நரகங்களாக ஆக்கிய பெருமை அமெரிக்காவையே சாரும். ஆதலால் இந்த சம்பவத்தை விளங்கிக் கொள்ள ஜப்பான் பற்றியும் பார்த்துதான் ஆக வேண்டும்.

டோக்யோவை தலை நகரமாகக் கொண்ட ஜப்பான் 7,400,000 சதுர கிலோமீட்டர் நிலப் பரப்பளவுடையது. 4 மிகப்பெரிய தீவுகளுடன் சேர்த்து 6,852 சிறிய தீவுகளை உள்ளடக்கிய ஒரு நாடாகும். மொழி கலை கலாசாரம் பாரம்பரியம் உருவத் தோற்றம் அனைத்திலும் சற்று மாறுபட்டவர்கள். அவர்களின் இன்றைய வளர்ச்சிக்கு காரணாமாக சொல்லப் படுவது எதுவென்றால், அவர்களின் நாடு இயற்கை சீற்றங்களால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாவதே காரணமாக சொல்லப் படுகிறது. அதிகமாக மட்டை வீடுகளில் வாழ்கிற அவர்கள் உலகின் மாற்றங்களை தீர்மானிப்பவர்கள் ஆகியிருக்கிறார்கள். மீளெழுகை தான் அவர்களின் மூச்சாக மாறிப் போனது. "made in Japan" என்றாலே உள்ளூர் மற்றும் உலக சந்தைகளில் தனி மதிப்புண்டு அல்லவா? அந்த நாட்டு பொருள்கள் என்றால் எமக்கும் ஆசையல்லா? "மீளேழுகை" இன்று எமது இனத்திற்கும் அது தேவைப்படு-கிறதொன்றாகும். அழிவில் இருந்து எழவேண்டிய காலத்தில்தான் தமிழர்கள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்.

இன்று ஜப்பான் பேரரசு ஐநா சபை, **G 7, G 8, G 20** ஆகிய அமைப்புகளின் great power என்று வர்ணிக்கப்படுகிறது. மிகப் பெரிய பொருளாதார கட்டமைப்பைக் கொண்ட நாடுகளில் மூன்றாவது இடத்திலும், ஆகக்கூடிய இறக்குமதி ஏற்றுமதி துறையில் ஐந்தாவது இடத்திலும், Country Brand Index என்று சொல்லப் படுகிற தேசிய வியாபாரக்குறிச் சுட்டியில் 2014/15 க்கு முதல் இடத்திலும், சமாதான நடவடிக்கைகள், மற்றும் சுய பாதுகாப்பிற்காக இராணுவ பாதுகாப்பு பாதீட்டிற்கு ஒதுக்கப்படும் நிதியின் அளவு, உலக நாடுகளின் வரிசையில் 8வது இடத்திலும் ஜப்பான் காணப்படுகிறது. மனித மேம்பாட்டு சுட்டியில் முதல் இடத்திலும், உலக சமாதான மேம்பாட்டிற்கான நடவடிக்கை-களில் முதல் வரிசையில் நிற்கும் நாடும் ஜப்பான்தான். இப்படி இன்னும் பல விடயங்களில் ஜப்பான் முன்னணியி-லேயே இருக்கிறது.

இந்த ஜப்பான் என்பதை முதன் முதலில் நாம் அறிந்தது, படிக்கும் காலத்தில் வரலாற்று பாடத்தில் இந்த ஹீரோஷீமா, நாகசாஹி அணுக்குண்டு வீச்சு சம்பவத்தால்தான் என்பது உங்களுக்கு நினைவுண்டா? அதனை விட "ஜப்பான் குளத்து மீன்" அறியாதவர் இருக்க முடியுமா என்ன? சின்ன வயதுகளில் ஜப்பான் மீன் பிடித்து, குளக்கரையில் நெருப்பு மூட்டி மீனை சுட்டு சாப்பிட்ட அனுபவங்களை மீண்டும் மீண்டும் மனம் எதிர்பார்க்கும் அல்லவா? (திலாப்பியா - வடையியை என்கிற கிழக்கு ஆபிரிக்காவை சேர்ந்த மீனினம் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு நன்னீர் மீன் வளர்ப்பிற்காக ஜப்பானிய நிறுவனம் ஒன்றினால் அறிமுகப் படுத்தப் பட்டிருக்கலாம்...) பின்னர் கடந்தகாலங்களில் கொஞ்சம் இவர்கள் எமது இனப்பிரச்சனையுடனும், சமாதான ஒப்பந்த காலப்பகுதியிலுமே நாம் அடிக்கடி எமது காதுகளில் "ஜப்பான்" என்கிற பெயரை கேள்விப்-பட்டதுண்டு. ஜப்பான் என்றும், யசூசி அகாசி என்றும், சில ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்களின் இலவசங்களாலும் தான் என்றாலும் அது பொய்யில்லை.

கடந்த பகுதிகளில் ஜப்பான் பற்றி சொல்லும் பொழுது "ஜப்பான் பேரரசு" என்றுதான் சொல்லப் பட்டது. இப்பொழுது கூட அப்படித்தான். இங்கே உங்களுக்கு ஒரு சந்தேகம் எழலாம் ஜப்பான் பேரரசா? என்று. ஆம்! இன்று அவர்கள் உலக தொழில்நுட்ப சந்தையை தீர்மானிப்-பதில் பேரரசு. அணுகுண்டால் அடி வாங்க முன்னும் பேரரசுதான். பின்னும் பேரரசுதான். அந்த உலகப் போருக்கு முன் ஆயுத வளர்ச்சியிலும், மனோதிடத்திலும் பேரரசாகவே இருந்தார்கள். சீனாவின் பல பகுதிகள், தென்கிழக்காசிய நாடுகள் தொடங்கி அவுஸ்திரேலியா வரை அவர்களின் இராச்சியம் பரந்து விரிந்து இருந்தது என்றால் மிகையில்லை. அந்த நாளில் ஜப்பான், பிரிட்டன், ஜெர்மன் கண்ட அகன்ற இராச்சிய கனவுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்காவின் இன்றைய கனவுகள் ஒன்றும் அவ்வளவு பெரிதில்லை.

எப்படி என்கிறீர்களா? அமேரிக்கா இன்று உலக சந்தையை தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கவே முனைகிறது தவிர, ஏனைய நாடுகளின் நிலங்களை அபகரித்து தனது நாட்டோடு சேர்க்க முயலவில்லை. இந்த உலக சந்தையை கையகப் படுத்துதலிற்காகவே உலகப்போர்கள், பனிப்போர், வியட்நாம் போர், லத்தீன் அமெரிக்க போர்கள், வளைகுடா யுத்தம், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா இப்படி பட்டியல் நீள்கிறது என்றாலும் அமேரிக்கா - தமிழரின் இன விடுதலைப் போரிற்கு எதிரான நிலைப்பாட்டையும் எடுத்து இலங்கை அரசிற்கு தோள் தட்டிக் கொடுத்தது கூட தமது உலக சந்தை சுய லாபத்திற்காகவே என்பது அனைவரும் அறிந்ததே.




வித்தியா சாகரன், முகப்பக்கத்திலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்



## மெய்வல்லுநர் சம்பியன் சுற்றுப் போட்டி





மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு விழா 2015இல் மண்முனை வடக்கு பிரதேச செயலகமும் செங்கலடி பிரதேச செயலகமும் இணைச்சம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்கள மாகாண பணிப்பாளர் மதிவண்ணன் தலைமையில் ஆரம்பமானது.

இவ்விளையாட்டு நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கிடையில் கடந்த இரண்டு மாதங்களாக நடத்தப்பட்ட மெய்வல்லுனர் விளையாட்டு போட்டிகளில் இறுதி போட்டிக்கு தெரிவான பிரதேச செயலக விளையாட்டு வீரர்களின் இறுதி போட்டி நிகழ்வுகள் மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது

இறுதி போட்டி நிகழ்வில் 125 புள்ளிகளை பெற்ற மண்முனை வடக்கு பிரதேச செயலக அணியினரும், 125 புள்ளிகளை பெற்ற செங்கலடி பிரதேச செயலக அணியினரும் இணைந்த வெற்றி அணியினராக முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டனர்.

இரண்டாம் இடத்தினை 34 புள்ளிகளை பெற்ற வாழைச்சேனை பிரதேச செயலக அணியினரும், 34 புள்ளிகளை பெற்ற கிரான் பிரதேச செயலக அணியினரும் இணைந்த வெற்றி அணியினராக மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொண்டனர்.

## மன்னார் மாணவன் மொங்கோலியா பயணம்

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் உயர் தர மாணவன் செபஸ்ரியாம் பிள்ளை தேவராஜா கிளின்ரன் மொங்கோலியாவில் நடைபெறும் உதைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளார்.

19 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை மொங்கோலியாவில் நடைபெறவுள்ளது. இந்நிலை-யில் குறித்த மாணவன் இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணியில் தெரிவு செய்யப்பட்டு குறித்த போட்டியில் கலந்து கொள்ள மாங்கோலியா செல்லவுள்ளார். இவர் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்-படுத்தும் தமிழ் மாணவன் என்ற வகையில் தனது பாடசாலைக்கும், மன்னார் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.



இவரின் விளையாட்டுத்திறனை பாராட்டி கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீனினால் வெளிநாட்டுப் பயணத்திற்காக வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாய் பணத்தினை வடமாகாண ஏற்றுமதி அபிவிருத்தி உதவிப்பணிப்பாளர் முஜீப் ரகுமான், மன்னார் நகரசபையின் முன்னாள் உறுப்பினர் நிலாமுதீன் நகுசீன்,அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் கிங்லி சிறிகாந்தன் ஆகியோர் இணைந்து கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

## சாகசப் பயணத்தில் இந்திய வீரர்கள்

இலங்கையில் நடந்த 2வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதையடுத்து இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோலி உள்ளிட்ட வீரர்கள் கொழும்பு நகரில் முச்சக்கரவண்டியினை செலுத்தி வெற்றியினை கொண்டாடியுள்ளனர்.

முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தாலும் கொழும்பில் நடைப்பெற்ற டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியை ஹர்பஜன் முச்சக்கரவண்டி ஒன்றை வாடகைக்கு எடுத்து அதனை ஹர்பஜன் சிங் செலுத்தி அணித்தலைவர் விராட் உள்ளிட்ட வீரர்கள் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு சந்தோஷமாக கொழும்பு நகரை வலம் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சம்பியனானார் பெடரர்

சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் 7-6, 6-3 என்ற செட் கணக்கில் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சை தோற்கடித்து, இரண்டாவது தடவையாக தொடர்ச்சியாக மேற்கு மற்றும் தெற்கு பகிரங்க பட்டத்தை கைப்பற்றி விம்பிள்டன் பகிரங்க இறுதிப்போட்டியில் தோல்வியுற்றதுக்கு பழிதீர்த்துக்கொண்டார்.

இந்த வெற்றியுடன் சின்சினாட்டி பட்டத்தை ஏழாவது தடவையாக கைப்பற்றி பெடரர் சாதனை புரிந்தார். இந்த வெற்றியுடன் தனது பரமவைரியான ஜோகோவிச்சுக்கு எதிராக 21-20 என்ற வெற்றி விகிதத்தை அடைந்துள்ளார்.

இந்த தோல்வியால் ஜோகோவிச் ஒன்பது ஏடிபி மாஸ்டர்ஸ் பட்டங்களையும் கைப்பற்றும் கனவு கலைந்துள்ளது.



## கங்குலியின் சாதனை முறியடிப்பு

தென்னாபிரிக்க–நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடந்த ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்கா 2–1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. இத் தொடரில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 283 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிவிலியர்ஸ் 64 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் டிவிலியர்ஸ் புதிய மைல்கல்லை எட்டினார். இதுவரை 190 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 182 இன்னிங்ஸ்களில் களம் இறங்கியிருக்கும் டிவிலியர்ஸ் 8,045 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதன் மூலம் இந்திய முன்னாள் தலைவர் கங்குலி 200-ஆவது இன்னிங்ஸில் அடைந்த இலக்கை டிவிலியர்ஸ் முறியடித்தார்.

## சாதனை வீரரானார் – உசையன் போல்ட்



குறைந்தளவு சுவாரஸ்யம் உள்ளமையால் 2017 உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் தாம் பங்கேற்பதில் 50 வீத சாத்தியமே உள்ளதாக உலகில் அதிவேக வீரரான உசையன் போல்ட் தெரிவித்துள்ளார்.

பெய்ஜிங்கில் நடைபெற்ற 200 மீற்றர் ஓட்டத்தில் உசைய்ன் போல்ட்டிற்கு சவாலாக இருப்பார் என எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்காவின் ஜெஸ்டின் கட்லின் வெள்ளிப் பதக்கத்தையே வெற்றி கொண்டார்.

போட்டித் தூரத்தை 19 தசம் 55 செக்கன்களில் நிறைவுசெய்த இவர், 200 மீற்றர் ஓட்டத்தில் இவ்வாண்டின் சிறந்த காலப் பெறுதியை பதிவுசெய்திருந்தார். அமெரிக்காவின் ஜெஸ்டின் கட்லின் 19 தசம் 74 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவுசெய்து இரண்டாம் இடத்தைப் பிடித்தார். இந்நிலையில் 2016 ரியோ டி ஜெனைரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலும் தாம் பங்கேற்பேன் எனவும் உசைய்ன் போல்ட் கூறியுள்ளார்.

## 69வது சம்பியன் பட்டம் – செரீனா வசம்

சின்சினாட்டி மாஸ்டேர்ஸ் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை அமெரிக்காவின் முதல் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் சுவீகரித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் தரவரிசையில் மூன்றாவது இடத்திலுள்ள ரொமோனியாவின் சிமோனா ஹேலப்பை 2 க்கு பூஜ்ஜியம் என்ற நேர் செட் கணக்கில் செரீனா வில்லியம்ஸ் வெற்றிகொண்டார்.

டென்னிஸ் வரலாற்றில் தனது 69 ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை செரீனா வில்லியம்ஸ் சுவீகரித்துள்ளார்.



## 130வது வீரராக குஷல்

இலங்கை டெஸ்ட் அணியின் 130 ஆவது வீரராக குஷல் ஜனித் பெரேரா இணைத்துக் கொள்ளப்பட்டார். குஷல் ஜனித் பெரேராவுக்கு இலங்கை [illegible] முன்னாள் வீரரும் இலங்கை கிரிக்கெட் சபையின் தற்போதைய [illegible] வெத்தமுனியினால் தேசிய தொப்பி வழங்கி டெஸ்ட் அந்தஸ்த்து வழங்கி வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விக்கு வித்திட்டவர் கட்சிப் பொதுச் செயலாளரே... !!!

## அரியநேத்திரனும். செல்வராசாவும் அறிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தேர்வு செய்யப்படாத முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன் மற்றும் பொன் செல்வராசா ஆகியோர் தமது தோல்விக்குப் பெரும்பங்காற்றியது தமது கட்சியின் பொதுச் செயலரும் கிழக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சருமான துரைராஜசிங்கம் என ஊடகங்களுக்குக் கருத்துரைத்துள்ளனர்.

17

## 6வது நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம்



### "நியமனத்திற்குக் கூட்டமைப்பிற்குள் வலுக்கும் எதிர்ப்பு"

திருமலைக்கான ஆறாவது நாடாளுமன்ற உறுப்பினராகத் திரு. துரைரெட்ணசிங்கம் தேசியப் பட்டியலின் மூலமாகத் தெரிவாகியுள்ளதை அடுத்து இந்நியமனத்திற்கு எதிர்ப்புக் குரல்கள் வலுவடைந்துள்ளன.

தமிழரசுக் கட்சியின் இரண்டு தேசியப்பட்டியல் உறுப்பினர்களுள் ஒருவராகத் தெரிவாகியுள்ள துரைரெட்ணசிங்கம் மூன்றாவது தடவையாக நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே திருகோணமலை 17

## ஆதிசிவன் ஆலயத்திற்கு முன்பாகப் பெரிய புத்தசிலை வைக்க முயற்சி ???

தம்பலகாமம் ஆதிசிவன் ஆலயத்திற்கு முன்புறமாகப் பெரிய புத்தர் சிலையொன்றை நிறுவும் முயற்சிகள் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டள்ளன. தம்பலகாமம் ஆதிசிவன் ஆலயத்திற்கு மன்பாக ஏற்கனவேயுள்ள சிறிய அளவிலான புத்தர் சிலையை அகற்றிவிட்டு பெரிய அளவிலான புத்தர் சிலையொன்றை நிறுவும் மயற்சியில் அரசியல் பின்னணியுள்ள பெண் ஒருவரும் 98ம் கட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த பிக்கு ஒருவரும் யற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது. அவர்களுக்கு தம்பலகாமத்தைச் சேர்ந்த இரண்டு தமிழர்களும் தமது சொந்தத் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்காக உதவி 17



23.05.2015ல் தம்பலகாமம் சுற்றுவட்டம்



படங்கள் - கதிரவன்

27.08.2015ல் தம்பலகாமம் சுற்றுவட்டம்

தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்

**தனித்தேசம் என்பது தனிநாடல்ல ஒரு நாட்டுக்குள் இருக்கும் சுயநிர்ணய உரிமை கொண்ட தாயகப் பிரதேசம், தேசம் ஆகும்**

## சர்வதேசக் காணாமற் போனோர் தினம் ஆகஸ்ட் 30

சர்வதேசக் காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் எதிர்வரும் 30ம் திகதி நினைவு கூறப்படவுள்ள நிலையில் இலங்கையில் காணாமல் ஆக்கப் படுதல் தொடர்- வதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை இட்டுள்ளது

1990ம் ஆண்டு முதல் காணாமல் போதல்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக் குழுக்கள் நிறுவப் பட்ட போதிலும், ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதில்லை எனவும் சபை குறிப்பிட்டு உள்ளது.

அத்துடன், குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிலர் உயர் பதவிகளை வகித்து வருவதாகவும், யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்திலும் காணாமல் போதல் சம்பவங்கள் நீடித்து வருவதாகவும், சர்வதேச மன்னிப்புச் சபை தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

AMNESTY INTERNATIONAL

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி,
திருகோணமலை.
0777 555 738

## கிழக்கில் படைப் பயிற்சி



இலங்கையில் இடம்பெறவுள்ள 2015 நீர்க்காக்கை இராணுவ பயிற்சி நடவடிக்கைகளில் இந்தியாவும் சீனாவும் பங்கேற்கவுள்ளன. இந்த பயிற்சிகளில் வெளிநாடுகளின் சுமார் 2000 முப்படைவீரர்களும் பங்கேற்கவுள்ளனர்.

புல்மோட்டை முதல் வடக்கு அருகம்பை வரையிலான பிரதேசத்தில் முதல் கட்ட பயிற்சிகள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன.

இந்தியா சீனாவை தவிர, இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் வீரர்கள் இந்த பயிற்சிகளில் பங்கேற்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காடுகள் சார்ந்த இடங்களை மையமாகக்கொண்டு இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 29.08.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org